ஜூலை 2025

# ஞானம்

## கலை இலக்கியச் சஞ்சிகை

302



விலை
ரூபா 100/=

பகிர்தலின் மூலம் விரிவும் ஆழமும் பெறுவது ஞானம் !

# ஞானம்
கலை இலக்கியச் சஞ்சிகை

வெள்ளத்தின் பெருக்கைப்போல் கலைப்பெருக்கும்
கவிப்பெருக்கும் மேவுமாயின்,
பள்ளத்தில் வீழ்ந்திருக்கும் குருடரெல்லாம்
விழிபெற்றுப் பதவிகொள்வர்.

302

ஒளி : 26 சுடர் : 02

ஸ்தாபகர், ஆலோசகர் : தி. ஞானசேகரன்

ஆசிரியர் : ஞானம் பாலச்சந்திரன்
இணை ஆசிரியர் : ஞானம் ஞானலக்ஷ்மி
ஓவியர் : கிறிஸ்டி நல்லரெத்தினம்

ஞானம் பதிப்பகம்
3B, 46ஆவது ஒழுங்கை, கொழும்பு 6. இலங்கை
தொலைபேசி: + 94 11 258 6013
+ 94 71 736 2862
மின்னஞ்சல்: editor@gnanam.info

சந்தா விபரம் : இலங்கை Rs. 1500/=
வெளிநாட்டுச் சந்தா $ 100
(தபால் செலவு உட்பட)

வங்கி விபரம்
G. BALACHANDRAN
Acc. No. - 009020348846
Hatton National Bank,
Wellawatha Branch.
Swift Code : HBLILKLX


## இதழினுள்ளே.....

### கவிதைகள்


- ஷெல்லிதாசன் 04
- கவிஞர் அன்பழகி 10
- வில்வராசன் 16
- காரைக்கவி 19
- கலாதினி பா.முருகானந்தன் 19
- குப்பிளான் குமரன் 23
- டாக்டர்.பிரசன்ன குமார் / மோஹபத்ரா - இந்தியா/ அன்னலட்சுமி இராஜதுரை 25
- ஜின்னாஹ் 27
- நிலவூர்ச் சித்திரவேல் 33
- பாஞ்சாலன் 34
- சமரபாகு சீனா உதயகுமார் 42


### கட்டுரைகள்


- பேராசிரியர் சபா ஜெயராசா 02
- C.மகாலிங்கம் 11
- பா.கிருபாலினி 20
- கௌசி 38


### பத்தி


- பேராசிரியர் துரை. மனோகரன் 45


### சிறுகதைகள்


- நயன் ரஹ்மான்/சொப்னம் நதியா / சு.முரளிதரன் 05
- சி.மௌனகுரு 13
- J.A. றஜீவ் 29
- ஏ.ஏ.ஹெச்.கே.கோரி 35
- சுந்தரி மணியன் 43


### வாசகர் பேசுகிறார்


- பேராசிரியர் துரை. மனோகரன் 47


பகிர்தலின் மூலம்
விரிவும் ஆழமும் பெறுவது ஞானம் !


- ஞானம் சஞ்சிகையில் பிரசுரமாகும் படைப்புகளின் கருத்துகளுக்கு அவற்றை எழுதிய ஆசிரியர்களே பொறுப்பானவர்கள்.
- புனைபெயரில் எழுதுபவர்கள் தமது சொந்தப் பெயர், தொலைபேசி எண், முகவரி ஆகியவற்றை வேறாக இணைத்தல்வேண்டும்.
- பிரசுரத்திற்குத் தேர்வாகும் படைப்புகளைச் செவ்வைப்படுத்த ஆசிரியருக்கு உரிமையுண்டு.
- படைப்புகள் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு மின்னஞ்சலில் அனுப்பப்படவேண்டும்.
- ஞானம் சஞ்சிகையானது பொதுவெளி (Public Domain) பதிப்புரிமையை உடையது.

# ஆசிரியர் பக்கம்...




## அனைவருக்கும் அன்பு வணக்கம் !

**நாதம் ஓய்ந்தது...!**

வாழ்நாள் ***பேராசிரியர் சி. தில்லைநாதன்*** அவர்கள், விரிவுரையாளர், சிந்தனையாளர், ஆய்வாளர், இலக்கியப் படைப்பாளி, பத்திரிகையாளர், தேசிய பாடத்திட்ட வரைவறிஞர், ஆலோசகர், இடதுசாரி கொள்கையாளர் எனப் பல்துறைகளில் இயங்கியவர். யாழ்ப்பாணத்தில் சுன்னாகத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட பேராசிரியரின் மறைவு (12–06–2025), தமிழுலகத்தை துயரத்தில் ஆழ்த்தியுள்ளது.

பேராசிரியர் அவர்கள், தமிழ் இலக்கியத்தின் வளர்ச்சிக்குப் பங்காற்றியுள்ளமை மட்டுமன்றி, ஈழத்து இலக்கியத்தைச் செம்மைப்படுத்துவதிலும், இஸ்லாமிய இலக்கியப் படைப்புகளை அடையாளப்படுத்துவதிலும், மலையக இலக்கியம் சார்ந்த ஆழமான பார்வைகளை முன்வைப்பதிலும் முனைப்புடன் இயங்கியவர்.

1964ஆம் வருடம் தொடங்கி தமிழ் விரிவுரையாளர் பணியில் தம்மை ஈடுபடுத்திக்கொண்ட பேராசிரியர், பல வருடங்களாகத் தமிழ்த்துறைத் தலைவராக பதவி வகித்து, பல்கலைக்கழக புலமைமரபை ஆற்றுப்படுத்தியுள்ளார். “வள்ளுவன் முதல் பாரதிதாசன் வரை” எனும் தமது நூலின் வாயிலாக, இரண்டாயிரம் வருடங்களுக்கும் மேற்பட்ட தமிழ்ப் பரப்பில் பார்வையைச் செலுத்தி, கவனத்துக்குரிய தமிழ் ஆளுமையாளர்களை வெளிச்சம்போட்டுக் காட்டியவர். மரபு – நவீன இலக்கியங்கள் இரண்டிலும் தமது சிந்தனையைச் ***சரிநிகராகச் செலுத்தி***, ***தமிழின் தொடர்ச்சியை*** ஆய்வுப்பரப்பில் வலியுறுத்தியவர். இவரின் பணிகள், விரிப்பின் பெருகும்.

பேராசிரியர் சி. தில்லைநாதன் அவர்கள், பேராதனைப் பல்கலைக்கழகத்தின் தமிழ்த் துறைத் தலைவராகப் பணியாற்றிய காலத்தில் ***ஞானம் சஞ்சிகை*** கண்டியிலிருந்து வெளிவரத் தொடங்கியது. சஞ்சிகையைத் தொடங்குதல் பற்றிய ஆலோசனைகளைத் தெரியப்படுத்தி, வாழ்த்து தெரிவித்து, வழிகாட்டியவர்களுள் குறிப்பிட்டுக் கூறப்படவேண்டியவர். சஞ்சிகை தொடங்கிய காலம் தொட்டு, ஆக்கபூர்வமான கருத்துகளைத் தொடர்ந்தும் தெரிவித்ததுடன் பல விழாக்களுக்குத் தலைமையேற்று வழிகாட்டியவர். 2018ஆம் வருடம், அப்துல் காதிர் புலவருக்கான நூற்றாண்டுச் சிறப்பிதழை வெளிக்கொணரும் முயற்சியில் ஈடுபட்டிருந்தபோது, புலவரின் சில நூல்களை எமக்கு வைத்துக்கொள்ளும்படி தந்து, வெளியீட்டு விழாவிலும் தலைமை தாங்கி ஞானம் சஞ்சிகையைப் பெருமைப்படுத்தியவர்.

ஞானம் சஞ்சிகை, பேராசிரியருக்கு என்றும் நன்றி பாராட்டும். இருப்பினும் முதலாம் இதழ் தொடங்கி தமது இறுதிக்காலம்வரை ஞானம் சஞ்சிகைக்கு சந்தா செலுத்தியமை பெருமகனாரின் தனிமனிதப் பண்பை பறைசாற்றுகிறது. அருமையான பரந்த உள்ளம் கொண்டவர்.

பேராசிரியரின் பல்கலைக்கழக பணி ஓய்வு நிகழ்வுக்கு ஞானம் சஞ்சிகை ஆசிரியர் தி. ஞானசேகரன் தலைமை வகித்தமை, தம்மை பல்கலைக்கழக வரையறைக்குள் நிறுத்திக் கொள்ளாமல் ***தாமாக முன்வந்து தமிழ்ச் சமூகத்தையும் பல்கலைக்கழகச் சமூகத்துடன் இணைத்துக்கொண்டமைக்கு*** ஓர் எடுத்துக்காட்டாகும்.

நாதம் ஓய்ந்தது...!

# எதிர்வெளிமை என்ற கலை நுட்பியல்



சபா ஜெயராசா

**எதிர்வெளிமை** (Nagative space) என்பது உளவியல் ஆழ்ந்த தேடற் பொருளாகின்றது. நாம் எவ்வற்றைச் சிந்திக்கின்றோம், எவற்றை உணர்கின்றோம். எவற்றுக்குக்கு எதிர்வினை களை வெளிப்படுத்துகின்றோம், என்பவற்றை மேலும் துளாவி நோக்குவதற்கு "எதிர்வெளிமை" துணை செய்வதாக உளவியலாளர் குறிப்பிடு கின்றனர். அது, கலை இலக்கிய ஆக்க நுண் உபாயமாகவும் எழுச்சி பெற்றுள்ளது.

நாங்கள் பார்க்காத இடமும் நோக்காத புலமும், கைவிடப்பட்ட காட்சியும் எதிர்வெளிமை யாகின்றன. அவற்றைக் கையாளுவதில் மூளை மாற்று விதமாகச் செயற்படுவதாக சூழலியல் உளவியலாளர் குறிப்பிடுவர்.

மனத்தெளிவு நிறைவுக்கு (Mind Fulness) உரிய பாதையை அல்லது வழியை எதிர் வெளிமை அமைத்துக் கொடுக்கின்றது. "மனத்தெளிவு நிறைவு" என்பது ஓர் அறிகைத் திறனாகும். அது தியானத்தால் வளர்த்தெடுக் கப்படுகின்றது. குறித்த நேரத்தில் மனம் எவ்வாறு தொழிற்பட்டுக்கொண்டு இருக்கின்றது என்ற ஆழ்ந்த உணர்வை மனத்தெளிவு நிறைவு ஏற்படுத்துகின்றது. தியானப் பயிற்சியினால் அந்த நிலையை ஏற்படுத்திக் கொள்ளலாம்.

**மனத்தெளிவு நிறைவு** பல்வேறு செயல் நலன்களைத் தரும் என்று குறிப்பிடப்படுகிறது. அறிகைத் திறனை மேம்படுத்தல், மூளையைத் தளர்விலா நிலைக்கு வைத்திருத்தல், உள நெருக்கீடு, பதகளிப்புக் குழப்பம் ஆகிய வற்றைத் தணிப்பதற்கு உதவுதல், உடல் நோவைத் தளர்த்தத் துணைசெய்தல், நோய் எதிர்ப்புத்திறனை ஏற்படுத்தல், நித்திரைக் குழப்பத்தைத் தடுத்தல், வாழ்க்கைப் பண்பை உயர்வடையச் செய்தல், முதலாம் நேர்விளைவு களை அது ஏற்படுத்தித்தரவல்லது.

உள்ளத்தின் எதிர் வெளிமை பற்றி ஆழ்ந்து நோக்கியவர்களுள் **முழுமைப்புல** (Gestalt) உளவியலாளர் முதலிற் குறிப்பிடத்தக்கவர்கள். பொருள்களுள் மற்றும் காட்சிகளுக்கு இடை யிலான எதிர்வெளிமையை நிரப்பி மனத்தில் முழுமையாகக் காட்சி கொள்ளும் திறன் மனிதரின் உயிர் இயல்போடு இணைந்த உள் ளார்ந்த ஆற்றல் என்று முழுமைப்புல உள வியலாளர் குறிப்பிடுவர்.

"எதிர்வெளிமை" என்பது மீளா எதிர்ப்புக் கொண்டதன்று. அது நலன்தரும் இயல்புகளைக் கொண்டது. ஜப்பானியர் எதிர்வெளிமையை "ம" (ma) என்ற கருத்து வடிவத்தால் அழைப்பர். நிலத்தோற்ற அழகில் நேர்வெளிமைக்கு அழ கேற்றம் செய்ய எதிர்வெளிமை துணை செய்யும் என்பது அவர்களின் முடிவு. கண் களுக்கும் மனத்துக்கும் அது ஓய்வு தருவதாகக் குறிப்பிடப்படுகிறது.

எதிர்வெளிமைச் சிந்தனை தமிழ் மரபிலும் இடம் பெற்றிருந்தமைக்குச் சான்றுகள் உள்ளன. **"இடம்படவீடடேல்"** என்ற முதுமொழி. தமிழ் மரபில் இடம் பெற்ற எதிர்வெளிமை உளவியல் சிந்தனையை வெளிப்படுத்தும் கட்டட அமைப் பில் பயன்படுத்தாது விடப்பட்ட பகுதியே எதிர் வெளிமையாகின்றது.

அச்சுக் கலையில் எதிர்வெளிமையின் முக்கியத்துவத்தை வலியுறுத்திய தினகரன் இதழ் ஆசிரியர் **பேராசிரியர் க. கைலாசபதி**, "மூச்சு விடுவதற்கு இடம் விடவேண்டும்" என்று குறிப்பிட்டதாகச் சொல்லப்படுகிறது. எதிர் வெளிமை என்பது "கண்களுக்கு ஓய்வுதரும் இடம்" என்ற நிலையில் அது நலன் தரும் ஓய்வுப் பரப்பாக அமையும்.

அது கண்களுக்கு ஓய்வுதரும் சுகமாகவும் சிந்தனைப் பின்னலை வளர்ப்பதற்குரிய களமாகவும், ஓவியம் மற்றும் வடிவமைப்புக் கலையிலே வலியுறுத்தப்படுகிறது.

காட்சிப் பொருள்களுக்கு இடையிலான இடைவெளி எதிர்வெளிமை என்று குறிப்பிடப் படும். தலையாய பொருளையும் அழகையும் வெளிப்படுத்த அது துணை செய்யும். ஓவியத்தில் தீட்டலுக்குரிய பகுதியாக அது அமையாத நிலையில் இருந்தாலும் வனைவுப் பரப்புக்கு அழகும் வலும் தருதல் அதற்குரிய சிறப்புப் பண்பு, காண்பியக் கருத்தாடலுக்கு வளமும் வலுவும் சேர்ப்பதாக அது அமையும்.

வரைந்த பகுதி மட்டுமன்றி வரையாத பகுதியும் ஓவியத்துக்கு உயிர் கொடுக்கின்றது. ஓவியத்தின் வழியாகச் செய்தியைச் சுமந்து செல்வதற்கு துணைசெய்கிறது. வரைபை முன்னே நகர்த்தி வருவதற்கு எதிர்வெளிமை துணை செய்கின்றது. வரைபு முன்னே வர எதிர்வெளிமை பின்னே செல்லும். எதிர் வெளிமை முன்னே வர, வரைபு பின்னே செல்லும். இரண்டுக்குமிடையே உள்ளார்ந்த இடைத் தொடர்புகள் உண்டு. அதேவேளை ஊடு விளையாட்டும் *(Interplay)* உண்டு.

ஓவியத்தில் கண்மாயை *(Optical Illusion)* என்ற விளைவை உருவாக்குவதற்கும் அந்த நுட்பம் பயன்படுத்தப்படுகிறது.

நவீன ஓவியத்தில் ஓவியப் பேச்சுக்கும் ஓவிய மௌனத்துக்குமிடையே அது உரை யாடலை ஏற்படுத்துகின்றது. பார்வைக்கு வந்த தற்கும் பார்வைக்கு வராததற்குமிடையே கதை யாடலை வருவிக்கின்றது.

ஓவியக் கலையில் மட்டுமன்றி கட்புலக் கலைகள் அனைத்திலும் விளைவையும், அழ கேற்றத்தையும், சுவைப்பையும் நிகழ்த்துவதற்கு அந்த நுட்பியல் பயன்படுத்தப்படுகிறது. கட்டடக் கலைஞர்கள் எதிர்வெளிமையோடு விளையாட்டு நிகழ்த்துபவர்களாகக் குறிப் பிடப்படுகின்றனர்.

ஒளிப்படம் மற்றும் திரைப்படக் கலையில் ஒளிப்படக் கருவியால் **குவி நிலைக்கு** உட்படுத் தப்படாத வெளி எதிர்வெளிமையாகின்றது. குவிநிலைக் காட்சிக்குப் பொருண்மைப் பொலிவைக் கொடுப்பதில் அதற்குச் சிறப்புப் பங்கு உண்டு. ஆழ்ந்த மனவெழுச்சியைத் தூண்டி விடுவதற்கு உரிய அழுத்தத்தையும் கொடுக்கும். புதிய கருத்தாடலுக்கும் துணை நிற்கும்.

சமநிலையையும் ஒத்திசைவையும் ஏற் படுத்தல், காட்சிக் கனதியை *(Visual Weight)* உருவாக்குவதல், சுவையை உருவாக்கும் சமநிலையை அல்லது சமநிலைப் பிறழ்வைத் தோற்றுவித்தல், முதலியவற்றுக்கு எதிர்வெளிமை துணை செய்கின்றது.

ஆடலில் உடலும் அசைவும் நிகழ்த்தும் புலம் நேர்வெளிமையாகவும் ஏனையவை எதிர்வெளிமையாகவும் கருதப்படும். வேறொரு விளக்கமும் இத்துறையில் உண்டு. பிரதான ஆடற்கலைஞர் நிகழ்த்தும் சூழல் நேர் வெளிமை யாகவும், இணைந்த ஆடலார் அதே நேரத்தில் மேற்கொள்ளும் அளிக்கை எதிர்வெளிமை யாகவும் உள்ளடக்கப்படுகின்றது.

ஆடலோடு தொடர்புடைய நடப்புநிலை, உணர்வுகளுக்கும் நனிவிலி நிலை உணர்வு களுக்கும் இடையேயுள்ள பரப்புடனான உரையாடலை நிகழ்த்துவதற்கு அது துணை செய்யும் என்று குறிப்பிடப்படுகிறது. உளப்பகுப்பு உளவியலை அடியொற்றி அந்த அனுபவம் முன்வைக்கப்பட்டுள்ளது.

இசையில் எதிர்வெளிமைச் செயற்பாடு இசை வழங்கும் மனவெழுச்சிக் கிளர் நிலையை மேம்படுத்துவதற்குத் துணை செய்வதாகக் குறிப்பிடப்படுகிறது.

பாடுவதை நிறுத்தும் ஒரு துளி மௌனமும் எதிர்வெளிமையாகின்றது. நவின பொப் இசையில் இசை நடுவில் பாடலை நிறுத்தி, ஆடலை மேற்கொள்வதும் ஒளிவடிவக் காட்சிகளை மேற்கொள்ளலும் எதிர்வெளிமை வழியான வலுவூட்டல்களாகின்றன.

கருநாடக இசையில் இராகம், தானம், பல்லவி பாடி முடிக்கப்பட்டபின் ***தனி ஆவர்த் தனம்*** நிகழ்த்தப்படுகிறது. வாய்ப்பாட்டு மௌ னித்தலும் கருவி இசை மேலெழுவதும் அங்கு நிகழ்கின்றது. கோட்பாட்டு நிலை யிலும் அனுபவ நிலையிலும் அது எதிர்வெளிமை யாகின்றது. அதனை மேலும் வலியுறுத்தி அதற்குத் ,'தனி' 'தனி' என்பது தனித்துச் செயற் படுவதாகும்.

கருவிகளின் ஒன்றிணைந்த வாசிப்பின் உச்சக்கட்டத்தில் பாடகர் முதல் வரியைப் பாடி ஆவர்த்தனத்தை நிறைவு செய்வார். ஒன்று முன்னெழ மற்றையது பின்னே செல்லல் அல்லது மௌனித்தல் எதிர்வெளிமையோடு இணைந்த மனவெழுச்சிக்கு நீடு செறிவை ஏற்படுத்துகின்றது.

எழுத்து வழியான இலக்கியங்களில் அந்த நுட்பம் நீண்ட காலமாகப் பயன்பாட்டில் உண்டு.

காவியங்களில் கதை நீட்சித் தொடர்ச்சியோடு நேரடியான தொடர்பு இன்றி, நாட்டு வருணனை, நகர வருணனை முதலியவை இடம்பெறுகின்றன. கிளைக்கதைகள் சொருகப் படுகின்றன. அந்த எதிர்வெளிமை நுட்பம் பிரதான கதையாடலின் கருத்துக் கையளிப்புக்கும், மனவெழுச்சி ஊன்றலுக்கும் துணை செய்யும் இடைவெளியாகின்றது.

புனைவில் பிரதான கதைப்பொருள் மீதான கவனத்துக்கு வலுவூட்டும் செயற்பாட்டை அது உருவாக்குகின்றது. அதாவது, நேர் வெளிமைத் திருப்பத்தை ஏற்படுத்துகின்றது. இக்கருத்து முழுமைப் புலஉளவியலிலும் வலியுறுத் தப்படுகிறது. நேர்வெளிமை (Positivespace) எதிர்ப்பின் வழி எழுகின்றது.

“மறுப்பின் மறுப்பு”, “எதிர்ப்பின் எதிர்ப்பு” முதலான உரையாடல்கள் இயங்கியல் திறனாய்வில் முன்வைக்கப்படுகின்றன. மார்க்சியம் இக்கருத்தை மேலும் தெளிவு படுத்துகின்றது. ஒடுக்குமறை என்பது எதிர்ப்பின் வடிவம். அதற்கு எதிரான எதிர்ப்பை ஒடுக்கப்படுவோர் வெளிப்படுத்துவது, ***எதிர்ப்பின் எதிர்ப்பு*** ஆகின்றது. எதிர்ப்பின் எதிர்ப்பு நலனையே விளைவிக்கின்றது. ஆங்கிலத்தில் அது (Negation of the Negation) என்று குறிப்பிடப்படும்.

புனைகதையில் தொடர்ச்சியான நிகழ்ச்சிகளுக்கு இடையே அமைக்கப் பெறும் இடைவெளி எதிர்வெளிமையாகின்றது. கதையால் வளர்க்கப்படும் பதற்றம் மேலும் செறிவும் எதிர்பார்பும் பெறுவதற்கு அது இடமளிக்கின்றது. கலைத்திறனாய்வில் முன்வைக்கப்படும் “எதிர்வெளிமை” என்ற கருத்து வடிவம் பிரயோகத் திறனாய்வுக்கு மேலும் வலுவூட்டுகின்றது.

❍❍❍

## விதைப்பும் அறுவடையும்.....!

– செல்லிதாசன்

ஆசை ஆசை யாரை விட்டது
அதிக ஆசையால்...
ஓசைப்படாமல்
அவலங்களோ
தொடர்ந்து வந்தன..!

ஊர்களின் சொத்துக்களை
உங்கள் சொத்துக்களாக்கி
உனக்கு எனக்கென்று
பங்கு பிரித்து
ஏழு பரம்பரைக்கும்
சொத்துக்கள் சேர்த்தீர்.
எம்மையெல்லாம்....
பார்ப்பார் கேட்பார்
எவரடா இங்குண்டு என
மமதையும் கொண்டு
ஊர்வலம் வந்தீர்.

என்னடா ஒரு கேடு
இப்படியும் ஓர் நிலை
கனவிலும் நினையா விதத்தில்,
காலத்தின் சுழற்சி
திகைக்க வைக்குது பலரை
திணறவைக்குது..!

தங்கக் கிண்ணத்தில்
மதுவும் அருந்தினீர்
வெள்ளிக் கோப்பையில்
உணவுண்டு களித்தீர்
விருந்து வேடிக்கை விழாக்களென
ஐந்து நட்சத்திர விடுதியில்
சுகித்தும் கிடந்தீர்.
கண்ணியம் வாய்ந்த கனவான்களாக
முகமூடியணிந்து காட்சியும் கொடுத்தீர்...!

போச்சு போச்சு எல்லாமே போச்சு என
புலம்பும் காலமும் கண்முன்னே வந்து
சம்பலும் சோற்றையும்
வரிசையில் நின்று
வாங்கி உண்டு தரையிலே உறங்கும்
காலமும் வந்து
பாடமும் தந்தது...!

ஆசை ஆசை யாரை விட்டது
அவலங்களுக்கு முகவுரை தந்தது.
முற்பகல் செய்ததை
அறுவடை செய்யும்
காட்சியும் விரியுது
உங்களைப் பார்த்து இன்று
உலகமே சிரிக்குது....!

- நயன் ரஹ்மான்




ஒன்பது மணி ஆகிவிட்டது. இன்னும் பதினைந்து நிமிடங்கள் கடக்கவேண்டும்.

ருனு ஒரு நிமிடமும் இவ்வளவு நீளமாக இருப்பதை ஒருக்காலும் உணர்ந்ததில்லை.

ஸானு பொறுமையிழந்து கொண்டிருந்தாள். சீக்கிரம் வா அக்கா. நாங்கள் அங்கு செல்வதற்கு முன் நிகழ்ச்சி தொடங்கிவிடும்.

சகோதரிகள் இருவரும் ஒரே கல்லூரியில் படித்து வருகின்றனர். தங்கையான ஸானு, இந்த வருடம் தற்போதுதான் கல்லூரியில் சேர்ந்திருந்தாள், அதனால்தான் இந்த கல்லூரியில் அவள் மிகவும் ஈடுபாடுடையவளாக இருந்தாள்.

ருனு தன் கைக்கடிகாரத்தைப் பார்த்துக் கொண்டே இருந்தாள். அவள் கலந்தாலோசித்த ஜோதிடர், அவள் பிறந்த தேதி மற்றும் நேரம் உட்பட பல கணக்கீடுகளைச் செய்த பிறகு அவளிடம் ஒன்பது பதினைந்து என்று அவளுக்கு ஒரு சுபநேரம் சொல்லியிருந்தார். சரியாக ஒன்பது பதினைந்து மணிக்கு வீட்டை விட்டு வெளியேறினால், நினைத்த காரியத்தில் வெற்றி கிடைக்கும் என்றிருந்தார்.

அந்த கணிப்புக்காக புதிய நூறு டாக்கா தாளைக் கொடுத்திருந்தாள். அவரிடமிருந்து ஒரு தாயத்தும் வாங்கியிருந்தாள். தான் சிக்கலில் இருக்கிறேன் என்று அவள் அவரிடம் சொல்லியிருந்தாள். மோசமான பிரச்சனை சூழ்ந்திருந்தது.

ருனு சரியாக ஒன்பது பதினைந்து மணிக்கு வீட்டை விட்டு புறப்பட்டாள். ஸானுவுடன் ரிக்ஷாவில் ஏறினாள். ஓடும் ரிக்ஷாவிலிருந்தவாறே ஒருமுறை திரும்பி வீட்டைப் பார்த்தாள். தந்தைக்கு கடந்த இரண்டு நாட்களாக உடல்நிலை சரியில்லை. டாக்டர் வந்து அவருக்கு சேலைன் ஏற்றிவிட்டு மருந்துக்கும் ஆர்டர் செய்திருந்தார். இன்று அவருக்கு ஓரளவு பரவாயில்லை. கிளம்பும் முன் ருனு அவருடைய மதிய உணவிற்கு கொஞ்சம் அரிசி கஞ்சி சமைத்து வைத்திருந்தாள். படுக்கையிலிருக்கும் அவருடைய மதிய உணவை வழங்கவும் மருந்தை கொடுக்கவும் அவள் இரண்டு மணிக்குள் வீடு திரும்ப வேண்டும். ருனுவின் அம்மா சில நாட்களாக தனது அண்ணன் வீட்டில் இருக்கின்றாள். உடம்பு சரியில்லா ருனுவின் பாட்டியை அவள் கவனித்துக் கொண்டிருக்கின்றாள். ஓரிரு நாட்களில் திரும்பி வருவதாக என்று தந்தி அனுப்பப்பட்டிருந்தது.

ருனு ஸானுவை அவளின் தோழிகள் இருந்த கல்லூரியில் நிகழ்ச்சி நடக்கும்



தமிழில்
சு.முரளிதரன்

மண்டபத்தில் விட்டாள். சித்திரை வானத்தின் இரக்கமற்ற ஒளியில் அவள் தனியாக வெளியே வந்தாள், ருனு அவள் கைகளில் வைத்திருந்த ஒருக்கட்டு தாள்களை இறுக்கமாகப் பிடித்தாள் - அவளுடைய வகுப்பறையில் எழுதப்பட்டக் குறிப்புகள். இன்று அவளின் கல்லூரி கடைசி நாள். அது அவளுடைய அப்பாவுக்குத் தெரி யாது. அவளுடைய அம்மாவுக்கும் தெரிய வாய்ப்பில்லை. ஸானுவுக்கும் கூட தெரியாது.

ருனு சிறிது நேரம் கல்லூரியைச் சுற்றி வெறித்தனமாக நடந்து கொண்டிருந்தாள். பின்னர் ரிக்சா ஒன்றில ஏறி டாக்காவின் கம்லாபூர் ரயில் நிலையத்திற்கு சென்றாள்.

அவள் இன்று கல்லூரி சீருடையை அணிய வில்லை. துப்பட்டாவால் தலையைச் சுற்றிக் கொணடு அவள் மனதிற்குள் மௌனமாக பிரார்த்தனை ஜெபங்களைச் உச்சரித்துக் கொண்டாள்.

ருனு இப்போது ஒரு ரயில் பெட்டியில் அமர்ந் திருந்தாள். கர்ணபுலி எக்ஸ்பிரஸ் மிக வேகமாக சென்று கொண்டிருந்தது. வெளியே மரங்களையும் வீடுகளையும் வெயிலில் சுட் டெரிப்பதையும் அவளால் பார்க்க முடிந்தது. ருனு ஜன்னல் வழியே பார்த்தபடி அமர்ந் திருந்தாள், தன் முன் வரிசையாக நின்றிருந்த ஆண்களின் கூட்டத்தை தவிர்க்க முகம் திருப்பிக் கொண்டாள்.

தந்தையை நினைத்து இமைகள் படபடக்க, ருனு் கண்களை சிமிட்டிக் கொண்டிருந்தாள். இப்போது அவளின் தந்தை அடிக்கடி கடி காரத்தைப் பார்க்கத் தொடங்குவார். அவள் வருவது தாமதமாவது குறித்து யோசித்துக் கொண்டிருப்பார். ஸானு தனியாக வீடு திரும்பியதைப் பார்த்து முதலில் ஆச்சரியப் படுவார். அதன் பிறகு அவர் கவலைப்படத் தொடங்குவார். அதன் பிறகு?

இப்படி வீட்டை விட்டு வெளியேற நேரிடும் என்று ருனு நினைத்துப் பார்த்ததில்லை. இரண்டு நாட்களுக்கு முன்புதான் கிளம்ப முடிவு செய்திருந்தாள். ஒரு மாதத்திற்கு முன்பு பிந்து அவளைப் பார்க்க வந்திருந்தான். இனிமேல் இப்படி வர முடியாது என்று கூறி யிருந்தான். தான் உண்மையில் கொஞ்சம் சிக்கலில் இருக்கிறேன் என்று அவளிடம் சொல்லியிருந்தான். ருனு அவனுடைய பிரச் சனையைக் கேட்டாள்.

பிந்து மிகவும் கெட்ட குணமுள்ள பையன். அவனது நண்பர்கள் இன்னும் மோச மானவர்களாக இருந்தனர். அவன் தனது நண்பர்களுடன் சேர்ந்து இரண்டு கொலை வழக்குகளில் சம்பந்தப்பட்டுள்ளான். எந்த காரணமும் இல்லாமல் அவர்கள் ஒரு கடை முதலாளியைக் கொன்றிருந்தனர். அவர்களின் இரண்டாவது இலக்கானவர் ஒரு சாதாரண பொது மருத்துவர். பிந்துவின் நண்பன் ஒருவன் மருத்துவர் ஒருவர் மகளுடன் காதல் கொண்டிருந்தான். இவர்களது விவகாரத்தை அறிந்த மருத்துவர், பிந்துவின் நண்பனுடன் முரண்டுபட்டு கொஞ்சம் முரட்டுத்தனமாக நடந்து கொண்டார். அதனால் அவரைக் கொன்றார்கள். இதையெல்லாம் கேட்ட ருனுவுக்கு திகைப்பாக இருந்தது. இந்தமுறை தன் அம்மாவை ஏமாற்ற முடியாது என்று அவளுக்குத் தெரியும். அதுவும் அம்மாவுக்குத் தெரிந்தால், தன் மகளை பிந்துவைப் போன்ற ஒரு பையனுக்குத் திருமணம் செய்து கொடுக்க அவள் ஒருபோதும் சம்மதிக்க மாட்டாள். அதைவிட அவள் தனது மகள் இறந்துவிட்டதைப் பார்க்க விரும்புவாள்.

ருனு சாக விரும்பவில்லை. வாழ்க்கை மிகவும் விலைமதிப்பற்றது, பிந்து அதனை விட விலைமதிப்பற்றவன். அவனது அன்பின் அர வணைப்பின் நினைவு அவளுடன் இருக்கும் போது மரணத்தை நினைத்துப் பார்க்கவே முடியாது.

ரயிலின் அசைவும், வெக்கையும், வியர்வை நாற்றமும் அவளை குமட்ட வைத்துக் கொண்டிருந்தது. அவள் கழிவறைக்குச் செல்ல வேண்டியிருந்தது. ஆனால் அவளுடைய வழியைத் தடுக்கும் மனிதர்களின் திடமான சுவரை அவள் எப்படித் தள்ளமுடியும்? ஜன்னலுக்கு வெளியே தலையை வைத்து பார்வையை எறிந்தாள். அவள் அருகில் அமர்ந்திருந்த பெண் கழிவறைக்குச் செல்ல அவளுக்கு உதவினாள். அவள் முகத்தையும் கைகளையும் கழுவி ஆசுவாசம் கொண்டாள். என்றாலும் அவளால் மீண்டும் ஒருமுறை வாந்தியெடுக்க வேண்டி வந்தது, அவள் உள்ளம் அவளது உடலை வெளியே தள்ள முயற்சிப்பது போல் அவள் உடல் துடித்தது.

ருனு தன் இருக்கைக்குத் திரும்பினாள், கூட்டம் அவளை நசுக்கியது. அவள் கண்கள் அவள் எதிரே நின்றிருந்த ஒரு

மனிதனின் கண்களை சந்தித்தன. அவன் நிர்ச்சலன விழிகளால் அவளை பார்த்துக் கொண்டிருந்தான். அவன் பார்வை அவள் உடலை மெல்லிய துண்டுகளாக வெட்டுவது போல இருந்தது.

கம்பார்ட்மெண்டில் அவன்தான் உயரமான மனிதன். மெல்லியவனாகவும் இருந்தான். அவன் யார்? ஒரு பிக்பாக்கெட்காரனா? ஒரு மோசடி பேர்வழியா? ஒரு மஸ்தானா? ருனு முகத்தைத் திருப்பிக் கொண்டாள். அவள் கழுத்தில் வெள்ளிச் சங்கிலியில் தொங்கிக் கொண்டிருந்த தாயத்தைக் தூக்கிப்பிடித்து உதட்டில் வைத்து ஒற்றினாள்.

ருனு நல்ல பெண். குடும்பத்தில் முதல் பிள்ளையான அவள் தனது பெற்றோரின் அன்பில் ஒரு தனித்துவ இடத்தைப் பிடித்தி ருந்தாள். அவர்கள் அவளை நம்பினார்கள். அந்த நம்பிக்கைக்கு இன்றுவரை எவ்வித துரோகமும் செய்ததில்லை. அவள் அவர்களை விட்டு எப்போதும் பிரிந்ததில்லை. ஆனால் அவளுக்கு வேறு வழியில்லை. பிந்துவின் நண்பர்கள் சிலரிடமிருந்து பிந்து புதிய பெண் களை கவர்ந்திழுக்க வலை வீச முயல்வதாக அவள் கேள்விப்பட்டாள். பிந்து மெல்ல மெல்ல அவள் கைக்கு எட்டாமல் நழுவிக் கொண் டிருந்தான்.

ருனுவின் தலை சுழல ஆரம்பித்தது. நேற்றுதான் பிந்துவிடம் பேசியிருந்தாள். அவளுடன் பேசுவதில் அவனுக்கு அவ்வளவு ஆர்வம் இருக்கவில்லை. திருமணத்தை பற்றி இப்போ சிந்திக்கக்கூடாது. நிறைய காலம் இருக்கிறது என்று அவளிடம் சொன்னான்.

ருனுவுக்கு அது தெரியும். அவர்கள் இளமையாக இருக்கின்றார்கள். அவர்களுக்கு காலம் இருக்கின்றது. ஆனால் தன் தாயும் தந்தையும் பிந்துவை மருமகனாக ஏற்றுக் கொள்ள மாட்டார்கள் என்பதும் அவளுக்குத் தெரியும். பிந்துவின் குடும்பம் சமூக அந்தஸ்து பெற்றிருந்தது. ஆனால் பிந்து அதற்கு தகுதியானவன் இல்லை. அவனுக்குப் பின்னால் அவனது குடும்பம் இல்லாமல் இருப்பதால் பிந்து ஒரு வெற்று வேட்டுதான்.

ரயில் அதன் போகும் வழியில் ஊதல் சப்தம் எழுப்பிக் கொண்டிருந்தது., அதன் பயணம் கடக்கும் புகையிரத நிலையங்களில் நிறுத்தப்பட்டு நிறுத்தப்பட்டு தொடர்நது கொண் டிருந்தது. வெளிச்சம் மங்கிக் கொண்டிருந்தது. இதமான காற்று வீசியது.

ருனுவுக்கு ஏதாவது சாப்பிட்டு ஒரு தேநீர் அருந்தினால் அந்த நீண்ட பயணத்துக்கு இதமாக இருக்கும் என்று தோன்றியது. அவளுக்கு பசித்தது. பயணத்துக்கு முன் பசியைப் பற்றி களைப்பைப் பற்றி அவள் யோசித்திருக்கவில்லை. கண் இமைக்கும் நேரத்துக்குள் காதற் பொற் சிறகடித்து பிந்துவை அடைந்துவிட முடியுமென நினைத்திருந்தாள். அங்கே பிந்து காத்திருப்பான் என்றும் புகையிரத மேடை அவர்களின் காதலால் ஒளி யூட்டப்படுமென எதிர்ப்பார்த்திருந்தாள். பிந்து கவர்ச்சியானவன். கம்பீரமாக உடையணிந் திருப்பான். அவனது சாதுர்யமான பேச்சு, இழையோடும் நகைச்சுவை, வசீகரப் புன்னகை எந்தப் பெண்ணையும் வசப்படுத்திவிடும். அவன் பாடசாலையை விட்டு இடை விலகியவன். கல் லூரிப் படிப்பு படிக்காதவன். என்றாலும் ருனுவின் கண்கள் அவன் முகத்தை பார்க்க ஏங்கியவாறு இருந்தன.

பிந்து, உன்னை விரைவில் வந்தடைவேன் சிறந்த வீட்டை, என்னை நம்பும் பெற்றோரை, இனிய தங்கையை எல்லாவற்றையும் உனக்காக எல்லாவற்றையும் துறந்துவிட்டேன்.உனக்காக மட்டுமே. உன்னோடு வாழ்வதற்காக. எனக்குத் தெரியும் நீ யார் என்று? விடாபிடிக்காரன் என்று தெரியும். நீ ஒரு கொலைகாரன். நீ ஒரு … ஆனாலும் நீ அழகானவன்…. எனக்கு….

ஹோ, மிஸ், நாங்கள் இறங்கும் கடைசி ஸ்டேசனுக்கு வந்து விட்டோம். நீங்கள் இறங்க விரும்பவில்லையா?

ஜன்னல் கிரில்லோடு தலையை சாய்த் திருந்தவள் திடுக்கிட்டடவளாக நிமிர்ந்தாள். பிந்துவை நினைத்தபடி கண்ணயர்ந்து போயிருந்தாள். புகையிரத பெட்டி ஏற்கனவே காலியாகி விட்டதா?

எழுந்து நின்றாள்.

எங்கே போகின்றீர்கள்? உங்கள் லாக்கேஜ் எங்கே? ஓ, உங்களிடம் ஒன்றும் இல்லை. வீட்டைவிட்டு ஓடிவந்து விட்டீர்களா?

அந்த மனிதனுக்கு செவி கொடுக்காதவாறு ரயிலை விட்டு இறங்கிளாள்.

ஹேய் ஹேய் ருனு, இங்கிருக்கு பாதை. இரயில் இன்று அரை மணி நேரம் தாமதமாக வந்திருக்கு.. உனக்காக மணிக்கணக்காய் காத் திருக்கின்றேன். பிந்து அவள் கையை பிடித்து இழுத்துக்கொண்டு நடந்தான். அவன் ருனுவுக்கு ஒரு வார்த்தை கூட பேச வாய்ப்பளிக்கவில்லை. அவன் அவளை நடத்திக்கொண்டே போய்

எதிரே இருந்த புகையிரத மேடையிலிருந்த ரயிலில் ஒரு பெட்டியில் ஏற்றி ஒரு இருக்கையில் அமர்த்தினான்.

இதில் இரு.. நான் டிக்கெட் கலெக்டரிடம் பேசினேன், அவர் இந்த ஸீட்டை உனக்கு ஏற்பாடு செய்தார் மிகவும் வசதியானது மற்றும் பயணத்தின் போது இதிலிருந்து நல்ல காட்சிகளை பார்க்கலாம்... இரு. நான் சாப்பாடு வாங்கி வருகிறேன்.

பிந்து நடந்துகொண்ட விதம் பார்த்து திகைத்து போனாள். அவன் என்னதான் செய்கிறான்? அவள் ஏன் இந்த ரயிலில் இருக்கின்றாள்? அது எங்க போகப்போகின்றது என்று கூட அவளுக்குத் தெரியவில்லை.

ஒரு காகிதப் பையில் சிறிது உணவுகளுடன் பிந்து திரும்பினான். இதோ, இதை எடு. தேநீர் குடிக்கின்றாயா? பொறு வாங்கி வருகிறேன்.

ருனு பொறுமையின்றி அவன் கையைப் பிடித்து அவனைத் தன் அருகில் அமர வைத்தாள்.

அப்படி இப்படி ஓடாதே, குறைந்தது. நீ இன்னும் நாங்கள் எங்க போக போகப் போகின்றோம் என்று கூட சொல்ல வில்லை

போகிறோம்? நாங்கள் எங்கும் போக வில்லை. நீ தான் டாக்காவுக்குத் திரும்பி போக போகின்றாய்.

என்ன?

இந்த ரயில் இன்னும் சில நிமிடங்களில் டாக்காவுக்கு புறப்படுகிறது. நீ நாளை காலை ஏழரை மணி அளவில் அங்கு போய் விடலாம்.

பிந்து நான் திரும்பிச் செல்வதற்காக அவ்வளவு தூரத்திலிருந்து இங்கு வரவில்லை. எனக்கூறி பதற்றத்தோடு எழுந்தாள்.

கத்தாதே. சும்மா ஒரு காட்சியை இங்கு உருவாக்க வேண்டிய அவசியமில்லை எனக் கூறி அவளை மற்றய பயணிகளிடமிருந்து மறைத்தவாறே எழும்பி நின்றான். நான் இந்த வாரத்தில் ஈரானுக்கு செல்கிறேன். இன்னும் இரண்டு வருடத்தில் வருவேன். அப்படித் திரும்பி வரும்போது தான் இப்படி என்னுடன் வரத் தயாராவதை நான் பார்க்க வேண்டும். இப்போது இல்லை.

இதை ஏன் என்னிடம் முன்பே சொல்ல வில்லை? ருனுவின் குரல் ஏதும் உதவியற்ற கோபத்தில் நடுங்கிக்கொண்டிருந்தது

இந்த மாதிரி விடயங்களை முன்பே உறுதியாக சொல்ல முடியாது, இல்லையா? நான் ஏன் ஈரான் செல்லப் போகிறேன் என்று புரிகிறதா? ஏனென்றால் அது சிறை கூண்டை அதுவிட அழகாக இருக்கும். அது ஒரு சிறந்த அடைவிடம் என்று நீ நினைக்கவில்லையா?

பிந்து, நீ என்னை இழிவுபடுத்தப் பார்க் கிறாயா?

இரண்டு வருடங்கள் கழித்து நீ என்னை அவமானப்படுத்து. பழிக்கு பழியாக ரயில் புறப்படும் நேரம் வந்து விட்டது. நீ போ

நான் நீ டாக்காவுக்கு போனவுடன் போன் செய்வேன், அதனால் கவலைப்படாதே என்று பிந்து ஆறுதல் கூறினான்.

ருனு அவள் கையில் வைத்திருந்த உணவுப் பொட்டலத்தை கிஞ்சித்தும் உணர்வில்லாமல் அதை ஜன்னல் வழியாக எறிந்தாள்.

இப்போதே இந்த ரயிலிலிருந்து இறங்கு. என்னிடமிருந்து விலகிச் செல்.



பைத்தியம் மாதிரி கத்தாதே, அன்பே. என்னால் வேறு எதுவும் செய்ய முடியவில்லை

ருனுவின் கண்கள் கோபத்தாலும், அவமானத்தாலும், துக்கத்தாலும் துடிதுடித்த வாறு இருந்தன. அவளின் கண்கள் நதிக் கரை புரண்டோடும் வெள்ளம்போல பெருக் கெடுத்தது அவள் காதில் ஒரு கிசுகிசுப்பு மங்கலாக கேட்டது. அப்போ, அந்த பையன் உன்னை நிராகரித்துட்டானா?

நிர்ச்சலன விழிகளோடு தன் அருகில் அமர்ந்திருந்தவனைக் கண்டு ருனு சிறிது அச்ச மடைந்தாள். அவள் பெரிதாக பயப்பட வில்லை. அவள் அணிந்திருந்த தாயத்தை கழற்றி ஜன்னலுக்கு வெளியே எறிய முயன்றாள். பக்கத்தில் இருந்தவன் அவளை தடுத்தான். அதைத் தூக்கி எறியாதே உன் கஷ்டங்கள் இன்னும் தீர்ந்துவிட்டதாக நான் நினைக்க வில்லை.

என்னிடமிருந்து விலகிச் செல்லுங்கள். ருனு தாழ்ந்த குரலில் சொன்னாள்.

அந்த மனிதன் சௌகரியமாக அமர்ந்து, ஜன்னல் வழியே அவளது பார்வையைத் தடுத்து வேறு யாரும் கேட்காதபடி அவளிடம் பேசினான். இவ்வளவு தைரியமாக நடிக்க முயற்சிக்காதே சகோதரி. இரவு ரயிலில் என்னை விட மோசமான மிருகங்கள் இருக்கும். நீ பசியுடன் இருக்கின்றாய். அப்படித்தானே? நீ பசியாக இருந்தும் அந்த உணவை தூக்கி எறிந்தாய் தானே? எனவே அந்த அயோக்கி யனையும் தூக்கி எறிந்து விடு. அவனை உங்கள் மனதில் இருந்து உதைத்து விரட்டு. வாழ்க்கை என்பது பெரிய கொடை மற்றும் அழகான ஒன்று. நீ எதைப் பற்றி கவலைப்படுகின்றாய்? நீ எப்படி திரும்பிச் செல்லப் போகின்றாய்? உன் குடும்பத்தை எப்படி எதிர்கொள்ளப் போகிறின்றாய்? முன்பின் சென்றறியாத தெரியாத பயணத்தை மேற்கொள்ளும் அளவுக்கு தைரியமாக இருந்தாய். உனக்கு தெரிந்த பாதையில் திரும்பிச் செல்ல நீ தைரியமாக இருக்க வேண்டும். மற்றவர்கள் தங்கள் கதவுகளை உன் முகத்தில் மூடி அறைந்தாலும் கூட. உன் பெற்றோர் அதை செய்ய மாட்டார்கள். அவர்களின் கதவு உனக்காக எப்போதும் திறந்தே இருக்கும்.

ருனு அவனுடைய அறிவுரையை பெரிதாக கேட்க விரும்பவில்லை. அவள் தலைப்பாரம் குறைவதாக உணர்ந்தாள். பசி, தாகம், களைப்பு, இரவிலும் துள்ளிக் குதிக்கும் இரயில் சத்தம், இருள் சூழ்ந்த நிசப்தத்தைத் துளைக்கும் ரயிலின் கர்ஜனை ஊதல் - இவையனைத்தும் அவளது புலன்களை சாய்த்தன. அப்பா பத்து மணிக்கு மருந்து சாப் பிட்டிருப்பாரா..? ஸானுவுக்கு தனியாக தூங்க பயமாக இருந்திருக்கும். அவர்களிடம் வேலை பார்க்கும் சிறுவன் அந்தி சாயும் போதே தூங்க விழ ஆரம்பித்திருப்பான். ரயிலின் சந்த அசைவுக்கேற்ப ருனு தூங்க ஆரம்பித்தாள். தூக்கம் அவளை எப்போது ஆழ்த்தியது என்று அவளுக்குத் தெரியவில்லை - அவளது நலிந்த நரம்புகளை அமைதிப்படுத்திய தூக்கம், அடியாழமில்லாத கடலில் மூழ்குவது போன்ற தூக்கம்.

விடியற்காலையின் தூய வெளிச்சத்தில் சுற்றும் முற்றும் பார்த்த ருனுவிற்கு முதலில் தான் எங்கே என்று இருக்கின்றேன் தெரியவில்லை.

நாங்கள் கம்லாபூருக்கு வந்துவிட்டோம். இறங்க வேண்டிய நேரம். வா. நான் உன்னை வீட்டிற்கு அழைத்துச் செல்கிறேன்.

ருனு திடுக்கிட்டு அந்த மனிதரை நிமிர்ந்து பார்த்தாள். நேற்றிரவு நினைத்தாள். ரயிலில் இருந்து குதிக்க வேண்டும். அல்லது எப்படியோ. ரயில் எப்படியாவது வெடித்துவிடும். அல்லது அவர்களின் பெட்டி கவிழ்ந்துவிடும். அவள் உடல் அங்கேயே துண்டு துண்டாக கிழிந்து கிழிந்திருக்கும்.

ஆனால் எதுவும் நடக்கவில்லை. இன்றைய எவ்வளவு அழகான நாளாக இருக்கிறது. சஞ்சலமற்றதாகவும் அமைதியாகவும். அவளுக் காகவே வந்த நாள்.

வா. வா போகலாம் என்று அந்த உயர மானவன் அவளை அவசரப்படுத்தினான். அவளுடைய பாதுகாவலன் போல.

ஆழ்ந்த நீண்ட தூக்கம் அவளின் களைப் பைப் போக்கியது. ருனு எழுந்து நின்றாள்.

அந்த மனிதன் அவளைப் பின்தொடர்ந்தான். அப்போதுதான் அவர் நொண்டுவதை அவள் பார்த்தாள். அவன் ஒரு வாடகை வண்டியை அழைத்து அவளை ஏற்றி பக்கத்தில் அமர்ந்தான்.

சரி, நீ எங்கே போகிறாய்?

அவனுடைய கேள்வி அவளுக்கு அதிர்ச்சியை அளித்தது. அவள் எங்கே போகிறாள்?

நீ எனக்கு ஏதாவது ஒரு முகவரியைக் கொடுக்க வேண்டும் அல்லது நான் உன்னை பொலிஸுக்கு அழைத்துச் செல்ல வேண்டும் என்று அவளிடம் கூறினான்.

# வாழ்ந்து பார்

– கவிஞர் அன்புழகி (மன்னார்)

தற்கொலை செய்யும் தைரியத்தை
தன்னம்பிக்கையிடம் கொடுத்துப் பார்
கொல்ல வரும் விதிதனையே
கொன்று விட்டு வென்றிடுவாய்..!

சாதிக்கப் பிறந்தவள்(ன்) நீ
சவால்கள் உனக்குப் படிக்கட்டு
சாகும் மடமைப் பலிபீடத்தில்
வெற்றிக் கொடியை நீ கட்டு!

உள்ளத்தின் வலியடக்க
உயிர் விடுதல் மூடத்தனம்
ஆத்மாவின் வேதனைகள்
அரைக்கயிற்றில் தீர்ந்திடுமா?

வானில் நீந்தும் நிலவுக்கும்
வடித்த பழிகள் ஏராளம்
தண்மதி ஒளியால் மிளிர்வதைப்போல்
தகர்த்தெறிந்து வென்றுவிடு!

புண்பட்ட நெஞ்சுரமாய்
புகை போதையில் வீழ்ந்திடுதல்
துயரில் மூழ்கித் தூக்கிடுதல்
துவளும் மனதின் மடமைகளே!

அடிமைக் கூட்டில் அடங்கிவிட
அலறும் ஆட்டு மந்தையல்ல
அவமானப் போர்க்களத்தில்
ஆயுள் முடிப்பது நியாயமில்லை!

மானிடனாகப் பிறந்ததுவே
மகிழ்ச்சியாக வாழத்தான்
மண்ணுலகில் இன்பம் எல்லாம்
மாசில்லாது தேடத்தான்!

தற்கொலை எண்ணத்தை பலியிட்டு
தரணியில் தடத்தினைப் பதித்துவிடு
திசைகளெல்லாம் உன்னடியில்
தீயாய் காற்றாய் திரிந்துவிடு!

நான் உங்களை போலீசில் முறையிட்டு உங்களை பிடிக்க வைத்தால் என்ன செய்வது? ருனு திடீரென்று கேட்டாள்.

மனிதன் சிரித்தான். நான் அப்படியொன்றும் இல்லை, உனக்கும் தெரியும். நான் நொண்டியாக இருப்பதால் நான் கெட்டவன் என்று நினைக்க வேண்டாம். அது பங்களாதேஷ் விடுதலை போர் எனக்குத் தந்த வீரவடு.

வண்டி வேகம் கூடிக் கொண்டிருந்தது. நெடுஞ்சாலை வாகனங்கள் இல்லாதிருந்ததால், அது இயன்ற அதிக வேகத்தில சென்றது. அந்த மனிதன் அவளிடமிருந்து சற்று தள்ளி அமர்ந்திருந்தான், ஆனால் ருனுவால் வண்டி குலுக்கல் காரணமாக அவனோடு முட்டி மோதிக்கொள்ளாமல் இருக்க முடியவில்லை. ஆனால் அவள் அதற்காக கவலைப்படவில்லை. அவளால் உணர முடிந்ததெல்லாம் அவள் இதயத்தில் ஒரு குளிர் சீற்றம். கத்தி, கத்தரிக்கோல் ஆகியவற்றால் காதல் துரோகியின் முகம், கண், மூக்கு, வாய், காது என எதைக் கண்டாலும் வெட்டி, வெட்டி போட்டாள்.. அவள் அவனது கம்பீர ஆடைகளை தன் பற்களாலும் நகங்களாலும் நாடாக்காளாய் கிழித்தெறிந்தாள். கடைசியாக அவன் மீது பெட்ரோலை ஊற்றி எரியும் தீக்குச்சியை அவன் மீது ஏற்றினாள். நெருப்பு கிளர்ந்து எரிந்தது. ஆனால் நெருப்பு புகையையும் வெப்பத்தையும் உண்டாக்கியது. புகையால் ருனுவின் கண்கள் குளமாகின. தலை குனிந்து இதையெல்லாம் நினைத்துக் கொண்டிருந்தாள். அவள் தலையை உயர்த்தி கண்களைத் துடைத்தாள்.

அவளது கண்ணீரில் நனைந்த, ரோஜா நிறமான முகத்தை ஒரு ஜோடி கண்கள் ரகசியமாகப் பார்த்துக் கொண்டிருப்பதை அவள் கவனிக்கவில்லை.

அதிகாலை வெயிலின் பிரகாசத்தில் வண்டி வெறுமையான நெடுஞ்சாலை வழியாகச் சென்றது.

# யாழிலிருந்து வெளிவந்த வெற்றிமணி



C. மகாலிங்கம்

## சிறுவர் படைப்புகளுக்கு களம் அமைத்தது

இலங்கையில் சிறுவர்களுக்கான சஞ்சிகைகள் பல வெளிவந்துள்ளன. இவ்வரிசையில் 1970 களில் வெளிவந்த வெற்றிமணி அவற்றுள் ஒன்று.

கௌரவ ஆசிரியராக மு.க.சுப்பிரமணியம் அவர்களைக் கொண்டும், ஆலோசக குழுவினராக இரசிகமணி கனக.செந்திநாதன், கவிஞர் வி.கந்தவனம் (B.A), A.T.பொன்னுத்துரை (B.A), காரை செ.சுந்தரம்பிள்ளை (B.A) ஆகியோர்களைக் கொண்டும் வெற்றிமணி வெளிவந்தது.

**'வெற்றிமணி டாண் எனவே விண்முட்ட ஒலித்திடுவாய்**
**நற்றமிழாக எங்கள் மொழி நலமுற ஒலித்திடுவாய்'**

எனும் முழக்கத்துடன் 253 1/1 ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம் எனும் முகவரியிலிருந்து இது வெளிவந்தது.

எத்தனை இதழ்கள் வெளிவந்தன என்பது தெரியவில்லை. இணையத்தளத்தில் (www. noolaham.org) 1955முதல் 1974ஆம் வருடம்வரை வெளியான 90க்கும் மேற்பட்ட இதழ்களை தரவிறக்கம் செய்யலாம். என் கைவசம் வைகாசி 1971 மார்கழி (15/12/71), ஐப்பசி (1/10/72) தை (01/01/73) எனும் நான்கு இதழ்கள் உள்ளன.

சிறுவர்களுக்கான கவிதைகள், சிறுகதைகள், கட்டுரைகள், மாணவர்களுக்கான சில அறிவுறுத்தல்கள், சிறுவர் நாடகங்கள் என இதன் உள்ளடக்கங்களை வகைப்படுத்தலாம். மார்கழி (15/12/1971) இதழின் முகப்பு அட்டையின் இயேசுவின் படமும், யாழ் இலக்கிய வட்டத்தைச் சேர்ந்த ஜேக்கப் என்பவரின் கவிதையும், நத்தார் புதுவருட வாழ்த்துக்களும் காணப்படுகின்றன.

உள்ளே அட்டாளைச்சேனை ஆசிரிய கலாசாலை அதிபர் AZ ஓமர்தின் BA (Cey) Diploma in Edu (Cey) அவர்களின் ஆசியுரை ஒன்றுள்ளது. அதில் வெற்றிமணியின் வெற்றிகரமான செயற்பாடுகள் பற்றி கூறிச் செல்லுகின்றார்.

அவர் ஓரிடத்தில் பின்வருமாறு கூறுகின்றார். "விசேடமாக முஸ்லிம் மாணவர்களுக்கெனச் சிறுவர் பத்திரிகை ஒன்று எம்மத்தியில் இல்லாத குறையை வெற்றிமணி போக்குகிறது. மேலும் பல விடயங்கள் முஸ்லிம் சிறுவர்களுக்காக இடம்பெறும் என்பதையும் அறிகிறேன்" என்கிறார்.

கவிதை அரங்கம் பகுதியில் "இயேசு ஏன் பிறந்தார்" (மொழிவரதன் - பண்டாரவளை) அஞ்சாதே (மாஸ்டர் எம். எல்.அலியார் மீராவோடை), ஒழுக்கம் (வல்லைச்சீலன்), தாய் (திமிலைக் கண்ணன்), வெண்மதி பாரீர் (இறால் குழி சிவகுருநாதன்) என்பவர்களின் கவிதைகள் இடம்பெற்றுள்ளன. வைகாசி (1971) வெளி அட்டை இலங்கை வரைபடத்தைக்



கௌரவ ஆசிரியர் மு. க. சுப்பிரமணியம்










கொண்டதாகவும், பெரிய மணியில் கட்டப்பட்ட ஊஞ்சலில் பல மத, இன பிள்ளைகள் ஊஞ்சலில் ஆடுவது போலவும் வரையப்பட்டுள்ளது. இதே வெளி அட்டையில் இலக்கியம் கனக. செந்திநாதன் கட்டுரை வி.கந்தவனம், நாடகம் ஏ.ரி.பொன்னுத்துரை, கணக்கியல் வை.சி.சிவஞானம், கவிதை அரங்கம், பாலர் பகுதி கதைகள் கௌரவ ஆசிரியர் மு.க.சுப்பிரமணியம் என அச்சிடப்பட்டுள்ளது.

உள்ளே காயும் கனியும் (கட்டுரை-இரசிகமணி கனக.செந்திநாதன்), கவிதை அரங்கம் பகுதியில் தூங்காதே தமிழா (தொம்ஸன் காசி நாதர் மட்டுநகர்) சிரித்த முகம் (இன்பவள்ளல்) வழி ஒன்று சொல் (க.மொழிவரதன் - ஊவா ஐலேண்ட்ஸ், பண்டாரவளை) கடலலை பாரீர் தம்பியரே (காந்தண்ணா) வணங்கிடுவோம் - மீராவோடை – எஸ்.முஹம்மதலியா) பரீட்சையிற் சித்தியடைவது எப்படி? வி.கந்தவனம் (B.A), கணக்கியலுக்கோர் அறிமுகம் (33), வை.சி.சிவஞர்னம், பாலர் மலரில் சுகவாழ்வு (V.இளங்கோ) ஆணவத்தின் அழிவு (எம்.ஐ.எஸ். தாவூத் - மட்டக்களப்பு), உருவகக்கதை உணவழிப்போர் (ச.குகதாசன் திரு.நெல்வேலி கிழக்கு-யாழ்ப்பாணம்) காந்திஜி – (நல்லை கணபதிப்பிள்ளை – கிளிவெட்டி) குறுங்காவியம் தெய்வ சோதனை (சிவம் - கோப்பாய்), பாடசாலை நாடகம் (ஏ.ரி.பொத்துரை (B.A) சிறுவர் தொடர் நவீனம் - பஞ்சவர்ணக்கிளி (மா.குலேந்திரன்) போன்றன பிரசுரமாகி உள்ளன.

ஐப்பசி (1.10.1972) வெளி - முகப்பு அட்டை ‘சங்கிலியம்’ என்ற காவியத்துக்குச் சாகித்திய மண்டலம் பரிசு பெற்ற கவிஞர் காரை. செ.சுந்தரம்பிள்ளை அவர்களின் புகைப்படம் அலங்கரிக்கின்றது. வழமைபோன்றே உள்ளடக்கம் மாணவர்கள் சிறுவர்களுக்கானதாகத் திகழ்கின்றது.

தை (01/01/1973) வெற்றிமணியின் வெளிஅட்டை அமரர், ராஜாஜி அவர்களின் படத்தை தாங்கி வெளியாகி உள்ளது. உள்ளே இதழின் ஆசிரியர் ‘உலக மகாமேதை ராஜாஜி” எனும் தலைப்பில் அவரின் வாழ்க்கைக் குறிப்பையும் அவரது வாழ்வின் முக்கிய கட்டங்களையும் கூறிச் செல்லுகின்றார். வழமை போலவே உள்ளே கட்டுரைகள், கவிதைகள் பாடசாலை மாதிரி நாடகம் என்பன பிரசுரமாகியுள்ளன.

“வெற்றிமணியில்” ஆரம்ப காலங்களில் எழுதி வந்தவர்களில் நானும் ஒருவன் வி.கந்தவனம் (B.A), காரை செ. சுந்தரம்பிள்ளை போன்றோர்கள் எனது கவிதை முயற்சிக்கு ஊக்கமளித்தோர்கள் மாத்திரமல்ல. பல கவிதைகளை திருத்தி தபாலில் எனக்கனுப்பி உதவியும் உள்ளனர். அவர்களை என்னால் மறத்தல் இயலாது.

இன்று வெற்றிமணி போன்ற சிறுவர் சஞ்சிகைகள் பாட சாலைகளில் கை ஏட்டுப் பிரதியாக சரி ஆரம்பிக்கப்படுவதன் மூலம் மாணவர்களின் படைப்பாற்றலை மேம்படுத்த இயலும் எதிர் காலத்தில் இவர்கள் சிறந்த படைப்பாளிகளாக பரிணமிக்க இயலும். எனது படைப்புகளுக்கு களம் கொடுத்து ஊக்குவித்த வெற்றிமணி ஆசிரியர் குழுவுக்கு வாழ்த்துக்கள்.

கந்தகெட்டிய கண்டியிலுள்ள ஓர் தேயிலைத்தோட்ட மலையாகும்.

150 வருடங்களுக்கு முன்னர் அங்கு கொண்டு வரப்பட்ட தமிழ் நாட்டு மக்கள் தம்மோடு தம் பண்பாட்டையும் கொண்டு வந்தனர். கால ஓட்டங்கள் அவற்றில் பல மாற்றங்களை ஏற் படுத்தினும் இன்றுவரை தொடர்ச்சியாகச் சில வற்றைப் பேணியும் வருகின்றனர்

அதனுள் ஒன்றுதான் சுடலை மாடன் வழிபாடு.

கந்தகெட்டிய மஹாவித்தியாலய அதிபர் ராஜகோபால். மலையக அடிமட்ட மக்கள் மீதும், அவர்களின் கலைகள் மீதும் அனுதாபமும் ஆர்வமும் கொண்டவர். அவர் தனது பாடசாலை நாடக விழாவுக்கு விருந்தினராக என்னை அழைத்து இருந்தார்.

“சேர் சுடலை மாடன் வில்லுப்பாட்டு நீங்கள் அவசியம் பார்க்க வேண்டும்” என்றார்.

நானும் அதனைப் பார்க்க விரும்பினேன்.

சுடலை மாடன் வில்லுப்பாட்டு பார்க்க அன்று பின்னேரம் என்னை அதிபர் ராஜகோபால் வேனில் காகல மடவல டிவிசன் நலந்தன்ன எனும் மலைக்கு என்னை அழைத்துச் சென்றார்.

பின்னேர இள வெயில். சூழ மலைகள். வளைந்து வளைந்து செல்லும் மலைப் பாதை யூடாகச் சென்ற வேன் ஓரிடத்தில் நின்றது. நின்ற இடத்திலிருந்து மேல் நோக்கிச்சென்ற படிக்கட்டுகளூடே ஏறிச் சென்று மிகச் சிறிய ஒரு கோவிலை அடைந்தோம்.

என் கைபிடித்து மேலே கவனமாக அழைத்துச் செல்ல மாணவர்கள் ஆயத்தமாக நின்றனர்.

“நானும் உங்களைபோன்ற ஒருத்தன் தானடா” என்று கூறிவிட்டு படிகளில் மளமள என ஏறி மேலே கோவில் இருந்த திசைக்குச் சென்றேன். மாணவர்கள் நான் கீழே விழுந்து விடக் கூடாது என்ற அக்கறையுடன் என் பின்னால் வந்தனர் என்னை விழ விடாத மாண வர்கள். அக்கோவில் ஒரு பெரிய அகன்ற வாகை மரத்தின் கீழ் அமைந்திருந்தது. அக் கிராமச் சனங்கள் எங்களை எதிர்நோக்கிக் காத்திருந்தனர்.

கோவில் விக்கிரகங்களாகக் கன்னங்கரேல் என்ற இரு உருவங்கள் இருந்தன. அது ஒரு மாடசாமி கோவில். கோவிலின் முன் வில்லுப் பாட்டுக்குரிய ஒரு பெரிய வில் இருந்தது.

எங்களுக்கு வணக்கமுரைத்தார்கள் வில்லுப்பாட்டுப்பாடப்போகும் பாடகர்களும் வாத்தியக்காரர்களும் முதலில் கோவிலுக்கு அழைத்துச் சென்றார்கள். திருநீறு சந்தனம் வழங்கப்பட்டது.

“சுடலைமாடன் பிணம் தின்னும் ஒரு தெய்வம். சுடலைக்குச் சென்று புதிய பிணங்களைத் தோண்டியெடுத்து அப்பிணங்களின் உடலைப் பிழந்து பிணத்தின் குடலை மாலையாகப் போட்ட படியும் பிணத்தின் உள்ளுறுப்புகளைச் சாப்பிட்டுக்கொண்டும் வந்து தன்னை அது மக்கள் மத்தியில் நிரூபித்துக் கொள்ளும்” என ஒருத்தர் கூறினார்.

“21 வகையான மாடன்கள் இருக்கிறார்கள்” என்று சுடலை மாடன் பற்றி எனக்கு விளக்கம் அளித்தார். என்னருகில் இருந்த இன்னொரு பெரியவர்.






சி.மௌனகுரு

“பல மாடன்கள் உண்டு. சப்பாணி மாடன், நொண்டிமாடன், சுடலை மடன் என மாடன் வகையினை ஒரு பட்டியல் தந்தார் இன்னொரு பெரியவர்.

“முன்னாளில் எங்களின் இந்த ஊரில் மாடன் திருவிழா ஆரம்பமாவதற்கு ஒரு வாரத்துக்கு முன் ஒரு பிணம் கட்டாயம் விழும். அப்புதுப் பிணத்தின் குடலைத்தான் மாலையாகப் போட்டுக்கொண்டும் பிணத்தின் உள்ளூறுபுக்களைச் சாப்பிட்டுக்கொண்டும் மாடசாமி இக்கோவிலுக்கு வருவார்'' என்றார் இன்னொருவர்.

“மாடனை இந்த மடச் சனங்கள் அன்று கேள்வி கேட்கப்போய் இந்த ஊருக்கு ஒரு பெரும் கொள்ளை வந்தது .நிறையச் சனம் செத்தது. பின் தமது தவறை உணர்ந்து மக்கள் மாடசாமியிடம் மக்கள் மன்னிப்புக் கேட்டுக் கொள்ள அப்பெரும் கொள்ளை நோய் நீங்கியது'' என்று இன்னொருவர் கூறினார்

“பின்னாளில் மக்கள் பக்தியுடன் மாடசாமி யிடம் பிணத்தின் குடலை மாலையாகப் போட்டுக் கொண்டு வருவதைக்காணப் பெண்களும் பிள்ளைகளும் பயங் கொள்கிறார்கள். எனவே பிணத்தின் குடலோடு வர வேண்டாம் என வேண்ட பிணத்திற்குப்பதிலாக மாடசாமி கோழியின் குடலை போட்டுக்கொண்டு வருவதும் கோழியின் உள்ளூறுப்புகளைச் சாப்பிட்டுக்கொண்டு வருவதும் வழக்கமாயிற்று'' என்றார் இன்னொருவர்.

மாடசாமிபற்றி மக்கள் நம்பிக்கையின் புற உரு இவ்வாறு எனக்கு அவர்களால் தரப் பட்டது. அச்சாமி பற்றி எனக்குள்ளும் ஒரு படிமம் உருவாகியது

மாடசாமி வில்லிசைக் குழு பற்றியும் என்னைப் பற்றியும் ஒரு அறிமுக உரையினை ராஜகோபாலும் அங்கிருந்த ஒருவரும் நிகழ்த்தினர். வில்லுக்கு பக்தியோடு தூப தீபம் காட்டப்பட்டு அதுவும் ஒரு தெய்வநிலையில் வைத்துப் பூஜிக்கப்பட்டது. பங்கு கொள்ளும் அனைவருக்கும் வில்லுப்பாட்டுக்குழுத் தலைவர் திருநீற்றை நெற்றியில் இட்டார். பக்தியோடு அவர்கள் அதனைப் பெற்றுக்கொண்டனர். நம்பிக்கையும், பக்தியுமே அங்கு மேலோங்கி நின்றது. மதம் என்பது நம்பிக்கைதானே.

வில்லிசைக் குழுவினர் பெரிய வில்லைச் சுற்றி அமர்ந்தனர். உடுக்கடிக்கலைஞர்கள் இருவர், குடம் வாசிபோர் ஒருவர், தபேலா வாசிக்க ஒருவர், பிரதான பாட்டுக்காரர் அவருடன் பாடப் பக்கப்பாட்டுக்காரர்கள் சிலர் என ஒரு பெரும் குழாம் சுடலை மாடன் கதை கதை வில்லுப்பாட்டு ஆரம்பமாகியது.

பிரதான கதை சொல்லி மருதை என்பவரின் குரல் ஓங்கி ஒலித்தது. பாக்கியனாதன் என்பவர் தன் முழு உடலையும் அசைத்து அசைத்து ஆடியபடி உடுக்கு அடித்தார். 14 பேர் வில்லைச் சூழ அமர்ந்திருந்து பக்கப்பாட்டுப் பாடினர். பிரதான பாடகர் பாட, இவர்கள் ஆம் ஐயா, ஆம் ஐயா என்றுதொடர் குரல் எழுப்பினர். அனைவரின் இணைவும், குரல் ஓசையும், உடுக்கு ஒலியும், பாடல் மெட்டும் ஒருவித லய உணர்வைத் தந்து கொண்டிருந்தன.

அந்த லயத்துக்குள் நாம் அனைவரும் ஈர்க்கப்பட்டோம். எமது உடல்களும் தாள லயத்துக்கு அசைந்தன. திடீரென ஒருவருக்கு பெரும் உரு வந்து விட்டது.

இரண்டு கைகளையும் தரையில் அடித்து புரண்டு தவழ்ந்து ஆடியபடி அவர் கோவி லுக்குள் சென்று மாடசாமி உடை அணிந்து வெளியில் வைத்திருந்த மணிகட்டிய பெரும் தண்டமொன்றைக் கையில் எடுத்துக்கொண்டு, நீண்ட சாட்டைக் கயிறொன்றைத் தனது தோழைச் சுற்றிப் போட்டுக்கொண்டு தாளத்துக்கு ஏற்ப காலடி வைத்து ஆடியபடி கோவில் வீதியில் கம்பீர நடை பயில ஆரம்பித்தார்.

“மாடன் வந்துவிட்டான்'' என்றார்கள். மாடன் என அவர் நிரூபிக்க வேண்டுமே. காளி அம்மன் பந்தலில் ஒரு பெண் காளியம்மாள் உருவேறி ஆடிக்கொண்டிருந்தாள். அவளிடம் சென்று திரும்பிய மாடன், சுவாமிசிலைக்கு அருகில் வைத்திருந்த சிறிய சாரிய போத்தலை எடுத்தார், குடித்தார், மற்றவர்க்கும் கொடுத்தார். குடிக்கத் தயங்கிவரின் தலைகள் மீது தண்ணீர் போலத் தெளித்தார்.

அருகில் கட்டியிருந்த கோழியை எடுத்தார். அதன் சிறகுகளை ஒவ்வொன்றாகப் பிய்த்தார். பின் கோழியை இரண்டாகக் கிழித்தார். கீழே இரண்டு கால்களையும் அகலப் பரப்பி இருந்த வண்ணம் காலுகளுக்கு நடுவில் கோழியை வைத்து அதன் குடலை பிய்த்து எடுத்து மாலையாகக் கழுத்தில் போட்டுக் கொண்டார். இருந்த படியே கோழியின் ஈரலை வெளியே பிய்த்து வெளியே எடுத்தார். இரத்தம் வழிந்து



**கோழியை வைத்து அதன் குடலை பிய்த்து எடுத்து மாலையாகக் கழுத்தில் போட்டுக் கொண்டார். கோழியின் ஈரலை வெளியே பிய்த்து வெளியே எடுத்தார். இரத்தம் வழிந்து கொண்டிருந்தது. இரத்தம் வழியும் அதனைச் சாப்பிட ஆரம்பித்தார்.**

கொண்டிருந்தது. இரத்தம் வழியும் அதனைச் சாப்பிட ஆரம்பித்தார்.

சனங்கள் பார்த்துக்கொண்டே இருந்தனர். வில்லுப்பாட்டுத் தொடர்ந்து கொண்டே இருந்தது. குழந்தைகளும், பெண்களும் இச்செயல்ளைப் பார்த்துக்கொண்டே இருந்தனர். நானும் பார்வை யாளர்களுள் ஒருவனாக கோழியின் குடலை மாலையாகப் போட்டுக்கொண்டு அதன் ஈரலைச் சாப்பிட்டுத் திருப்தி கொண்ட சுடலை மாடன் பரவச நிலையில் நின்று மீண்டு மீண்டும் எழுந்து தண்டத்தைத் தங்கியபடி பக்தர்கள் மத்தியில் தாளத்திற்கு நடந்து உலாவர ஆரம்பித்தார்.

நடந்து சென்ற சுடலைமாடனார் ஒரு இளம் பெண் முன் நின்று ஏதேதோ கூறினார். தன் அருகில் வரும்படி அழைத்தார். அந்தப் பெண்ணோ நிர்த்தாச்சணியமாக அவ்வழைப்பை மறுத்து விட்டார். மாடன் அதனால் சற்றுக் குழம்பிப்போய் கோபமுற்றவர் போல விரலைக் காட்டி அப்பெண்ணை ஏதோ எச்சரித்தார்

“அந்தப் பெண்ணின்மீது சுடலை மாடசாமி கோபம் கொண்டு விட்டார் இன்று அந்தப் பெண்ணுக்கு ஏதாவது நடக்கும்” என்றார் என் அருகில் இருந்த ஒருவர்.

சுடலை மாடன் பின்னர் பெரிய சாட்டையை எடுத்து மளார் மளார் எனத் தன்னை தன்னைத் தானே சாட்டையால் அடித்துக் கொண்டார். பின்னர் மெல்ல மெல்ல உருத்தணிய சாதாரண மனித நிலைக்கு வந்து விட்டார்.

அவரை அப்போது பார்த்தால் இந்தப் பூனையா அந்தப் பாலைக் குடித்தது என்பது போல மிகமிகச் சாதுவாகக் காணப்பட்டார். திடீரென அங்கு நின்ற இன்னொருவருக்கு உரு வந்து விட்டது.

அவர் முன்னை மாடசாமிக்கு உருக்கொண்டு ஆடியவரைவிட இளைஞராகவும் தோற்றத்திலும் உடையிலும் சற்று நவீன உலகுக்குள் வாழ்பவராகவும் இருந்தார். (பின்னால் விசாரித்த போது கொழும்பில் ஒரு கம்பனியில் அவர் வேலை செய்பவரென அறிந்தேன்)

இப் புதிய மாடன் இப்போது சுருட்டு ஒன்றைப் புகைத்தபடி வில்லுப்பாட்டுத் தாளத் திற்கு உருக்கொண்டு ஆடினார். பெரிய சாட்டையைத் தன் தோழில் போட்டுக்கொண்டார். சில வேளைகளில் சாட்டையால் தன்னை மாறி மாறி அடித்தும் கொண்டார். சாராய போத்தலை எடுத்துக் கொண்டார். தானும் குடித்தார். மற்றவர்க்கும் கொடுத்தார். வில்லுப்பாட்டு நிற்கவேயில்லை.

நடந்த நிகழ்ச்சிகள், புதிய பார்வையாளர் களாகிய எங்களுக்குத்தான், திகைப்பும் வியப்பும் தந்ததேயொழிய அங்கிருந்த மக்களுக்கு அது பழகிப்போன ஒரு நிகழ்வாகவே இருந்தது

அவர்கள் சர்வ சாதாரணமாக் அந்நிகழ்வு களைப் பார்த்தபடி இருந்தனர். இந்த மாடசாமி யின் ஆட்டமும் முடிந்தது. வில்லுப் பாட்டும் வாழி பாடி முடிக்கப்பட்டது. பெரு நிகழ்வு

ஒன்றுகண்ட மனநிலையினின்று மீண்டேன். இத்தகைய உருவேற்று ஆட்ட நிகழ்வுகள் எனக்குப் புதியனவல்ல. என் சிறு வயதில் என் கிராமத்தில் இத்தகைய உயிர்ப்பலி கொடுக்கும் கோவில் சடங்குகளைப் பார்த்திருக்கிறேன்.

பிற்காலத்தில் அங்கு மடைப்பலி கொடுக்கப் பட்டதையும் அவதானித்துள்ளேன். மடை என்பது கமுகம் பாளை, வாழைப்பழம், பாக்கு, வெற்றிலை வைத்துப் பூசாரியார் அதனை ஒரு உயிராக உருவகித்துக் கொடுக்கும் ஒரு பலியாகும். உயிர்ப்பலிக்குப் பதிலாக அதனை பெறச் சாமியைச் சம்மதிக்க வைத்திருந்தார்கள்.

விழா முடிந்தபின் என்னைப் பேசும்படி கேட்டு மைக்கை என் கையில் ஒப்படைத்தனர். என்பேச்சை எல்லோரும் எதிர்பார்த்திருக்கின்றனர் என்பது எனக்குப் புரிந்தது. நான் பின்வருமாறு பேசினேன்.

“மடவல டிவிசன் நலந்தன்ன மலையக மக்களே, வில்லுப்பாட்டுக் கலைஞர்களே, இதில் பங்கு கொண்டோர்களே, எனக்கு இப் பெருவிழாவை அறிமுகம் செய்த ராஜகோபால் அவர்களே.

மலையக மக்கள் 150 வருட காலத்துக்கு முன் தன் வாழ்வை வளமாக்கிக் கொள்ள தமிழகம் இருந்து இங்கு வந்தார்கள். வரும்போது தம்முடன் அவர்கள் தமது தனித்துவமான பண்பாட்டு அம்சங்களான. சடங்குகள். விழாக்கள், கூத்துகள், வாழ்க்கை முறைகள், போன்றனவற்றையும் கொணர்ந்தார்கள்.

அவர்கள் இங்கு வறுமையிலும் துயரத் திலும், குளிரிலும் வாடிய போதெல்லம் அவர்களுக்கு உயிர்ப்புத் தந்தவை இந்தப் பண்பாட்டம்சங்கள்தான். இவற்றை நிகழ்த்திய போது அவர்கள் உற்சாகம் பெற்றனர்.

சமூகமாக இணைந்தனர். பலம் பெற்றனர். அத்தகைய வாழ்வுப்பலம் தந்த சடங்கு களை இன்றும் தொடர்ச்சியாக நிகழ்த்தி வருகின்றனர்,கால மாற்றம் அச்சடங்குகளில் சிற்சில மாற்றங்களையும் எற்படுத்தியும் வருகிறது. மலையகத்தின் பண்பாட்டை அடையாளமாக காமன் கூத்து, பொன்னர் சங்கர், அருச்சுனன் தபசு, என்பனவே பரவலாக அறிமுகம் செய்யப்பட்டுள்ளன.

மலையகத்தில் நடத்தப்படும் காட்டேரி யம்மன் சடங்கு அண்மைக்காலமாக வெளி யுலகுக்கு அறிமுகப்படுத்தப்பட்ட ஒரு மலைய கப் பண்பாட்டுச் சடங்காகும். இவ் வகையி லின்றுதான் நான் முதன் முதலில் இந்த சுடலை மாடன் வில்லுப்பாட்டையும் அதனை ஒட்டி நடைபெறும் சுடலைமாடன் சடங்கையும் கேட்கிறேன், பார்க்கிறேன்.

இது இன்னும் பொது வெளியில் பெரிதாக அறிமுகப் படுத்தப்படவில்லை. இவ்வாற்றுகை எனக்கு பெரு வியப்பையும் திகைப்பையும் எற்படுத்தியுள்ளது. பிணங்களைத் தோண்டி அவற்றின் குடல்களை மாலையாகப் போட்டு அவற்றின் உள்ளுறுப்புகளைச் சாப்பிடும் சடங்கு முறைகள் மானுட சமூகத்தின் மிகப் புராதனமான சடங்கு வகைகளில் ஒன்று மானிட வியலாளர்கள் இன்றும் எஞ்சி நிற்கும் இத்தகைய இனக்குழுக்கள் பற்றி ஆராய்ந்துள்ளனர்.

மானுட வரலாற்றின் ஆரம்ப காலத்தில் சில மானிடக் குழுக்களிடையே மனித இறைச்சி சாப்பிடும் வழக்கம் இருந்துள்ளது. இறந்தவர் களை உண்ணும் வழக்கம் முதலில் இருந்து பின்னர் அது ஒரு சடங்கு முறையாக மாறி யிருக்கலாம். வாழ்வோடு ஒட்டியிருந்த சில பழக்க வழக்கங்கள் சடங்குகளாக மாறி



## பாம்புச் சட்டை

**வில்வரசன்** (பிரமந்தனாறு)

வெகுளியாயிருப்பவர்களை
அப்பாவித்தனம் மாறாமல்
சிரிப்பவர்களை
நெளிந்து தாவும் நீர்ப்பாம்பைப்
போன்றவர்களை
பரிதாபத்தோடு கடக்கிறேன்...

எதோவொரு முட்செடியில்
எதோவொரு புதரில்
கிழியக்கூடும் அவர்களின் சட்டையும்..
எரியும் வெயிலின் உஸ்ணம்
எப்படியேனும் வாழ்வை உணர்த்தும்.

அப்போதேனும்
மெல்ல மெல்லமாய் சட்டைகழற்றி
அப்பாவித்தனத்தின் கூடு கலைந்து
அவசியத்துக்கு நஞ்சு சேமித்து
உருமாறக்கூடும் நல்ல பாம்பாய்.

யமைக்கு நிறையச் சான்றுகள் உள்ளன. தமிழ் மக்களிடமும் இத்தகைய வணக்க முறைகள் இருந்தமைக்குச் சான்றுகள் உண்டு.

சங்க இலக்கியங்களில் பேய் மகளிர் பற்றிப் பேசப்படுகிறது. இப் பேய்மகளிர் சுடலையில் பிணங்களையுண்ட பழைய பெண்மதகுருமார்களாக இருந்திருக்கலாம் என ஆராய்ச்சியாளர்கள் சிலர் யூகிக்கின்றனர்.

மிகப் புராதன காலத்தில் பெண்ணே அக் குழுவுக்குத் தலைவியாக இருந்தாள். பெண்வழிச் சமூக அமைப்பு நிலவிய காலம் அது. அப் பெண்ணே மதகுருவாகவும் இருந்தாள். தாயைத் தெய்வமாக வணங்கிய பெண்வழிச் சமூக அமைப்பு அது. கொற்றவை, காடுகிழாள் என்பன அன்றைய தமிழரின் பெண் தெய்வங்கள், கொற்றவை பின் காளியானாள். இந்தக் காடு கிழாளின் இன்றைய எஞ்சிய வடிவம்தான் மலையகக் காட்டேரியம்மன் என நினைக்கிறேன்.

திருநெல்வேலிப் பகுதியில் வாழ்ந்த ஒரு மக்கள் குழுவினரிடம் வழக்கிலிருந்த சுடலமாடன் வில்லுப்பாட்டை 1960களில் பேராசிரியர் வானமாமலை கல்வி உலகுக்கு அறிமுகம் செய்து வைத்தார்.

சுடலைமாடனை சிவனுடன் இணைக்கும் பண்பை அதில் கண்டேன். அன்று நான் வாசித்த அந்தச் சுடலை மாடன் வில்லுப்பாட்டை இன்று நிகழ்த்துகலையாகவும். சடங்காகவும் பார்க்கும் வாய்ப்பு எனக்குக் கிடைத்தமை நான் பெற்ற பாக்கியம்.

இச் சந்தர்ப்பத்தை எனது மாணவன் ராஜீவும், நண்பர் ராஜகோபாலும் எனக்கு ஏற்படுத்தித் தந்திருக்காவிட்டால் என் வாழ்நாளில் இந்த அரிய வாய்ப்பை இழந்திருப்பேன். மக்களே இவ்வகையில் நீங்கள் 3000 வருடங்களுக்கு முன்னர் தமிழர் மத்தியில் இருந்த ஒரு வணக்க முறையினை இன்றளவும் பேணும் பெருமையைக் கொண்டிருக்கிறீர்கள்.

அதற்கு தமிழ்ப் பண்பாடு பேசுவோர் உங்களுக்கு மிகுந்த நன்றி செலுத்த வேண்டும். உங்களுக்கு இது ஒரு சடங்கு. நம்பிக்கையோடு செய்யப்படும் சடங்கு. நம்பிக்கையே இங்கு பிரதானம். இதில் நம்பிக்கையின்றிப் பார்ப் போருக்கு இது ஒரு கண்காட்சி அல்லது ஆற்றுகைஎன்னைப் பொறுத்தவரை உங்கள் ஆற்றுகை என்னை இதில் ஓர் தீவிர ரசிகராக அல்லது பங்காளராக ஆக்கியது.

வில்லுப்பாட்டுப் பாடிய அனைவரும் அதில் தோய்ந்து மிகுந்த ஈடுபாட்டுடன் பாடினர். அவர்களின் உடுக்கைகளின் ஒலியும், வில்லில் கட்டிய மணியின் ஒலியும்,குடம் எழுப்பிய ஒலியும், பாடிய ஒவ்வொருவரின் லயம் தவறாத பெருத்த குரல் ஒலிகளும் ஒன்றாக இணைந்து என்னை உருவேற்றின.

இத்தகைய திறன் மிகுந்த கலைஞர்களுக்கு என் மனமார்ந்த பாராட்டுக்கள். மலைக்குள் மறைந்து கிடக்கும் மாபெரும் கலைஞர்கள் இவர்கள். ஏன் இவர்கள் இதுகாறும் வெளிக் கொணரப்படவில்லை? இந்தச்சடங்கு ஏன் வெளியுலகுக்குப் பிரபல்யப்படுத்தப்படவில்லை? என்ற கேள்விகள் என்னுள்ளத்தில் எழுந்த வண்ணம் இருந்தன.

இவர்களைப் பற்றி அறிந்த இங்குள்ள மாணவர்கள் யாரையாவது வைத்து இச்சடங்கு பற்றிய ஓர் ஆய்வை மேற் கொள்ளவைத்து அதனை நூலுருவாகக் கொணரும் முயற்சியை நான் நிட்சயம் செய்வேன். இச்சமயம் எனது சிறிய ஆலோசனையொன்றையும் மிகுந்த தயக்கத்தோடு உங்கள் முன் வைக்கின்றேன்.

இது கட்டளையல்ல, உங்கள் மீது அன்பும் பரிவும் கொண்ட நெருக்கமான ஒரு நண்பனின் வேண்டுகோள் என நீங்கள் எடுத்துக் கொள்ளலாம். ஏற்பது விடுவது உங்களைப் பொறுத்தது. சுடலை மாடசாமி உங்களின் குல தெய்வம். உங்களைக் காக்கும் தெய்வம் ஆரம்பகாலத்தில் சுடலையில் பிணத்தைக் கிழித்து குடலை மாலையாகப் போட்ட படி சுடலை மாடன் வந்தபோது நீங்கள் இந்தக் கோலம் கண்டு குழந்தைகளும், கர்ப்பிணிப் பெண்களும் தாக்கமடைகிறார்கள் என்று வேண்ட, அவர் பிணத்தின் குடலை மாலையாகப் போடுவதற்குப் பதிலாக கோழியின் குடலைப் போட ஒப்புக்கொண்டதாக இங்கு ஒரு பெரியவர் என்னிடம் கூறினார். பக்தர்கள் சொன்னால் சுவாமிகள் கேட்பர். பக்தி எனும் வலைக்குள் கட்டுப்படாத சாமிகளே இல்லை. அன்பின் சக்தி அத்தகைய அவரிடம் நீங்கள் "சுவாமி காலம் மாறி வருகிறது. கோழியைக் கிழித்துக் குடலை மாலையாகப் போடுவதைக் குழந்தைகள் பார்க்கிறார்கள் கோழிக்குபதில் பூக்களைக் குடல்கள் போல கட்டி வைக்கிறோம். அவற்றை மாலையாக அணிந்து, உள்ளுறுப்புகளாக நினைத்துச் சாப்பிடுங்கள்'' என வேண்டுகோள் விடுங்கள். உங்களைக் காப்பாற்றும் அச்சாமி அவசியம் உங்கள் வேண்டுகோளை ஏற்றுக்கொள்வார்.

எங்களூரிலும் நரபலிக்குப் பதிலாகப் பூசணிக்காய் வெட்டி அதன் மீது குங்குமம் தடவும் பழக்கமுண்டு. உயிர்ப்பலிக்குப் பதிலாக மடைப்பலி கொடுக்கும் வழக்கமுண்டு உங்கள் அனைவருக்கும் மிக்க நன்றி என்று கூறி பேச்சை முடித்தேன். அவர்களின் பலத்த கைதட்டல் என் கருத்துககளை அவர்கள் உள்வாங்கியுள்ளனர் என்ற அபிப்பிராயத்தையே எனக்குத் தந்தது. பூசை புனஸ்காரம் முடிய அருகில் இருந்த ஒரு வீட்டுக்கு அழைத்துச் சென்றனர்.

அங்கு மாலைத் தேனீர் அருந்திவிட்டு மாணவர்களுடன் விடுதிக்குப் பயணமானேன். அன்றிரவு எனக்குத் தங்க இன்னொரு விடுதி ஒழுங்கு செய்திருந்தனர்.

அது ஒரு அழகான விடுதி. விடுதியிற் சிரம பரிகாரங்கள் முடித்தபின் சிங்கப்பூர் தேசிய பல்கலைக் கழகத்தில் மானிடவியல், சமூகவியலில் இணைப்பேராசிரியராகக் கடமை யாற்றும் என் மகன் சித்தார்த்தனுக்குப் போன் பண்ணி எனது அன்றைய அனுபவங்கள் அனைத்தையும் பகிர்ந்து கொண்டேன்.

போனில் எனது உரை ஒரு நீண்ட உரையாக இருந்தது. அரைமணி நேரம் நான் அவனுடன் தொடர்ச்சியாகப் பேசியிருப்பேன். அவனிடம் சொல்ல என்னிடம் நிறைய விடயங்கள் இருந்தன. எல்லாவற்றையும் அமைதியாக உள்வாங்கிக் கொண்ட அந்த மானிடவியலானான என் மகன் ஒரு கேள்வியை என் முன் வைத்தான். மிக முக்கியமான கேள்வி அது.

“அப்பா அவர்களின் நம்பிக்கையில் கை வைக்க, அவர்களுக்குப் புத்திமதி கூற நீங்கள் யார்?” “உங்கள் அறிவை அவர்கள் மீது திணிக்கிறீர்களா?”

அவனது அந்தக் கேள்வி ஒரு தடவை என்னை அதிர வைத்தது. “மகனே நானும் அவர்களில் ஒருவன்” எனப் பதில் தந்தேன். அதனை மறுத்து அவன் தன் வாதங்களை முன் வைத்தான்.

மானிடவியலில் முறையான பயிற்சி பெற்ற அவனின் வாதங்கள் என்னைப் பல திசைகளில் சிந்திக்க வைத்தன. அவனுக்கும் எனக்குமிடையே ஒரு நீண்ட ஆய்வறிவு உரையாடலாக அது நீண்டது.

ஒரு மணி நேரத்துக்கு மேல் நாங்கள் இருவரும் உரையாடியிருப்போம். அவன் கருத்துக்கு நான் வசப்படவில்லையாயினும் தெளிந்த ஓடையில் ஒரு சிறிய கல்லை எறிந்தால் அது பல சிறிய தொடர் அலைகளை எழுப்பிச் செல்வதுபோல என்னுள்ளும் பல அதிர்வலைகளை ஏற்படுத்தி விட்டது. அந்த அதிர்வலைகளுடன் உறங்கச் சென்றேன். உறக்கம் வரவில்லை.

○○○

வேண்டாத விளக்கங்களோ. வர்ணனைகளோ இருக்கக்கூடாது. வேண்டிய விளக்கங்களும். வர்ணனைகளும் இல்லாமல் போய்விடவும் கூடாது. உருவம் அமைவதற்கு இன்றியமையாத விஷயங்கள் இவை. கதையில் சில பகுதிகளைக் குறைத்து விட்டால் உருவம் கெடாது. அல்லது உருவம் அமையும். அல்லது உருவம் இன்னும் கச்சிதமாக அமையும் என்று தோன்றினால் அந்தப் பகுதிகளைக் குறைத்துவிட வேண்டும். சொல்லப்போனால்.



ஒரு சிறுகதையில் தேவையில்லாமல் ஒரு பகுதி மட்டுமல்ல. ஒரு வார்த்தையோ. ஒரு காற்புள்ளியோ (‘கமா’) கூட இருக்கக்கூடாது. இருந்தால் அந்த அளவுக்கு அது கதைக்குக் கேடு செய்யும்.

– கு.அழகிரிசாமி





# எங்கட கதை...

முட்கம்பித் தீவின்
ஒரு ஒதுக்குப் புறத்தில்
மரணத்தின் நிழலில்
உயிர்க்குலை நடுங்கச்
சற்றே ஓய்வு எடுக்கிறேன்..

பயத்தில் என் விரல்கள்
என்னை அறியாமலே மண்ணை
விறாண்டுகையில் எனக்கருகே
ஒரு குழி உருவாகி விட்டிருந்தது ..

எனக்குப் பக்கத்தில் படுத்திருந்தவனும்
அவ்வாறே ஒரு குழியை
உருவாக்கி இருந்தான் ....

என் குழியைப் பார்த்தவன்
அது தனக்கான புதை குழியோ
என்று அச்சப்பட்டான் ஐமிச்சப்பட்டான்
எனக்கும் அதே போல்
ஒரு அச்சமும் ஐமிச்சமும்
அவன் குழி மீதும் ஏற்பட்டது .....

ஒரு கட்டத்தில் எங்கள்
அச்சமும் ஐமிச்சமும் அதிகமாகி
அதுவே ஆளாளுக்கு மேல் கொலை
வெறியாகி
எங்களையே நாங்கள் மாறி மாறி
அந்தக் குழிகளுக்குள்
புதைத்துக் கொண்டோம் ...

புதை குழிகளும் ஒரு காலத்தில்
பேசத் தொடங்கும்
என்பது அப்போது எங்களுக்குத்
தெரிந்திருக்கவில்லை....

**– காரைக்கவி**

# கனவும் நனவும்

நித்திரையிலிருந்து காலையில்
விழித்து எழுந்து விட்டாலும்
காணும் எதிர்கால கனவிலிருந்து
விடுபடுவதில்லையே! அது காலம்
எல்லாம் தொடர்ந்து வருகிறதே!
மாறாக எதிர்பார்ப்புகள்
இன்ப துன்பங்கள் பணத்
தேவைகளென பட்டியல்கள்
நீண்டு கொண்டே செல்லுமே
கனவிலும் நனவுலும் ...

# தினங்கள்

ஆண்களுக்கான தினம்
பெண்களுக்கான தினம்
திருநங்கைகள் தினமென
தொடர்ந்து வந்தாச்சு!
இனி! ஆண் பெண்ணாகியதும்
பெண் ஆணாகியதும் தினம்
வரும் எதிர் காலம்!

# பாய்கள் நாட்காலிகள்

ஒரு உறவினரோ! தெரிந்தவரோ!
வீட்டுக்குச் சென்றால்!
முதல் நாள் விரிபாய்
போடுவார்கள் அடுத்தடுத்து
நாட்கள் சென்றால் எறிபாய்
தொடர்ந்து சென்றால்
நடைபாய் தான்
இப்போது நாட்காலிகள்
தான் இப்படி போடப்படுகின்றனவே!

**கலாதினி**
**உடப்பூர் பா.முருகானந்தன்**

# பண்டிதர் வீ.பரந்தாமன் வாழ்வும் பணியும்



படைப்பாளிகள் சமூகத்தைப் பிரதிபலிக்கின்றார்கள். அவர்களின் எழுத்து ஆழ்மன வெளிப்பாடாக அமைகிறது. அது சமூகக் கோலத்தினை இனங்காட்டுவதாக அமைகின்றது. இதன் அடிப்படையில் தமிழ் இலக்கியப் படைப்புக்களின் தோற்றத்திற்கு தனிமனித ஆளுமைகளின் பங்களிப்புக் குறிப்பிடத் தக்கதாகும். தனிமனித ஆளுமைகளில் பண்டிதர் மரபிலே வந்தவர்கள் முதன்மையானவர்கள். தமிழை வளர்த்த இத்தகைய பண்டிதர்களை இரு வகைப்படுத்தலாம். ஒரு வகையினர் மரபினை மட்டும் அடிப்படையாகக் கொண்டவர்கள். இன்னொரு வகையினர் நவீனத்துவத்தை அடிப்படையாகக் கொண்டவர்கள். இவர்களில் பண்டிதர் வீ.பரந்தாமன் இரண்டினையும் அடிப்படையாகக் கொண்ட படைப்பாளியாக விளங்குகின்றார். இத்தகைய பண்டிதரின் வாழ்க்கைப் பின்புலம் மற்றும் எழுத்து முயற்சிகள் ஆகியவற்றை ஆய்வு செய்வதாக இக்கட்டுரை அமைகின்றது.

**வாழ்க்கைப் பின்புலம்**

வாழ்க்கை பற்றிய தேடலாகவே இலக்கியங்கள் காணப்படுகின்றன. அந்த வகையிலே தனிமனித உணர்ச்சியின் வெளிப்பாட்டை எழுத்திலே பண்டிதர் ஆழமாக வெளிப்படுத்தி இருக்கின்றார். எனினும் இவருடைய இலக்கியப் படைப்புக்கள் சமூகத்தின் மனச்சாட்சியையும் பிரதிபலிக்கின்றன.



**கரவை மகள்**
**பா. கிருபாலினி**

இனப்பற்று, மொழிப்பற்று, சமூகப் பற்று, பண்பாட்டுப்பற்று ஆகியவை காக்கப்பட வேண்டும் எனக் குரல் கொடுக்கும் சமூகத்தின் பிரதிநிதியாகக் காணப்படுகின்றார். தமிழரின் வரலாற்றில் வேரும் விழுதும் விட்டு விரிந்த எண்ணற்ற விடயங்களையே தனது இலக்கியங்களில் வெளிப்படுத்தியுள்ளார்.

மரபான உட்கட்டுமானமுள்ள விடயங்களுக்கே முக்கியத்துவம் அளிக்கின்றார். தனிமனித ஆளுமைகளின் பரிணாம வளர்ச்சிக்கு அடித்தளமாகத் தென்படுகின்றார்.

"பண்டிதர் ஒரு விடுதலைப்பற்றாளர். தமிழினம் தன்னாட்சி பெறவேண்டும் என்பதில் அசையாத நம்பிக்கையுடையவர். தமிழர் தாயகம் விடுதலை பெற்று இறையாட்சியுடைய சுதந்திர நாடாக உருவாக வேண்டும் என்பது அவரது ஆழமான அபிலாசை, தமிழீழத்தை இலட்சியக் கனவாகக் கொண்டவர். தமிழ்மொழி மீது ஆழமான புலமையுடையவர். தமிழ் மொழியின் தனிச்சிறப்பை உணர்ந்தவர். தமிழைத் தெய்வமாகத் தொழுபவர். இன்பத் தமிழில் இறையின்பம் காண்பவர்."

"பண்டிதர் அவர்கள் தமிழ், கடல்கொண்ட குமரிக் கண்டத்தில் தான் பிறந்தது என்ற கருத்தை உடையவர். அது பொதிகை மலையிலே சிறப்படைந்தது என்பார். அத்துடன் தமிழானது சங்கம் என்னும் பள்ளியிலே இயல், இசை, கூத்துகளைப் பயிற்றுவித்து தன்னைச் செம்மையாக்கியது என்பார்."

இத்தகைய பண்புகளையுடைய பண்டிதரின் பிறப்பு, கல்வி, இவருடைய பணிகள், விருதுகள், குடும்பவாழ்வு, சமூகம் போன்ற விடயங்களைப் பண்டிதரின் வாழ்க்கைப் பின்புலத்தின் கீழ் நோக்குவோம்.

**பிறப்பும் கல்வியும்**

இலங்கையில் யாழ்ப்பாணத்தில் பருத்தித் துறைப் பகுதியில் புலோலி என்னும் ஊரில் வீரகத்திப்பிள்ளை பாறுபதிப்பிள்ளை தம்பதி யினருக்கு 1942ஆம் ஆண்டு ஆவணி மாதம் 15ம் திகதி இரண்டாவது மகனாகப் பிறந்தார். இவருக்கு ஐந்து ஆண் சகோதரர்களும் இரண்டு பெண் சகோதரிகளும் இருந்தனர். வறுமையுற்ற குடும்பத்தில் பிறந்த இவர் தொடக்கக் கல்வியை (01-05) யா/புற்றளை மகாவித்தியாலயத்தில் கற்றார். தொடர்ந்து கரவெட்டி யா/விக்னேஸ்வராக் கல்லூரியில் ஆறாம் வகுப்பில் இருந்து தனது கல்வியைக் கற்றார். ஒன்பதாம் வகுப்பிலிருந்து ஆங்கில மொழி மூலம் கல்வி கற்ற இவர் க.பொ.த(சா/த) தேர்வில் விஞ்ஞான மாணவனாகத் தனது கல்வியைத் தொடர்ந்தார்.

சிறுவயதில் இருந்து இவர் வாழ்ந்து வந்த சூழல் தமிழ் உணர்வை இவருக்கு ஏற்படுத்தியது. தமிழ் உணர்வு ஆழமான மொழிப்பற்றை உருவாக்கியது. இதன் வழி தமிழ் மீது ஆர்வம் காட்டிய பண்டிதர் இனப்பற்று, நாட்டுப்பற்று என்பவற்றில் அதிக ஈடுபாடுடையவராக விளங்கினார். இதனைப் பின்வரும் வரிகள் வெளிப்படுத்துகின்றன.

> “தாலாட்டுப் பாடல்கள், விளையாட்டுப் பாடல்கள், தொழிற் பாடல்கள் மற்றும் கொண் டாட்டம் தொடர்பான பாடல்கள், ஒப்பாரிப் பாடல்கள் முதலிய வாய்மொழி இலக்கியங்களின் இன்பத்தை நாள்தோறும் நுகரும் சூழலில் வளர்ந்தேன்

மரபுக்கல்வியில் சிறந்தவராகத் திகழும் இவர் தனது தந்தையின் விருப்பத்திற்கு ஏற்பத் தமிழ் கல்வியை தமிழ் முனி, தமிழ்த்தாத்தா என்று அழைக்கப்படும் கந்த முருகேசனாரிடம் கற்றுக்கொள்ள விரும்பினார். 1959ஆம் ஆண்டு தமிழகத்தில் திண்ணைப் பள்ளிக்கூடம் நடத்திக் கொண்டிருந்த கந்த முருகேசனாரிடம் சென்று தமிழ், எண்கணிதம், தருக்கம், அரசியல், மெய்யியல், சமூகவியல், முதலானவற்றைக் கற்றார். திண்ணைப் பள்ளியில் இவருடைய தமிழ்க்கல்வி குருகுலக்கல்வி முறையாக அமைந்தது. தொடர்ந்து ஓராண்டு காலம் பால பண்டிதர் கல்வியையும் ஈராண்டு காலம் பண்டிதர் கல்வியையும் கற்றார்.

ஆரிய திராவிட பாஷா அபிவிருத்திச் சங்கத்தினால் நடாத்தப்பட்ட இரண்டு பரீட்சை களிலும் சித்தியடைந்து பண்டிதர் பட்டத்தைப் பெற்றுக் கொண்டார். அவருடைய குரு இறக்கும்வரை அவருடன் குரு குல வாழ்வு வாழ்ந்தார்.

> “அவரிடம் பாடம் கேட்டதால் பெற்ற அறிவைவிட அவருடன் வாழ்ந்ததால் பெற்ற அறிவே மிகுதியாகும். எனக்கு இன்றுள்ள அறிவு, திறன், மனப்பாங்கு, விருத்தி ஆகியவற்றின் கணிசமான பகுதி எனது குருவின் அருளினால் என்னை அடைந்ததே”

எனப் பண்டிதர் தனது அறிவு வளர்ச்சி பற்றி வலம்புரிப் பத்திரிகையில் வெளிவந்த நேர்காணலில் கூறியிருக்கின்றார்.

**ஆசிரியப்பணி**

கல்வி கற்கும் காலத்தில் இருந்தே ஆசிரி யப்பணியின் முக்கியத்துவத்தை உணர்ந்திருந்த பண்டிதர் பள்ளிப் படிப்பை முடித்தவுடன் ஆசிரி யப் பணியில் தன்னை ஈடுபடுத்திக் கொண்டார். தனது ஆசிரியத் தொழிலை தமிழ் மக்களுக்குச் செய்யும் சேவையாகவே கருதினார்.

> “1967ஆம் ஆண்டு இலங்கைப் பல்கலைக் கழகக் கொழும்புப் பிரிவு தமிழ்ப் பேராசிரியர், கலாநிதி ஆ. சதாசிவம் அவர்கள் தொகுத்த தமிழ்ப் பேச்சு வழக்கு அகராதிக் குழுவில் ஒருவராக கடமையாற்றியுள்ளார்.”

1970ஆம் ஆண்டு மாணவ ஆசிரியராகத் தனது சேவையை ஆரம்பித்தார். (1973-1974) ஓராண்டு பயிற்றுவிக்கப்பட்ட ஆசிரியராகத் திருகோணமலை இந்துக்கல்லூரியில் கட மையாற்றினார்.

1975ஆம் ஆண்டு ஆசிரிய நியமனம் பெற்று யா/புற்றளை மகாவித்தியாலயத்தில் பதினொரு ஆண்டுகள் ஆசிரியராகப் பணி புரிந்தார். உடுத்துறை மகாவித்தியாலயம், மணற்காடு தமிழ்க்கலவன் பாடசாலை என்பவற்றில் 1983ஆம் ஆண்டுவரை ஆசிரியராகப் பணி யாற்றினார். சம காலத்தில் போராளிகளுடன் இணைந்து அவர்களுக்கு தமிழ் கற்பிக்கும் ஆசிரியராகப் பொறுப்பேற்றுக்கொண்டுள்ளார். இதற்கு பின்வரும் வரிகள் சான்றுகளாக அமைகின்றன.

> “1987ஆம் ஆண்டு வடமராட்சியில் சிறிது காலம் அரசியற் துறைக்குப் பொறுப்பாக இருந்தபோது தமிழ்ப் போராட்டத்திற்கு ஆதரவளிப்பவர்களில் ஒருவராகக் காணப்பட்டார்.”

"1991ஆம் ஆண்டு தமிழ்ப் போராளிகளுக்குத் தமிழ் கற்பிக்கும் ஆசிரியராகப் போராளிகளுடன் இணைந்து கொண்டார்."

1996ஆம் ஆண்டுவரை பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரியிலும் 2002ஆம் ஆண்டு வரை முல்லைத்தீவு கோம்பாவில் விக்னேஸ்வரா வித்தியாலயத்திலும் ஆசிரியராகப் பணியாற்றினார். 2002ஆம் ஆண்டு ஓய்வு பெற்ற இவர் தனது ஓய்வின் பின்னர் மூன்று ஆண்டுகள் கிளிநொச்சியில் உள்ள தமிழ்ப்பயிற்சிப் பள்ளியில் (தனியார் கல்வி நிலையம்) ஆசிரியராகப் பணியாற்றினார். அத்துடன் இவர் ஆசிரியராக இருந்த காலப்பகுதியில் தமிழ்மொழியறிவு குறைந்துள்ளமைக்குப் பல காரணங்களைச் சுட்டிக்காட்டியுள்ளார். இதனை அவர் வலம்புரிப்பத்திரிகையில் கூறும் நேர் காணலில் இருந்து அறியமுடிகிறது.

"பாடசாலை ஆசிரியர்கள் இரங்கத்தக்கவர்கள். மாணவரை வாசிக்கச் சொல்வது அல்லது தாமே வாசித்துக் காட்டுவது , பாடத்தில் உள்ள சரி பிழைகளை ஆராய்து அவற்றை மாணவர்களுக்குத் தெளிவுபடுத்துவதில்லை."

"பெரும்பாலான மாணவர்கள் தமிழ்தானே வரும் என்னும் மனப்போக்குடையவர். வீட்டில் தொலைக்காட்சி பார்ப்பதில் பெரும் பொழுதைக் கழிப்பவர். கைத்தொலைபேசி கொண்டு காலத்தை வீணடிப்பவர்கள்."

எனப் பாடங்கற்பிக்கும் ஆசிரியர்கள் விடும் தவறுகளையும் பாடங்களைக் கற்கும் மாணவர்கள் விடும் தவறுகளையும் நேரடியாகச் சுட்டிக்காட்டியுள்ளார்.

பாடத்திட்டத்தில் மாற்றத்தைக் கொண்டு வருவதற்காகச் செயற்பட்ட ஒருவராக விளங்குகின்றார். மாணவர்களுக்கு எவ்வாறு தமிழ் கற்பிக்கப்பட வேண்டும் என்பதை பின்வருமாறு கூறியிருக்கின்றார்.

"மரபு மாறாத இலக்கண இலக்கிய அறிவே முதலில் மாணவருக்கு புகட்டப்பட வேண்டும். உயர்நிலைக் கல்வியில் அத்துறையை விரும்பும் மாணவருக்கு மரபு வழி மொழிக் கல்வியில் நன்கு தேர்ச்சி பெற்றவராயின் மொழி நூற்றுறையில் தெளிந்த அறிவும் ஆற்றலும் உள்ள நல்லாசிரியரால் கற்பிக்கப்பட வேண்டும். புதிய கருத்துக்களைக் கற்பிப்பதற்கும் போது காலம், இடம் முதலியவற்றை அறிந்து செயலாற்றல் வேண்டும். மாணவரிடையே முன் பெற்ற அடைவுகளில் ஒரு முதிர்ச்சி ஏற்பட்ட பின்பே புதியவை புகட்டப்படல் வேண்டும்."

இவ்வாறாகப் பண்டிதருடைய ஆசிரியப் பணிகள் மேன்மையுடைய மகத்தான சேவையாகக் காணப்பட்டுள்ளது.

**சமூகப் பணி**

ஆளுமை மிக்கவராகத் திகழும் பண்டிதர் இலக்கியப் புலத்தில் மட்டுமல்லாது தமிழ்ச் சமுதாயத்தை மேம்படுத்துவதற்கும் பல பணிகளைச் செய்துள்ளார். அந்த வகையிலே நீண்டகாலமாக அடக்கி ஒடுக்கப்பட்ட முதலாளி, தொழிலாளர் என்ற வர்க்க வேறுபாட்டை நீக்கித் தொழிலாளர் நலன் பேணப்பட வேண்டும் என செயற்பட்டவராக விளங்குகின்றார். அத்துடன் உயர் சாதியினரால் காலம் காலமாகப் பிணித்து வந்த சாதிய அடக்குமுறையை வேரோடு களைய வேண்டும் என்பதற்காகப் பல முயற்சிகளை எடுத்துள்ளார். இதற்கு இவரது எழுத்து முயற்சிகள் சான்றாக அமைகின்றன.

தமிழர் சமுதாயத்தை முழுமையாகப் பாதுகாக்க வேண்டும் என்ற நோக்கோடு செயற்பட்ட இவர் போதைப்பொருள் பாவனைக்கு எதிராகக் குரல் கொடுத்துள்ளார். பல அறக்கருத்துக்களை விவாதமேடைகள், கவியரங்கங்கள், சொற்பொழிவுகள் என்பவற்றினூடாகப் போதித்துள்ளார். அத்துடன் பெண்ணிய அடக்குமுறைக்கு எதிராகவும் செயற்பட்டுள்ளார். தன்னுடைய தமிழர் சமூகத்தைக் காக்கும் பொருட்டு மக்களுக்கு நாட்டுப்பற்றையும், மொழிப்பற்றையும் தனது கல்வியறிவினூடாக வெளிப்படுத்தி உள்ளார். தமிழர்களின் உரிமைகளைப் பாதுகாக்கும் பொருட்டு விடுதலைப்புலிகளுடன் இணைந்து செயற்பட்டுள்ளார். இதற்கு பின்வரும் கூற்றுக்கள் சான்றாக அமைகின்றன.

"பண்டிதர் பரந்தாமன் அவர்களின் விடுதலைப் பற்று அவரை எமது விடுதலை இயக்கத்துடன் இதயபூர்வமாக இணைத்து வைத்திருக்கிறது."

மனித நேயப்பண்புடையவராகவும் தனது சமூகத்திற்குப் பொதுவுடமைக் கருத்துக்களை எடுத்துக்கூறியவராகவும், தமிழ் மக்களுக்குச் சமஉரிமை, சமவாய்ப்புக்கள், கிடைக்க வேண்டும் என்பதற்காகவும் போராடியுள்ளார். சீதனத்தொல்லை, காதற் தோல்வி, அரசியல் குறித்த எள்ளல், சமுதாய நடைமுறை, தமிழ் மக்களின் நிலை போன்ற பல விடயங்களைச் சமூகத்தின் நன்மை கருதித் தனது உள்ளக் குமுறல்களாக வெளிப்படுத்தியுள்ளார்.

மொழி சீர்குலைந்தால் இனமும், சமுதாயமும் கட்டழிந்து போய்விடும் என்ற தனது உள்ளத்து வெளிப்பாட்டைப் பின்வருமாறு வெளிப்படுத்தியுள்ளார்.

> "தமிழ்க் கொடுமையும் மேன்மையும் கெட்டுப் போய்க் கிடக்கின்றது. தமிழ் தாழ்நிலையுற்றுச் செத்துக்கொண்டிருக்கின்றது. தமிழ் வீழ்ச்சியை நிமிர்த்த வேண்டுமென்றால் தமிழ்க் கல்வியை தமிழை நன்கறிந்த தமிழ்ப் பற்றுள்ள பேரறிஞரே திட்டமிடவும் தமிழிற் புலமையுடைய நல்லாசிரியரும் தமிழ் உலகிற்கு வேண்டும்."

மாணவர்களது கல்வியில் அக்கறை கொண்டவராகத் திகழும் இவர் மரபு மாறாத இலக்கண, இலக்கிய கல்வியை மாணவர்களுக்குச் சரியான முறையில் புகட்டவேண்டும் என்பதில் கண்ணும் கருத்துமாகச் செயற்பட்டுள்ளார். இவற்றுடன் ஏழை மாணவர்களுக்கு இலவசமாகக் கல்வியைப் போதித்துள்ளார். இவ்வாறாக இவருடைய சமூகப்பணிகள் பலவாகக் காணப்படுகின்றன.

**குடும்ப வாழ்வும் நண்பர்களும்**

பண்டிதருடைய தமிழ்ப்பணியில் அவரது குடும்பம் மற்றும் நண்பர்கள், சமூகத்தினர் உருவப்பின்புலமாக இருந்துள்ளனர். அந்த வகையிலே இளமைக் காலம் முதல் பண்டிதருடைய பெற்றோர்கள் இவருடைய படைப்பாக்கத்திற்கு ஆதரவாக இருந்துள்ளனர். பண்டிதருக்குச் சிறுவயதில் இருந்தே தமிழ் மீதான ஆர்வம் அதிகமாகக் காணப்பட்டமைக்கு அவர் வாழ்ந்த சூழலே காரணமாகும். ஆசிரியப் பயிற்சியில் இணைவதற்கு முன்னரே கவிதை எழுதுவதிலும் இலக்கியக் கட்டுரைகள் எழுதுவதிலும் தனது நேரத்தைப் பயன்படுத்திக் கொண்டார்.

1970ஆம் ஆண்டு சொர்ணாம்பிகை என்பவரைக் காதல் திருமணம் செய்து கொண்டார். இவருடைய இல்லற வாழ்வின் பயனாக மூன்று ஆண் குழந்தைகளையும் ஒரு பெண் குழந்தையும் பெற்றெடுத்தார். தன் பிள்ளைகளுக்கு முல்லை, பரமேஸ்வரன், பொன்முடி, ராகவன், ஆனந்தன், புலவன் எனப் பெயரிட்டுள்ளார். போராளிகள் வாழ்ந்த சூழலிலே பல காலம் மனைவி பிள்ளைகளோடு வாழ்ந்தார். தமிழ்ப் போராளிகள் யாழ்ப்பாணத்தில் இருந்து வன்னிப் பிரதேசத்திற்கு இடம் மாறிய சமகாலத்தில் பண்டிதரும் தனது வசிப்பிடத்தைக் கிளிநொச்சிப் பிரதேசத்திற்கு மாற்றிக் கொண்டார். தமிழ்ப் போராளிகளுக்கும் இவருக்கும் நெருக்கமான உறவு காணப்பட்டது. போராளிகளுக்கு மறைமுகமாக ஆதரவளிப்பவராகக் காணப்பட்டார். தனது சமூகம் மீது மிகுந்த அக்கறை உடையவராகச் செயற்பட்டார்.

தன் மனைவியை பிரிந்த பண்டிதர் மனைவியின் முதலாம் ஆண்டு(1993) நினைவின் போது ஈழநாதம் என்ற பத்திரிகைக்கு எழுதிய ***எவ்விரவில் தூங்கும் இனி*** என்ற கவிதையின் பின்வரும் வரிகள் அவருடைய குடும்ப வாழ்வினையும் அவர் மனைவி மீது கொண்ட பாசத்தினையும் வெளிப்படுத்துகின்றது.

## கலங்க வைக்கும் எண்ணங்கள்

கணந்தோறும் எங்கள் மனதை
கதிகலங்கச் செய்கிறது எமது
மனதில் அலைமோதும்
தெளிவற்ற பலவகை எண்ணங்கள்

நடந்து முடிந்தவை யாவும் நாம்
அனுபவித்து முடிந்த அனுபவங்கள்
அவை தெளிவற்ற எம் மனதை
தெறிக்கச் செய்யும் எண்ணங்களாக

நடக்க முடியாதவைகள் என்பதை
மனது நன்கு அறிந்திருக்கும்
சிறுவயது முதல் பதியவைக்கப்பட்ட
பயங்கள் பதறவைக்கும் எண்ணங்களாக

என்றோ ஒருநாள் நிச்சயமாக நடக்கும்
மரணம் என்பதை அறிந்திருக்கும் மனது
கலங்க வைக்கும் எண்ணங்கள் நாளும்
வாழ்வை சூனியமாக்கும்
மரண பயத்தினால்

**– குப்பிளான் குமரன்**

"ஒற்றைப்பாய் மேலுன் உடுத்தாடை மெல்
லணையா இட்டுக் கிடக்கவிட் டேகிணையோ? –
முற்கழிந்த அவ்விரவின் மெய்யணையில் ஆரத்
துயினெஞ்சம் எவ்விரவில் தூங்கும் இனி?"

போரிலே தன் மனைவியை இழந்த பண்டிதர் தான் பிறந்த மண்ணான தென்புலோலியூரிற்குத் திரும்பினார். அங்கு அழகான வீடொன்றை அமைத்து அதற்கு மாமறவர் மணிமண்டபம் எனப் பெயரிட்டுத் தனது பிள்ளைகளுடன் இன்றும் வாழ்ந்து கொண்டிருக்கின்றார்.

விடுதலைப் புலிகளுடன் இவருக்கு நெருக்கமான தொடர்பு இருந்துள்ளது. அவர்களுடன் வாழ்ந்த சூழல் இவருடைய எழுத்து முயற்சிகளுக்குத் தூண்டுதலாக இருந்துள்ளது. பண்டிதருடைய படைப்புக்கள் பத்திரிகைகளிலும் சஞ்சிகைகளிலும் வெளிவந்துள்ளன. அதற்கு குடும்பத்தினரதும் நண்பர்களினதும் ஒத்துழைப்பு முக்கியமானதாக இருந்துள்ளது. இலக்கியங்களை எழுதிய காலப்பகுதியில் அரசியல் ரீதியாகவும் பொருளாதார ரீதியாகவும் பல சிக்கல்களை எதிர்கொண்டுள்ளார்.

பண்டிதர் ஏடுகளிலே எழுதிய கவிதைகள், கட்டுரைகள், அகராதிகள் போன்றவற்றை நூலாக்கம் செய்து வெளியிடுவதற்கும் மேடை நாடகங்களை நெறியாள்கை செய்வதற்கும் பல நண்பர்கள் உதவியாக இருந்துள்ளனர். அந்தவகையிலே,

'1993இல் இவருடைய கவிதைகளைத் தட்டச்சில் பொறித்து மூன்று தொகுதிகளாக நூல்வடிவில் வெளியிட்டவராகப் போராளியும், இளங்கவிஞனுமாகிய திரு க.இளந்திரையன் விளங்குகின்றார்.'

இவரோடு இணைந்து யோகரத்தினம் யோகி, வே. பரமநாதப்பிள்ளை, செ.வ. தமிழேந்தி, திரு.தமிழன்பன், திரு.சுரேசு, கு.அரசேந்திரன் போன்றோரும் பண்டிதருடைய எழுத்து முயற்சிகளை வெளியிடுவதற்குத் துணை நின்றுள்ளனர். இ. முருகையன் நாடகங்களை நெறியாள்கை செய்ய உதவியாக இருந்துள்ளனர். அத்துடன் ஈழத்தில் வெளிவந்த பத்திரிகைகளின் ஆசிரியர்களும், இதழ்களின் ஆசிரியர்களும் இவரது படைப்புப்கள் மக்கள் மத்தியில் சென்றடைவதற்கு உதவியாக இருந்துள்ளனர்.

**விருதுகள்**

சிந்தனையாற்றல் நிறைந்த பண்டிதர் பல பாராட்டுக்களையும் விருதுகளையும் பெற்றுக் கொண்டுள்ளார். தமிழ் உணர்வோடும் நாட்டுப்பற்றோடும் செயற்பட்ட இவர் கவிஞராகவும், பாடலாசிரியராகவும், பேச்சாளராகவும், எழுத்தாளராகவும், நெறியாளராகவும், யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தின் வருகைதரு விரிவுரையாளராகவும் விளங்கியுள்ளார். இன்றுவரை பண்டிதருடைய தமிழ்ப் பணிகள் பலராலும் பேசப்படுகின்றது. இவர் தமிழீழ விடுதலைப்புலிகளின் தலைவர் பிரபாகரனிடம் இருந்து பாடலாசிரியர் விருதினைப்பெற்று ஆறு தடவைகள் பல பரிசில்களைப் பெற்றுள்ளார்.

2002ஆம் ஆண்டு கிளிநொச்சிக் கல்வி வலயத்தினால் வழங்கப்பட்ட நல்லாசிரியர் விருதினைப்பெற்றுப் பொன்னாடை போர்த்திக் கௌரவிக்கப்பட்டுள்ளார். தொடர்ந்து 2014ஆம் ஆண்டு வடமராட்சி வடக்கு கலாசாரப் பேரவையின் இலக்கியத்துறை ***"கலைப்பரிதி"*** விருதினையும் பெற்றுக்கொண்டுள்ளார். சமகாலத்தில் வடமராட்சிக் கல்வி வலயத்தின் இயல்துறை ***"கலை வாரிதி"*** விருதினையும் பெற்றுக்கொண்டார். 2015ஆம் ஆண்டு பண்டிதரைக் கௌரவப்படுத்தும் முகமாகக் கிளிநொச்சியில் பண்டிதர் வீ. பரந்தாமன் கவின் கலைக்கல்லூரி நிறுவப்பட்டுள்ளது.

2017ஆம் ஆண்டு அகில இலங்கை இளங்கோக் கழகம் ***"தமிழ் மாமணி"*** விருதை வழங்கி பண்டிதருக்கு கௌரவத்தை வழங்கியுள்ளது. 2021ஆம் ஆண்டு யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் இடம்பெற்ற இரண்டாவது அனைத்துலகத் தமிழியல் ஆய்வு மாநாட்டில் ஈழத்துத் தமிழ் இலக்கியத்திற்கும், தமிழிற்கும் தொண்டாற்றிய புலமையாளன் என்ற கௌரவத்தினைப் பெற்றுள்ளார். 2022 ஆம் ஆண்டு யாழ் வென்மேரி அறக்கட்டளை வழங்கிய சாதனையாளர்கள் விருது விழாவில் பண்டிதர் ***"வென்மேரி"*** விருதினைப் பெற்றுக் கௌரவிக்கப்பட்டுள்ளார்.

**எழுத்து முயற்சிகள்**

ஈழத்தில் போர்ச்சூழலில் வாழ்ந்த பண்டிதரின் படைப்புக்கள் பலவாகக் காணப்படுகின்றன.

"1960 ஆம் ஆண்டு எழுத்துலகிற்குள் நுழைந்து முப்பது ஆண்டுகளுக்கு மேலாக எழுதிலக்கி யங்களோடு பயணித்திருக்கின்றேன்."

என்று தனது கவிதைத்தொகுப்பில் அவரது உரைப்பகுதியில் கூறியிருக்கின்றார். இவரின் முயற்சியில் கவிதைகள், கட்டுரைகள், பாட லாக்கங்கள், அகராதிகள் என்பன ஏடுகளிலே எழுதப்பட்டுள்ளன. அவற்றில் சில நூலாக் கம் பெற்றுள்ளன. மரபுத்தமிழை அழியாது பாதுகாக்க வேண்டும் என்ற எண்ணத்தோடு செயற்பட்ட இவர் தான் பிறந்த மண்ணை நேசிப்பவராக விளங்கியதோடு தான் வாழ்ந்த போர்க்காலச் சூழலிலே அதிகளவான கவிதைகளை எழுதியுள்ளார்.

ஈழத்தில் வெளிவந்த ***எரிமலை***, ***ஈழநாடு***, ***ஈழநாதம்***, ***தினகரன்***, ***வீரகேசரி***, ***விடுதலை***, ***சுதந்திரன்***, ஆகிய பத்திரிகைகளிலும், ***சாரளம்***, ***தமிழ் உலகம்***, ***தீப்பொறி***, ***இளைய உறுமல்***, ***தாய்நாடு***, ***கலைக்கண்***, ***வெளிச்சம்***, ***கலைச்சுடர்***, ***வானம் எம் வசப்படும்*** ஆகிய இதழ்களிலும் இவருடைய கவிதைகள், கட்டுரைகள் என்பன பிரசுரிக்கப்பட்டுள்ளன. தற்போது இவற்றில் சில பத்திரிகைகளும், இதழ்களும் இடைநிறுத்தம் செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். பண்டிதர் பல அரங்கங்களில் கவிதை களைப் படித்துள்ளார். அந்தவகையிலே கலை இலக்கியக் கருத்தரங்கில் ***"நெஞ்சில் குடியிருக்கும் நினைவுகள்"*** என்ற தலைப்பில் 1995ஆம் ஆண்டு பண்டிதர் கவியரங்கம் ஒன்றைத் தலைமையேற்று நடாத்தியுள்ளார். இந்தக் கவியரங்கத்தில் தில்லைச்சிவன், இ.முருகையன், சோ. பத்மநாதன், சா.வே.

## ரோஜாப்பூ

சூரிய ஒளி மின்னுகின்றவேளை
தோட்டப்புறத்திலே
அனைத்துக் கனவுகளுக்கும்
அப்பாலாய்
பூ ஒன்று பூக்கிறது

வண்ணங்களின் கலவையாய்
மென்மையாய்
இதழ்களுடன்
ஒரு ரோஜா
முடிவற்ற ஓர்
அழகோடு
புனிதம் துணிவு
கொண்ட
காதல் பாசத்தின்
சொல்லப்படாத ஒரு
கதையை
ஒவ்வொரு இதழும்
கொண்டிருக்கிறது

இருப்பினும் அந்த
எழிலுக்கும் அப்பால்
அதில் மறைந்திருக்கும் முட்கள்
வாழ்வின் சிக்கல்
தடுமாற்றங்களின்
ஞாபகங்களாக
பெரும்பாலும்
அழகானது ஓர்
செலவுடனேயே
வருகிறது
ஒவ்வொரு
மலர்ச்சியிலும்
ஒரு பாடம்
வீணாகிறது
ஓ! ரோஜாவே!
நீ உச்சமாய்
ஆழ்கிறாய்!
அது உண்மை
நீ காலநேரமற்ற
ஓர் சின்னம்
என்றும்
புதியதாய்

உனது இனிதான
அழைப்பில் மனித
உள்ளங்களின்
பிரதிபலிப்பை
நாம் காண்கிறோம்.

எனவே மிக
அருமையானதும்
ஒப்பீட்டு க்கு
அப்பாற்பட்டது மான
ரோஜா மலரை
மிக ஆதரவாக
அணைத்துப்
போற்றுவோம்
ஏனெனில் அதன்
பிரசன்னத்தில்
வாழ்க்கையின்
சாரத்தை
எல்லையற்ற
அற்புதத்தை நாம்
கண்டு பிடிக்கிறோம்

**ஆங்கில மூலம்:**
**டாக்டர். பிரசன்ன குமார்**
**மோஹபத்ரா – இந்தியா**

**தமிழ் வடிவம்**
**அன்னலட்சுமி இராஜதுரை**

பஞ்சாட்சரம், ந. வீரமணி ஐயர், காரை செ.சுந்தரம் பிள்ளை போன்றோர் இணைந்து செயற்பட்டுள்ளனர். 1991ஆம் ஆண்டு யாழ்ப்பாண முற்றவெளியில் நடைபெற்ற முத்தமிழ் விழாவில் **"முல்லை முகையவிழ்த்து முன்னே சொரியிலென்ன?"** என்ற கவிதையை அரங்கேற்றியுள்ளார். சம காலத்தில் **"தாய் மண்ணைக் காத்திடுவோம்"** என்ற கவிதையைப் புலிகளின் குரல் வானொலியில் பாடியுள்ளார். 1992ஆம் ஆண்டு **"தீமைகளைக் கண்டு சினந்தெழார் பேடியரே!"** என்ற கவிதையை நல்லூரில் நடத்தப்பட்ட கம்பன் விழாவில் அரங் கேற்றியுள்ளார். 1995ஆம் ஆண்டு **"வேலிவெட்டி வந்தெங்கள் வீட்டுக்குள் வம்புசெய்வோன்.."** என்ற கவிதையை இளைஞர் மன்றம் நடாத்திய கலை இலக்கிய கவியரங்கில் அரங்கேற்றியுள்ளார். இவை யாவும் பண்டிதரால் எழுதப்பட்ட கவிதைகள் ஆகும். இவருடைய கவியரங்கக் கவிதைகளும் வானொலிக் கவிதைகளும் தமிழுக்கு அணி சேர்ப்பனவாக அமைந்துள்ளன.

1968ஆம் ஆண்டில் **"மனிதரும் கடவுளும்"**, 1975ஆம் ஆண்டில் **"தமிழ் ஒன்பதின் பயிற்சி வினாவிடை"**, 1986ஆம் ஆண்டில் **"தமிழ் மலர்"**, 1990ஆம் ஆண்டில் **"புதியதோர் புறம்"(ஒலி நாடா)**, 1995ஆம் ஆண்டில் **"தமிழ் நடந்த தடங்கள்"**, 1996ஆம் ஆண்டில் **"கெரில்லாப் போர் விரகுகள்"**, 2001ஆம் ஆண்டில் **"பண்டைக் குமரியும் பழங்குடித் தமிழரும்"**, 2004ஆம் ஆண்டில் **"வேரடி வழித் தமிழ் சொற்பிறப்பியல் சிற்றகரமுதலி"**, 2005ஆம் ஆண்டில் **"திருக்குறளில் செந்தமிழாட்சி"**, 2008ஆம் ஆண்டில் **"அருகிவரும் புழந்தமிழ்ப் பேச்சு வழக்கு சொற்பிறப்பியல் அகராதி" (அ மட்டும்)**, 2015ஆம் ஆண்டில் **"தமிழர் உறவுமுறைச் சொல்வழக்கு அகராதி"** ஆகிய பத்து நூல்களையும் ஒரு ஒலி நாடாவையும் வெளியிட்டுள்ளார். அந்த வகையிலே பண்டிதருடைய எழுத்து முயற்சிகளை பின்வருமாறு வகைப்படுத்தலாம்.

- கவிதைகள்
- கட்டுரைகள்
- அகராதிகள்
- பாடல்கள்
- நாடகங்கள்

**கவிதை முயற்சிகள்**

பண்டிதருடைய பெரும்பாலான கவிதைகள் போர்க்காலத்தில் எழுதப்பட்டவையாகக் காணப் படுகின்றன. இவருடைய கவிதைகள் தனிமனித உணர்ச்சியின் வெளிப்பாடாக அமைந் துள்ள போதிலும் அவை சமூகத்தினைப் பிரதிபலிப்பதாகவே அமைந்துள்ளது எனலாம். இவருடைய கவிதைகள் தமிழ்ப்புலமையும் விடுதலைப் பற்றும் ஒன்றிணைந்தவையாகவே காணப்படுகின்றன. ஆங்காங்கே எழுதப்பட்டிருந்த பண்டிதருடைய கவிதைகள் திரு. க. இளந்திரையன் என்பவரால் தொகுக் கப்பட்டுள்ளது. இதனைப் பின்வரும் வரிகளில் காணலாம்.

"நாளேடுகள், சுவடிகள், அரங்குகள் முதலிய வற்றில் வெளியான 95 கவிதைகளைத் தொகுத்து தமிழ் நடந்த தடங்கள் என்ற கவிதைத் தொகுதியாக நூலாக்கம் செய்து திரு.க. இளந்திரையன் வெளியிட்டுள்ளார்."

அனுபவத் தாக்கங்களையும் தமிழ் மீதான பற்றினையும் விடுதலை உணர்வையும் இவருடைய கவிதைகள் பறை சாற்றுகின்றன. இதற்குச் சான்றாகத் தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வே. பிரபாகரன் பண்டி தருடைய கவிதைகள் பற்றிக் கூறும் கருத்துக்களில் இருந்து அறியலாம்.

"பண்டிதர் அவர்களின் தமிழ்ப்புலமையும் ஒன்றிணைந்து, அவரது மரபுக்கவிதைகளுக்கு புதிய பொலிவும், செழுமையும் கொடுக்கின்றன. மரபுக்கவிதைகள் அருகிவரும் இக்காலகட்டத்தில், இக் கவிதை வடிவத்திற்குப் புத்துயிரூட்டும் பண்டிதர் அவர்கள், அதில் தனது அனுபவத் தாக்கங்களை ஆழமாக, பதிவுசெய்துள்ளார். அவரது கவிதைகள் விடுதலைப்பற்றைப் பறைசாற்றி நிற்கின்றன."

உணர்ச்சிக்கும் ஓசைக்கும் இடமளித்த இவரது கவிதைப் படைப்புக்களில் நெஞ்சில் குடியிருக்கும் நினைவுகள், நல்லையல்லை நெடுவெண்நிலவே, அவ்ரோ இழந்த அரசுப் புலம்பல், புரட்சி நெருப்பில் மூழ்கின்றது முதலிய கவிதைகள் பண்டிதருக்கு அதிக புகழைக் கொடுத்துள்ளது. இவற்றுள் நல்லையல்லை நெடு வெண்ணிலவே என்னும் கவிதையில்,

"சிறுவர் மகிழார்: இளையோர் நயவார்:
பாடுநர் நோக்கார்: பகையறக் களத்தில்
ஆடுநர் வேண்டார்: நீடொளி பரப்பி
நல்லை அல்லை நெடுவெண் நிலவே!"

மேற்குறிப்பிட்ட அடிகள் போர்ச் சூழலில் மக்களின் நிலையை முரண் சுவையூடாக வெளிப்படுத்தி நிற்பதால் அதிகளவு வாசகர்

“பூ”என்று பூமிக்குப் பேரொன்(று)உண்டு
“பூ”தலமும் பூமிக்குப் பெயரதாமே
“பூ”சிரிக்கும் என்றிடிலோ பொருளதற்குப்
“பூ”மியின்கண் வாழ்வோரைப் பேசலாகும்

“பூ”ப்போன்ற மனமுடைத்தார் பெண்களென்றோ!
“பூ”வையர்க்குப் ‘பூவை’யென்னும் பெயருமாச்சு
“பூ”வினைப்போல் மென்மையவர்க்(கு) என்பதாலும்
“பூ”வையென்ற பெயரென்றால் பொருந்தும் அஃதும்

“பூ”மியினைப் பொறுமைக்குப் பொருந்தச்சொல்வார்
“பூ”வையரும் பொறுமைமிக்கோர் புகழ்ச்சியில்லை
“பூ”க்கொண்ட மதுபோதை யூட்டும் பெண்டிர்
“பூ”தம்ஐந்தும் பொதிந்தஇன்பச் சுனைபோ லாவார்




களைக் கவர்ந்த கவிதை வரிகளாக விளங்கு கின்றது. இது இவருடைய கவிதை முயற்சி களுக்கு சான்றாகச் அமைகின்றது.

**கட்டுரை முயற்சிகள்**

“தமிழ் மொழியைப் பழித்துரைத்தால் எனையீன்ற
தாயெனினும் அன்னாளைக் கொல்ல வேண்டும்”

என்று பாடுகின்ற பண்டிதர் கவிதைகள் மட்டு மன்றி பல கட்டுரைகளையும் எழுதி யுள்ளார். இவருடைய கட்டுரைகள் தமி ழுக்குப் பெரும்பேறாய் அமைந்துள்ளன. இவரால் எழுதப்பட்ட கட்டுரைகள் சில நூலாக்கம் பெற்றுள்ளன. பண்டிதர் அவர்கள் சிறந்த கவிஞர் மட்டுமல்லாமல் சிறந்த உரை நடை யாசிரியராகவும் விளங்கியுள்ளார். இதற்கு இவருடைய கட்டுரைகள் எடுத்துக் காட்டாக அமைகின்றன.

இவருடைய கட்டுரைகள் போர் சார்ந்ததாக வும், கடவுள் மறுப்பு சார்ந்ததாகவும், பழங் குடித்தமிழரின் வாழ்வு சார்ந்ததாகவும், திருக்குறளில் தூய தமிழ்ச் சொற்களின் பிரயோகம் சார்ந்ததாகவும் காணப்படுகின்றன. இவரது கட்டுரைகள் விமர்சன ரீதியாகவும் திறனாய்வு ரீதியாகவும் காணப்படுகின்றன. அந்த வகையிலே இவர் எழுதிய கட்டுரைகளாகப் பின்வருவன அமைகின்றன.

- தெள்ளுற்ற தமிழமுதின் சுவை கண்டார் (1992)
- மனிதரும் கடவுளும் (1968)
- கெரில்லாப் போர் விரகுகள் (1996)
- திருக்குறளில் செந்தமிழாட்சி (2005)
- பண்டைக் குமரியும் பழங்குடித் தமிழரும் (1997)

**அகராதி முயற்சிகள்**

ஈழத்தில் அறிவியல் வளர்ச்சிக்கு அகராதி களின் பங்களிப்பு முதன்மையானதாக உள்ளது. இதற்கான அடிப்படையை ஏற்படுத்திக் கொடுத்த வர்கள் ஈழத்தில் வாழ்ந்த தனிமனித ஆளு மைகள் ஆவார். ஆரம்பகாலத்தில் இருந்து இன்றுவரை பல்வேறு துறைசார்ந்து அகராதி களை உருவாக்குவதில் ஈழத்தவர்கள் முனைப் புடன் செயற்பட்டு வருகின்றனர். பேச்சு மொழி யாக இருந்த தமிழ்ச் சொற்களை ஈழத்த வர்களே அகராதி வடிவில் தமிழுக்குத் தந்துள்ளனர்.

“இலங்கை அறிவியல் தமிழின் தாயகம் என இராம சுந்தரம் கூறியுள்ளார். விஞ்ஞானத்துறையிலும் அகராதித்துறையிலும் ஈழநாடே தமிழ்நாட்டுக்கு வழிகாட்டியாய் நின்றது என கணபதிப்பிள்ளை கூறியுள்ளார். இத்தகைய அறிஞர்களின் கருத் துக்கள் அறிவியல் தமிழ் வளர்ச்சியில் இலங்கையின் முதன்மைமிக்க பங்களிப்பைச் சுட்டுகின்றன.”

மரபுரீதியான கவிதைகள், கட்டுரைகள் என்பவற்றோடு நின்றுவிடாமல் நவீன முறையில் மூன்று அகராதிகளையும் பண்டிதர் எழுதியுள்ளார். தமிழர்கள் பயன்படுத்திய சொற்கள் பல அழிவடைந்து செல்கின்றமையை உணர்ந்த பண்டிதர் அச்சொற்களைப் பாதுகாக்கும் நோக்குடனும் தற்கால தமிழர்களுக்கு அவற்றினை தெளிவுபடுத்தும் நோக்குடனும் அகராதிகளைத் தமிழ் உலகிற்குத் தந்துள்ளார். பண்டிதர் எழுதிய அகராதிகளாகப் பின்வருவனவற்றைக் குறிப்பிடலாம்.

- வேரடி வழித் தமிழ் சொற்பிறப்பியல் சிற்றகரமுதலி (2004)
- அருகிவரும் பழந்தமிழ் பேச்சுவழக்கு சொற்பிறப்பியல் அகராதி (அழிவடைந்துவிட்டது) (2008)
- தமிழர் உறவுமுறைச் சொல்வழக்கு அகராதி (2015)

**பாடல்கள்**

பண்டிதர் 25ற்கு மேற்பட்ட எழுச்சிப் பாடல்களை எழுதியுள்ளார். இவற்றில் மக்கள் பெரிதும் விரும்பிக் கேட்கும் பாடல்களாகப் பல பாடல்கள் காணப்பட்டன. சிறுவயதில் நாட்டார் பாடல்களில் நாட்டம் கொண்ட இவர் தானும் பாடல்களை எழுதவேண்டும் என்ற நோக்கோடு பாடல்களை எழுதியுள்ளார். அவற்றுள் ***"மானம் ஒன்றே வாழ்வெனக் கூறி வழியில்..."***, ***"கடற் கரும்புலிகள்"***, ***"போரம்மா உனையன்றி யாரம்மா..."***, ***"தலைகுனியும் நிலையில் இங்கே புலிகள் இல்லையடா..."*** முதலிய பாடல்கள் ஈழத்து தமிழர்கள் விருப்பத்துடன் கேட்கும் பாடல்களாக உள்ளன. இவர் எழுதிய பாடல்களை எஸ். ஜீ. சாந்தனும் அவருடன் இணைந்த குழுவினரும் (ஆண் - பெண்) இசையமைத்துப் பாடியுள்ளனர்.

**நாடகங்கள்**

பண்டிதர் அவர்கள் முருகையனுடன் இணைந்து ***"உயிர்த்த மனிதன் கூத்து"***, ***"நகலும் நாடகமும்"*** என்ற இரு நாடகங்களையும் அரங்கேற்றம் செய்துள்ளார். இதில் 1986 ஆம் ஆண்டு அரங்கேற்றப்பட்ட ***"நகலும் நாடகமும்"*** எனும் கூத்தில் பண்டிதருடைய ***"நெல்லையல்லை..."*** எனும் கவிதை இடம் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. அத்துடன் இவர் பல நாடகங்களை எழுதியுள்ளார். அவற்றுள் ***"அறியாமையின் விடிவு"***, ***"வாழவிடுங்கள்"***, ***"காடு காத்த காவலன்"***, ***"வீழ்ந்த யாழ்ப்பாணம்"*** போன்ற நாடகங்களை நெறியாள்கை செய்து தானே மேடையேற்றியுள்ளார். இவற்றுடன் சில வானொலி நாடகங்களையும் வடிவமைத்து வழங்கியுள்ளார்.

ஈழத்தில் இடம்பெற்ற இராணுவத்திற்கும் விடுதலைப்புலிகளுக்கும் இடையிலான யுத்தத்தின் போது கிளிநொச்சிப் பகுதியில் பண்டிதருடைய வீடு உட்பட அவருடைய பல முக்கிய ஆவணங்களும் இலக்கியப் படைப்புக்களும் அழிவடைந்துபோயின. இவற்றில் மேற்குறிப்பிட்ட பாடலாக்கங்கள், மேடைநாடகங்கள் உள்ளடங்கலாக பல எழுத்திலக்கியப் படைப்புக்களும் அழிக்கப்பட்டுவிட்டன. தற்போது உள்ள இலக்கியப் படைப்புக்களே பண்டிதரின் தமிழ்ப் பணிக்குச் சான்றுகளாக அமைகின்றன.

தொகுத்து நோக்கும்போது இக்கட்டுரை பண்டிதரின் வாழ்வும் பணியும் பற்றிய அறிமுகமாக அமைந்துள்ளது. அதாவது பண்டிதரின் பிறப்பு, இளமைக்காலம், கல்வி, ஆசிரியப்பணி, சமூகப்பணி, குடும்ப வாழ்வும் சூழலும், பண்டிதர் பெற்ற விருதுகள் என்பன குறிப்பிடப்பட்டுள்ளது. அதுமட்டுமன்றி பண்டிதரின் எழுத்து முயற்சிகள் என்ற தலைப்பின் கீழ் கவிதைகள், கட்டுரைகள், அகராதிகள், நாடகங்கள், பாடல்கள் ஆகியனவும் விரிவாக ஆய்வு செய்யப்பட்டுள்ளதுடன் பண்டிதருடைய இலக்கியப் படைப்புக்கள் நூலாக்கம் பெற உதவிய நண்பர்கள் பற்றியும் அழிவடைந்த இலக்கியங்கள் பற்றியும் சிறியளவிலான குறிப்புக்களும் விளக்கப்பட்டுள்ளன.

❍❍❍



சிறுகதை

# அன்ன லச்சுமி


## J.A றஜீவ் (நெடுந்தீவு)

நான்காம் வருட மாணவன், தமிழ் சிறப்புக் கற்கை, கிழக்குப் பல்கலைக்கழகம்.


அன்று இரவும் மெல்லெனக் கடலை தொட்டுச்செல்லும் சோளகக்காற்று, மே மாதம் என்பதால் உரக்க வீசிக்கொண்டே இருந்தது. வழமைபோல வெயிலின் வெக்கையானது அதிகமாய் இல்லாமல், இனி இல்லை என்று குளிர்மையாகவே இருந்தது. ஆனாலும் அன்னலச்சுமிக்கு தூக்கமில்லை, காரணம் ஏழு மாதங்களே ஆன அவள் மகள் சுபாஷினியின் கூச்சலிட்ட அழுகை, ஆனாலும் அவளுக்கு தான் தூங்கவில்லையே என்ற கவலை இருக்கவில்லை. காரணம் அவளின் ஒரே பிள்ளையென்பதால், அதுவும் ஊருறவெல்லாம் அழகி என்று கொஞ்சி விளையாடும், அன்ன லச்சுமியின் ஒரே லட்சுமி. இதனாலையோ என்னவோ மூன்று நாட்களாக சுபாஷினிக்கு தொடர் காய்ச்சல். "ஆஸ்பத்திரிக்குக் கொண்டு போய், டொக்ரறட்ட காட்டி, அவர் குடுத்த மருந்துகள் குடுத்தும், இன்னும் குறையலையே என்னவா இருக்கும்" என நினைத்து கலங்கிய வண்ணமே இருந்தாள். வைத்தியசாலையில் வைத்தியர் துண்டு எழுதி கொடுத்துச் சொன்னது போல, காலை யாழ்ப்பாண பெரியாஸ்பத்திரிக்குச் செல்வதற்கு தயாராகி இருந்தாள். இதற்காக தனக்கு துணையாக தன் சகோதரியையும் கேட்டிருந்தாள். இவ்வாறு தன் பிள்ளைக்கு என்ன கண்ணூறு பட்டிருக்குமோ என நினைத்துக் கொண்டே, அயர்ந்த சுபாஷினியோடு அவளும் அசந்து தூங்கிவிட்டாள். காலையில் சேவல் கூவியதும் தெரியாமல் தூங்கிக்கொண்டே இருந்தாள்.

கணவன் லிங்கம் "லச்சுமி.... லச்சுமி....." என எழுப்பினான். "ஓமுங்க..." என்ற முனங்கலுடன் கண் விழித்தாள். லிங்கம் அவளை நோக்கி "என்ன புள்ள இண்டைக்கு பெரியாஸ் பத்திரிக்கி பிள்ளய கொண்டுபோகணும் எண்டாய், இப்பிடி அடிச்சுப் போட்ட மாதிரி படுத்துக்கிடக்கிறாய், எழும்பு வேகமா, ஏழே காலுக்கு குமுதினி வெளிக்கிட்டிரும், இப்பவே ஆறு மணி தாண்டீற்று" எனக்கூறி நேரத்தை ஞாபகப்படுத்தினான். "ஆறு மணி ஆகீற்றா....." என்ற பதற்றத்துடன் அவசர அவசரமாக எழுந்த லச்சுமி "இரவு புள்ளா பிள்ள அழுகைங்க....., அதால ஒழுங்கா கண்ணயரவும் இல்ல, விடியத்தான் கொஞ்...சம் அசந்தன். அதுக்குள்ள ஆறு தாண்டிட்டு" என கூறிக் கொண்டே,

தன் காலை கடமைகளில் பரபரப்பானாள். அவற்றையெல்லாம் முடித்துக்கொண்டு, கணவன் லிங்கத்துக்கு "இந்தாங்க தேத்தண்ணி" என்று தேநீரை நீட்டினாள். "என்னடியப்பா.... இப்ப தேத்தண்ணியா முக்கியம், கெதியா வெளிக்கிடு, ஏழு மணி ஆகுது, ஏழே காலுக்கு குமுதினி கட்டவுத்துருவாங்க" என்று எசிக் கொண்டே தேனீரை அருந்துகிறான். லச்சுமி தன்னுடைய அழகு லட்சுமியை வாரி எடுத்து, முத்தமிட்டு, அழகு படுத்திக்கொண்டே, "சரிங்க...... வெளிக்கிடுவமா" என்று, தன் ஓலை அரண்மனையில் இருந்து வெளியில் வந்தாள். அழகுடன் விளங்கும் அன்னலச்சுமி முகமும், அவள் போலவே..., அவளின் மறு உருவமாக காணப்படும் சுபாஷினியின் முகமும், காணவே

பிரகாசமாய் இருந்தது. ஆனாலும் அதைப்பற்றி பொருட்படுத்தாமல் லிங்கம் தன் வீட்டு கடவையடிக்கித் தன் சைக்கிலை உறுட்டினான். அந்தக் கடப்பையால் சைக்கிளுடன் ஒருவர் போவதே கடினம், அந்தளவிற்கு சிறிய கடப்பை. இவ்வாறு ஒரு கையில் சைக்கிலை உறுட்டியபடி, மறு கை கடவையின் ஒரு பக்கமிருக்கும் தென்னங்குத்தியுடன் உரசுப்பட வெளிவீதிக்கு வந்தான், வந்ததும், "ஏய் லச்சுமி வாவன் வேகமா, எனச்சத்தமிட்டு அழைத்தான்." "இந்தாங்க வந்திற்றன்" என்று அவசர அவசரமாக வாசல் கடப்பையை தாண்டும் போது, அவளின் சேலையின் முந்தானையானது கடப்பையில் அடுக்கி வரியப்பட்டிருந்த, படலையின் மட்டையில் கொழுவுப்பட, அது லச்சுமியை போகாதே... என இழுத்துப் பிடித்தது. இது விதியா? அல்லது கவனயீனத்தால் ஏற்பட்டதா? என யோசித்தபடி, ஒரு கையால் அதை உதறி எடுத்துக்கொண்டு, சஞ்சலமனத்துடன் சைக்கில் கரியலில் ஏறி அமர்தாள்.

லச்சுமி வீட்டில் இருந்து குமுதினிப்படகு புறப்படும் மாவலித்துறையானது 800 மீற்றர் தொலைவே என்பதால், நான்கைந்து நிமி டங்களுக்குள்ளேயே சென்று விட்டாள், ஆனாலும் மணி ஏழேகால் தொட்டுவிட்டது. குமுதினிப்படகின் கயிறுகள் அவிழ்க்கப்படவே, கண்படும் தூரத்திலேயே கைகாட்டி நிறுத்த சொல்லி சத்தமிட்டாள். சத்தம் கேட்க.. படகின் கயிறு அவிழ்பவரும் நிறுத்தினார். சைக்கி லில் இருந்து அவசர அவசரமாக இறங்கி வந்து, குமுதினியில் ஏறாமல் லச்சுமியை பார்த்துக்கொண்டிருந்த அவள் சகோதரியை ஏறச்சொல்லி, தானும் ஏறினாள்.

அன்று குமுதினிப்படகில் 60 பயணிகளவில் சென்றிருப்பார்கள். எல்லாப்பயணிகளுமே மிக சந்தோ சமாக சிரித்த முகத்துடன் இருந் தார்கள். ஆனால் அன்னலச்சுமிக்கு மட்டும் தன் ஒரே அழகியின் தொடர் காய்ச்சல் இன்னும் மாறலையே என்ற கவலை. அந்தக் கவலையை மனதில் வைத்து மாவிலித் துறையில் வீற்றிருக்கும் பிடாரி அம்மனையும், சவேரியார் ஆலயத்தையும் பார்த்து, தன் பிள்ளைக்காக வேண்டிய வண்ணம் இருக்கவே குமுதினியும் மாவலி துறையை விட்டு வெளியேறியது. வழமையில் புயல் போல் எழுந்து வரும் சோளகக்காத்து அன்று மென்மையாக வீசியது. எதிர்பார்ப்புகளோடும் பல ஏக்கநினைவுகளோடும் அன்று குமுதி னித் தாயிடம் தஞ்சம் புகுந்தவர்கள் அறுபத்து நான்கு. அந்த அறுபத்திநான்கு குழந்தைகளையும் தன் மடிக்குள் வைத்து தாலாட்டிய வண்ணமே எதிர்க்கரையான குறிகாட்டுவான் நோக்கிப்பயணமானாள். அவளுக்கு இந்த ஏழ் கடலின் பயணம் ஒன்றும் புதிதல்ல, காரணம் அவள் நெடுந் தீவுக்கு சேவையாற்ற வந்து இருபது வரு டங்களுக்கு மேலாகிவிட்டன. ஒவ்வொரு நாளும் தீவிலிருந்து குறிகாட்டுவானுக்கும், குறிகாட்டுவானில் இருந்து தீவுக்கும் இரண்டு முறை பயணித்து, எல்லாவிதமான கடல் சீற்றங்களிலிருந்தும் தன் பிள்ளைகளை நெடுகிலும் காப்பவள். இக்குமுதினியானது 60களில் கொண்டுவரப்பட்டது. லச்சுமி பயணம் செய்யும் அன்றைய திகதி மே மாதம் (15) பதினைந்தாம் திகதி 1985. அத்தனை வருடங்களில் ஒரு உயிரைக்கூட அவள் தவறவிட்டதில்லை. எவ்வளவு பெரிய கடல் சீற்றங்கள் பொங்கி எழுந்து வந்தாலும், குஞ்சுகளை தன் இறக்கைகளுள் வைத்து காக்கும் தாய்ப்பறவையை போலக்காத்து, எதிர்க்கரை சேர்ப்பவள். இதனாலே அவள் நெடுந்தீவு மக்களின் தாயாக இன்று வரைக்கும் போற்றப்படுகிறாள். இப்படியான தாயின்



அரவணைப்பிலே அன்னலச்சுமியும் ஏனையவர்களும் பயணப்பட்டனர்.

மாவலித்துறை பிடாரி அம்மனிடமும், சவேரியாரிடமும், அவள் வேண்டினது கேட்கப்பட்டதோ என்னவோ தெரியவில்லை, சுபாஷினியின் தொடர் காய்ச்சல் குறைந்து அவள் சிரித்து விளையாடிக் கொண்டிருந்தாள். குமுதினியின் பின்புறம் இருந்த அதிகமானோரின் கண்களும் மனங்களும் சுபாஷினியின் முகச்சிரிப்பில் புதைந்து போய் இருந்தது. மென்மையான காற்றும், மெல்லிய குமுதினியின் சத்தமும், லட்சுமியின் மடியில் கிடந்த சுபாஷினியை இன்னும் களிப்பூட்டின. இவ்வாறு சிலர் தங்கள் பயணங்களின் அடுத்த கட்டம் பற்றி யோசித்துக்கொண்டும், சிலர் மெல்லிய காற்றின் குளிர்மையிலும் குமுதினியின் தாலாட்டிலும் கண் அசந்தும், சிலர் படகின் ஜன்னலின் கண்ணாடிகளை திறந்து காலைக்கடலின் அழகை ரசித்தவர்களாகவும், இன்னும் சில ஆண்கள் படகின் வெளிப்புறத்தில் அமர்ந்து ஊர்கதை, உலகக்கதை கதைத்த வண்ணமும் காணப்பட்டனர். இவ்வாறு இயற்கையோடு இணைந்த குமுதினியின் அரவணைப்பில், தமது சுயத்தின் சோகத்தை கொஞ்சம் மறந்திருந்தார்கள் பயணிகள்.

குமுதினியானது நெடுந்தீவை விட்டு மறைந்து, தன் அரைவாசிப்பயணத்தை பூர்த்தியாக்கி பயணித்துக் கொண்டிருந்தவேளை, கண்ணாடி நாரிழைப் படகில் குமுதினியை நெருங்கிய அறுவர் படகை நிறுத்தச் சொல்லி சைகை காட்டினர். ஓட்டுணரும் மெல்ல வேகத்தை குறைத்தார். லட்சுமியும் அவளோடு படகில் உள்ளே இருந்தவர்களும் “ஏன் லோன்சிய நிப்பாட்டிறினம்... என்னவாம்...” என்று ஒருவரை ஒருவர் விசாரிக்க, வெளியில் நின்ற ஆண்களில் சிலர் “யாரோ கைகாட்டி மறிக்கினம் அதான் நிப்பாட்டுறாங்க” என்று கூறி அமைதிப்படுத்தினர். மறித்த அறுவரும் குமுதினியில் ஏறி, ஓட்டுணரின் தலையில் துப்பாக்கியை வைத்து “நிறுத்து சொன்னா நிறுத்த மாட்டியா” என அரைகுறைத் தமிழில் பேசி அடித்தனர். ஓட்டுணர் உடனையே எஞ்சினை நிறுத்தினார், படகு அமைதியாகியது. படகில் இருந்து இதை பார்த்த அனைவரும், வந்திருப்பது சிங்கள மொழி பேசும் இலங்கை ராணுவப்படைதான் எனக்கண்டு கொண்டனர். ஏனெனில் அவர்கள் பேசும் தமிழ் கொச்சைத் தமிழாக இருந்தது. அவர்கள் துப்பாக்கிகளுடன் வாள்கள் மற்றும் கூரான ஈட்டி கத்திகள் என பலவற்றைக் காட்டி, “போ... போ.. பின்னாடி போடா..” என முன் பகுதியில் இருந்த அனை வரையும் பின்பகுதிக்கு அனுப்பினர். லட்சுமி



**- Stephen King**

ஒரு கதையில் அல்லது கட்டுரையில் ஒரு பயனும் அற்றும் இருக்கும் விடயங்களை எடுத்துவிட வேண்டும். “என்ன கூற விளைகிறீர்கள்?” என்று ஒவ்வொரு வாக்கியத்தையும் கேட்க வேண்டும். இதற்காக விடையைக் கூறவல்ல ஒவ்வொரு வாக்கியமும் படைப்பின் பகுதியாகும். இதற்கான விடை கூற முடியாத ஒவ்வொரு வாக்கியமும் நீக்கப்பெறல் வேண்டும்.





**ஏழு மாதமேயான அந்தக் குழந்தையின் பதறி அழுத குரல் சட்டென நின்று, உடல் துடித்தது.**

இருந்த பின்பகுதிக்கு வந்த அனைவரும் “சிறிலங்கா ஆமி வந்திருக்கு, என்னமோ விசாரிக்கிறானுகள்” என புறுபுறுத்தனர். அனைவரும் பின்பகுதிக்கு வந்ததும் அந்தக் காடையர்களில் ஒருவன் அடுத்தவனை பார்த்து “எக்கக் எக்காக் கவுறுத்....” என வாயுக்குள் எதையோ முணுமுணுத்துவிட்டு அடுத்தவனை அனுப்பினான். அவன் பின்னிருந்த அனை வரிடமும் வந்து “நான் கூப்பிடு போது... ஒரு ஆள் ஒரு ஆள் சத்தம் சொல்லி, ஐடி காட்டி, இங்க பக்கம் போ” என்று அரை குறைத்தமிழில் சொல்ல, லட்சுமிக்கு ஒன்றும் புரிய வில்லை “என்னவாம் அண்ணே சொல்லுறான் அந்த ஆமி” என அருகில் இருந்தவரை கேட்க, அதிலிருந்து ஒருவர் சத்தமா “தாங்க கூப்பிடுவீனமாம், அப்ப ஒவ்வொரு ஒவ்வொரு ஆளா, சத்தமா உங்களட பெயரைச் சொல்லி, ஐசிய காட்டிப் போட்டு முன்பக்கம் வரட்டாம், என்றாங்க” என்று கூறினார். வந்த ஆறுபேர்ல ரெண்டுபேர் குமுதினியின் பின்பக்கப் பகுதியின் இரண்டு வாசல்களிலும் நிக்க, நான்கு பேர் முன் பகுதியில் நின்று விசாரித்தனார்.

இதில் முதல்வரிசையாக ஆண்களும், பின் பெண்களும், அதன் பின் முதியவர்களுமாக வருமாறு கட்டளையிட்டனர். “சரி விசா ரணைதானே” என எண்ணி ஒருவர் போய் விசாரிக்கப்பட்டு பின் அடுத்தவரை அழைக் கும்போது அடுத்தவரெனச் சென்றனர். பெண்கள் வரிசையில் லச்சுமியும் நின்றாள். இதற்கிடையில் சத்தமாக கத்தி உங்கள் பேர் முகவரி சொல்ல வேண்டும் என பின்னிருந்த இருவரும் அதட்டினர். முன்பு விசாரணைக்கு சென்ற சிலர் காடையரை உதறித் தள்ளிவிட்டு கடலில் குதித்தனர். அவர்களை கடல்நீருக்குள் வைத்தே துப்பாக்கியால் சுட்டுக்கொன்றனர். பின்னிருந்தவர்களுக்கு ஒன்றும் புரியவில்லை, ஏன் இவர்கள் ஆமியை உதறித் தள்ளிவிட்டு கடலில் குதிக்கிறார்கள். என்றும், அதற்கு ஏன் ஆமி அவர்களை சுடுது என்றும் எண்ணி, பயம் அதிகரிக்க கூச்சலிட்டு கத்தினர். அதில் இருந்த காடையர்களுள் ஒருவன் துப்பாக்கியை காட்டி சத்தம் போடாமல் இருக்கும்படி அதட்டினான். உள்ளிருந்த அனைவருக்கும் பயம் இன்னும் மிகுதியாகியது.

அடுத்து லட்சுமி அழைக்கப்பட்டாள். கையில் தன் ஏழு மாத குழந்தையுடன் சென்றாள். முன் பகுதி வாசலில் உள் ளிறங்கியதும் அங்கு நடப்பது விசாரணை அல்ல என அவளுக்கு புரிந்தது. தனக்கு முன் அழைக்கப்பட்ட ஆண்கள், மற்றும் பெண்கள் அனைவரும் தாறுமாறாக வெட்டப்பட்டு, குவிக்கப் பட்டுக்கிடப்பதைக் கண்டாள். “ஐயோ” எனக்கத்தினாள். உள்ளிருந்த நான்கு காடையர்களில் ஒருவன் லட்சுமியின் வாயை இறுக்கப்பொத்தி கழுத்தை நெரித்தான். அடுத்தவன் பிள்ளையைப் பறிக்கவும் அவள் கொடுக்காமல் தனக்குள் இறுக்க பொத்திக் கொண்டாள். காடையர்களில் மற்றவன் அவளுடைய கையிலும் இடையிலுமாக ஓங்கி வெட்டினான். வெட்டின் வலியாலும் கழுத்தின் அழுத்த மிகுதியாலும் கண்களின் கருவிழிகள் மேலிட, அவள் கைகள் குழந்தையை தானாகவே கைவிட்டன, கறுப்புநிற காடையன் கைக்கு அவள் குழந்தை போவதைப் அவள்

கண்கள் கண்டன. தன் மகளின் பதறிய ஓலமிட்ட அழுகை அவள் காதில் கேட்டது. குழந்தையின் பதறல் இன்னும் மேலிட, அவன் தன் கையில் இருந்த ஈட்டிக் கத்தியால், அவள் கண்முன்னே, ரத்தம் சிதறச் சிதற ஒருமுறை இருமுறை எனக்குத்த, ஏழு மாதமே ஆன அந்தக் குழந்தையின் பதறி அழுத குரல் சட்டென நின்று உடல் துடித்தது. சட்டென மூன்றாம் முறையும் குத்தினான், உடல் துடிப்பதும் நின்றது. குவிந்து கிடக்கும் சடலங்கோடு அதனையும் தூக்கி எறிந்தான் அந்தக் காடையன். லச்சுமியின் “ஐயோ....” என்ற அவல ஓலம் வெளியில் வர முடியாமல், காடையனின் பிடிக்குள் சிக்கி, நாசியோடு அடைபட மூச்சுத் திணற மயங்கி விழுந்தாள். இறந்துவிட்டாளென எண்ணி ஏனைய பிணங்களோடு பிணமாக இழுத்துப் போட்டார்கள். அப்படியே படகில் இருந்த ஏனையவர்களையும் தாறுமாறாக வெட்டிக் கொன்று, படகுக்குள்ளேயே குவித்துவிட்டு, வந்த படகிலே ஏறி திரும்பிச் சென்றார்கள்.

தஞ்சமென்று வந்த தன் பிள்ளைகளை, தன் உதரத்திலே இரத்தம் சிதற வைத்துப் பறிகொடுத்த குமுதினித்தாய், மூச்சிளந்து கரையொதுங்கினாள் இரத்த சாட்சியாக. இதில் 32 பேரின் உயிர்கள் சம்பவ இடத்திலேயும், நான்கு உயிர்கள் வைத்தியசாலையிலுமாக 36 பேர் படுகொலை செய்யப்பட்டனர். ஏனையவர்கள் குற்றுயிரும் குறையுயிருமாக காப்பாற்றப்பட்டனர். இருபதுக்கும் மேற்பட்ட இரத்த சாட்சியங்கள் இருந்தும், இதை இலங்கை ராணுவம் செய்யவில்லை என்று ஞாயம் மறுக்கப்பட்டது.

நினைவு வந்ததும் நள்ளிரவில் திடீரென லச்சுமி எழுந்து “என்ர பிள்ளைய குடு.... என்ர பிள்ளைய குடு.... என்ர பிள்ளை எங்க? என்ர சுபாசினி எங்க...” என்று கேட்டபடி பதறி எழுந்தாள், அதற்கு அவள் தலையை தடவியபடி அவளின் மூன்றாவது மகன் கூறினான், “சுபாஷினியோடு முப்பத்தைந்து பேரை அடக்கம் செய்து இன்றுடன் (2025. மே.15) நாற்பது வருடங்கள் அம்மா”என்று....

○○○

# சிரிக்கும் சிறைச் சாலைகள்



முன்பெல்லாம் எங்கள்
சாலைக்கு வருபவர்கள்
முறுக்கு மீசை தாடி
முறைத்த முகபாவனை
கடும் நிறத்தில் சாரன் சேட்
காலில் இறப்பர் செருப்பு
மொத்தத்தில் இவர்கள்
கோலமே கிறிமினல்தான்.

இப்போ சில நாளாய்
சாலைக்கு வருபவர்கள்
முழுச் சவரம் செய்த முகம்.
விலையுயர்ந்த பாதணிகள்
வெளுத்து மினுக்கிய
வெள்ளாடை பளபளக்க
முகத்தில் வரவழைத்த
போலிச் சிரிப்பு – அது
ஊடகத்தார் ஊர்ப் பெரியோர்
பூடகமாய் ஏதும் தம்மைக்
கேவலமாய் ஏளனமாய்க்
கேட்டு விட்டாலும் ஏதோ
விழுந்தவன் மீசையிலே
மண்படவில்லை என்று
மழுப்பும் மனப் பாங்கில்
சிரிக்கும் போலிச் சிரிப்பு.
இவை அனைத்தும் பார்த்து
‘வெள்ளை வேட்டிக் கள்ளர் என்று
சொல்லப் படுவோர் இவர்தானோ’
சொல்லிச் சிரிக்கிறது சிறைச்சாலை.

– நிலவூர்ச் சித்திரவேல் (திருகோணமலை)

# அலைபேசி ஓர் அசௌகரியம்

அலைபேசி ஓர் அசௌகரியம், அட! வேண்டாம் அந்த அலுப்பு,
எடுத்தாலும் தொல்லை, எடுக்காவிட்டாலும் தொல்லை!

ரிங் ரிங் என்று ஒலிக்கும்! அதிகாலையில், பின்னிரவில் “யார் அது?”
என்ற குரல், கரகரக்கும். காதை வதைக்கும். உறக்கம் கலைக்கும்.

குளிக்கும்போதும், உணவருந்தும் நேரத்திலும் செல்ஃபி எடுக்கச்
சொல்லும் நவீனம், பின் மறந்துபோய் “லைக்” போடவும் சொல்லும்.

வாட்ஸ்அப்பில் வந்து விழும், வம்புதும்பு ஏராளம், ஃபார்வேர்டு
செய்யாவிட்டால், “சவுண்ட்” விட்டு அழைத்து குதூகலித்துக் கும்மும்

உலகை மறந்து குனிந்த தலைகள், கூட்டத்திலும் ஒரு கும்மாளம்,
சிரிக்கச் சிரிக்கச் பேசும். இம்சையில் அடுத்தவனை அது கொல்லும்.

சத்தம் போட்டுப் பேசினால், “என்ன அங்கே அலறல்?” மெதுவாகப்
பேசினால், “என்ன அங்கே உளறல்?” அயலிருந்து மானத்தை வாங்கும்

சார்ஜ் இல்லையென்றால், உலகமே இருண்டதாய் ஒரு பயம்,
வைஃபை தேடி அலையும் அவசரம், நடமிடும் மனதில் நயம்.

ஒரு மெசேஜ் வந்தா, உடனே பார்க்கணும்னு ஆவலாய் ஓடவைத்து,
அதில வாற விளம்பரத்தால், பெரும் மயக்கம் தரும் சைலண்ட்டாய்.

தொலைத்து விட்டால், வீடெல்லாம் தேடும் ஒரு படபடப்பு, கையில்
அது அசைந்தால், “என்னடா இது?” என ஒரு வெடவெடப்பு.



மொபைல் இல்லா வாழ்க்கை, ஒருநாள் வாழ்ந்து பாரும்,
அலைபேசி ஓர்
அசௌகரியம், ஆனால் அதுவும் வேண்டும்! அதுதான் வியப்பு!



– பாஞ்சாலன்

ஞாயிற்றுக்கிழமை என்பது, பெரும்பாலும், உலக மாந்தர் அனைவருக்கும் ஓர் உற்சாகமான நாள். அதிலும், மாதத்தின் முதல் ஞாயிற்றுக்கிழமையென்றால் உற்சாகம் தூக்கலாயிருக்கும். சம்பளம் கைக்கு வந்திருக்கும். மதிய உணவுக்கு வீட்டில் ஸ்பெஷல் ஐட்டங்கள் மணக்கும். சாயங்காலம் அவுட்டிங், சினிமா, ராத்திரி டின்னர், குடும்பத்தோடு ஒரு ரெஸ்ட்ரான்ட்டில்.

ஆனால், நம்மக் கதாநாயகிக்கு, மாதத்தின் முதல் ஞாயிறு ஒரு மந்தமான, அல்லது அசமந்தமான நாள், மாதத்தின் முதல் ஞாயிறு, அவன் வருகை தருகிற நாள்.

அவன், மூன்று வருடங்களுக்கு முன்பு வரை, இவளுக்குக் கணவனாயிருந்தவன்.

மகளைப் பார்க்க வருகிற சாக்கில், முன்னாள் மனைவியையும் பார்த்துவிட்டு, இவளுடைய தற்காலிக நிம்மதியைக் குலைத்து விட்டுப் போகிறான்.

'நம்மக் கொழந்தைக்காகாவாவது நாம சேந்து வாழ்ந்தாகணும். ப்ளீஸ் எங்கள வுட்டுட்டுப் போயிராதீங்க' என்று இவள் மன்றாடியதெல்லாம் வீணாய்ப் போனது.

குடும்பம் நடத்திக் குப்பக் கொட்னது போதும். ஆளவுடு

"இப்படியெல்லாம் அபாண்டமாப் போசாதீங்க. அல்லாவுக்கே பொறுக்காது. ஒங்க முடிவ, ப்ளீஸ், மறுபரிசீலனை செய்யுங்க".

"மறுபரிசீலனை செய்ற டைம் எல்லாம் முடிஞ்சி போச்சி.

புரியாதமாதிரிப் பேசாத. முறைப்படி முத்தாலாச் சொல்லி, ஒன்ன, முறைப்படிக் கழட்டி வுட்டாச்சி. தலாக் சொல்லி டிவோர்ஸ் ஆனப்புறம் நாம சேந்து வாழ நெனக்கிறது ஹராம்னு ஒனக்குத் தெரியும். ஆனா, ஹராம் வேலைகளச் செய்யத் தயங்காத ஜென்மம் நீ. இனி ஒன்னோட மூஞ்சியில முழிக்கிறதே ஒரு பாவச்செயல். வழி வுடு. நா கௌம்பணும்."

இவளுடைய மூஞ்சியில முழிப்பதே ஒரு பாவச்செயல் என்று கிளம்பிப் போனவன், ஒரு வருடம் கழித்து. அந்தப் பாவச்செலைப்புரியத் திரும்பி வந்து தலையைக் காட்டினான்.

அந்த இடைப்பட்ட காலத்தில், தீர விசாரிக்காமல், யாரோ ஒரு அற்பனை மாப்பிள்ளையாய்க் கொண்டு வந்து, ஒரே செல்ல மகளுடைய வாழ்க்கையைப் பாழ்படுத்தி

சிறுகதை

# வீதிவரை உறவு



விட்டோமே என்கிற துயரத்தில், இவளுடைய மம்மியும் டாடியும் போய்ச் சேர்ந்து விட்டார்கள். அவர்களுடைய மரணச் செய்தி போய்ச் சேர்ந்தும், மரியாதைக்குக்கூட வந்து எட்டிப் பார்க்காதவன். ஒரு வருடம் கழித்து ஒரு ஞாயிற்றுக்கிழமை காலை வந்து கதவைத் தட்டிக் கொண்டு நின்றான். குழந்தையின் நினைவு அடிக்கடி வருகிறது என்றும், மகளைப் பார்த்துவிட்டுப் போகலாமென்று வந்ததாகவும், குழந்தையைப் பார்க்க அனுமதி வேண்டும் என்றும் அப்ளிக்கேஷன் போட்டான்.

"நம்மக் கொழந்தையா! நிச்சயமாத் தெரியுமா? இது நம்மக் கொழந்தையில்லை. ஒன்னோட கொழந்த. இதுக்கு தகப்பன் யாருன்னு எனக்குத் தெரியாது. ஒனக்குத்தான் தெரியும். இனி, இந்த கொழந்த யாரோ நா யாரோ, நீ யாரோ நா யாரோ. ஒங்கூட



ஏ.ஏ.ஹெச்.கே.கோரி

‘சரி, பாத்துட்டுப் போங்க’ என்று, அனு மதியளித்தாள் இவள். அவன் வந்த நேரம் குழந்தை தூங்கிக் கொண்டிருந்ததால், அவள் எழும்புகிறவரை டிவி பார்த்துக் கொண் டிருந்துவிட்டு, குழந்தை எழுந்ததும் பாசம் பெருக்கெடுத்துக் கொஞ்சோ கொஞ்சென்று கொஞ்சிக் கொண்டிருந்ததை ஜாடைமாடையாய் இவள், அசிரத்தையாய் அவதானித்தாள். வந்தவனுக்கு சாப்பாடு போட்டு அனுப்புவோம் என்று இவள் சமைத்துப் பரிமாறிய மதிய உணவை ரசித்து ருசித்து சாப்பிட்டான்.

‘ஆஹா, இவ்வளவு டேஸ்ட்டா சாப்புட்டு எத்தன நாள் ஆச்சும்மா! ஒன்னோட கை சமையல நா மிஸ் பண்றேம்மா’ என்று அவன் ஐஸ் வைக்க முனைந்ததற்கு, ஒரு சம்பிரதாயத்துக்குப் புன்னகைக்கக் கூட இவளுக்கு மனசாகவில்லை.

இவளுடையதும் மகளுடையதும் ஒரு முழு நாசமாக்கிவட்டு, சாயங்காலம் கிளம்பிப் போகிறபோது, விவகாரமான விண்ணப்பம் ஒன்றை வைத்தான்.

“ஒனக்கு ஆட்சேபனை இல்லன்னா, இனிமே நா மாசத்து முதல் ஸண்டே ஒரு விஸிட் குடுக்கலாமா? கொழந்தையப் பாத்துட்டு, அப்படியே ஒங்கையால லஞ்ச் சாப்பிடட்டும் சந்தோஷமாப் போவேன்.”

அவனுக்கு சந்தோஷம். இவளுக்கு அவஸ்தை என்றாலும், ஒழிந்து போகட்டும் என்று, அரை மனசோடு அனுமதியளித்தாள்.

ஒரு ஸண்டே விஸிட்டில், ‘ஈவ்னிங் கார்ல அப்படியேக் கொஞ்சம் வெளியே போய்ட்டு வருவோமா’ என்று அவன் நோட்டம் பார்த்ததற்கு, ‘நோ’ என்று மறுத்தாள்.

“ஒரு அந்நிய ஆம்பளக்கூட நா வெளிய யெல்லாம் வர மாட்டேன்”.

“நா ஒனக்கு அந்நிய ஆம்பளையா?”

“அத நா சொல்லலை, நீங்கதான் சொன்னீங்க”.

“தப்புப் பண்ணிட்டேம்மா”.

‘தப்புங்கறது சின்ன வார்த்த, நீங்க பண்ணினது பாவச்செயல். ஸின் எவனோ ஒரு வில்லன் அவுத்துவிட்ட கட்டுக்கதைய சாக்கா வச்சி, சர்வ சாதாரணமா எனக்குத் தலாக் வுட்டீங்க. நா அழுதேன். கதறினேன். எங்க மம்மியும் டாடியும் ஒங்கக் காலப் புடிச்சிக்கிட்டுக் கெஞ்சினாங்க”.

“அத நெனச்சி இப்ப நா டெய்லி அழறேம்மா”

“ஐயோப் பாவம். கண்ணத் தொடச்சிக் கோங்க”.

“சரி நீ ரொம்பக் கோவமாயிருக்க. நீ என்னோட வெளிய வரமாட்ட. நம்மக் கொழந் தைய மட்டுமாவது நா வெளிய கூட்டிட்டுப் போய்ட்டு வறேனே....”.

“எது, எது? நம்மக் கொழந்தையா! எந்தக் கொழந்தையச் சொல்றீங்க?”

“இதோ இவளத்தான் சொல்றேன். புரியாத மாதிரிக் கேக்கறியே!”

“இது நம்மக் கொழந்தையில்ல, ஒன்னோட கொழந்தைன்னு விஷத்தக் கக்கினீங்க. இவளுக்குத் தகப்பன் யாருன்னு ஒங்களுக்குத் தெரியாதுன்னீங்க, இப்ப என்ன திடீர் ஞானோதயம்! இங்கப் பாருங்க, நீங்க மாசத்துக்கு ஒருநாள் வர்றீங்க, இவளோட வெளையாடறீங்க, அதோட நிறுத்திக்கோங்க. எல்லாம் *indoor games* தான் *out door sports, banned*”.

அன்றைக்குத் தலையைத் தொங்கப் போட்டுக்கொண்டு வெளியேறியவன். ஒரு மூன்று மாத காலம் இந்தப் பக்கமே தலை காட்டாமலிருந்தவன், இந்த ஞாயிறு வந்து சேர்ந்தான். வந்தவன், வெறுங்கையோடு வரவில்லை.. ஹிடன் அஜெண்டா ஒன்றை சுமந்துகொண்டு வந்தான். தயங்கித் தயங்கி, ஹிடன் அஜெண்டாவை இவள் முன்னே அவிழ்த்து வைத்தான்.

“ஒங்கிட்ட ஒரு மேட்டர் பேசணுமே…”

“பேசுங்க”

“போனதடவ வந்த போதே, ஒன்ன வெளிய கூப்புட்டேனே, அப்பவே பேசணும்னு இருந்தேன். அன்னிக்கி நீ கோவமா இருந்த…”

“பரவாயில்ல. இப்ப சொல்லுங்க”

“இது… வந்து… ஒன்ன நா ரொம்ப மிஸ் பண்றேம்மா”

“என்னோட சமையல மிஸ் பண்றதாச் சொன்னீங்க”

“சமையல் மட்டுமில்ல, ஒன்னையே மிஸ் பண்றேன். நாம திரும்பவும் சேந்து வாழணும்”.

“ட்டூ லேட்”

“லேட் எல்லாம் இல்ல. நீ மனசு வச்சா முடியும். நாம பிரிஞ்சப்புறம் நா வேற கல் யாணம் பண்ணிக்கலன்னு ஒனக்கு தெரியுமா?



**இங்கப் பாருங்க,
நீங்க மாசத்துக்கு ஒருநாள் வர்றீங்க, இவளோட வெளையாடறீங்க, அதோட நிறுத்திக் கோங்க. எல்லாம் indoor games தான்
out door sports, banned".**

"நாங்கூடத்தான் வேற கல்யாணம் பண்ணிக்கல".

"நீ பண்ணிக்கலன்னு எனக்குத் தெரியும். பண்ணிக்க மாட்டன்னும் எனக்குத் தெரியும். அதனால, உறுத்தலே இல்லாம நாமத் திரும்பவும் சேந்து வாழலாம்".

"அதாவது, லிவிங் டுகெதர் மாதிரி"

"அல்லா, அப்டியெல்லாம் நா சொல்லல. திரும்பவும் நிக்கா பண்ணிக்கிட்டு, பக்காவா".

"டிவோர்ஸ் ஆனவங்க, திரும்பவும் நிக்கா பண்ணிக்கிட்டு, எப்படியெப்டி? பக்காவா! வாழ்றனுக்கு, நம்ம இஸ்லாம்ல என்ன ரூல்ஸ் இருக்குன்று ஒங்களுக்குத் தெரியுமா?"

"ஏன் தெரியாம? தலாக் ஆன பொண்ணு. வேறொரு நிக்கா பண்ணி அப்புறம், அந்த டெம்ப்ரரி மாப்பிள்ளட்டயிருந்து தலாக் வாங்கிக்கிட்டு...".

"அதாவது, அந்த டெம்ப்பரரி மாப்பிள்ளக் கூட ஃபஸ்ட் நைட் பண்ணி, அவனோட படுத்து..."

"அப்டித்தான் வச்சிக்கயேன்..."

"வச்சிக்கிர்றதென்ன, அதான் சட்டம். ஒங்க முன்னாள் மனைவி, முன்னேப்பின்னேத் தெரியாத எவனோ ஒருத்தனோட படுத்து எந்திரிக்கிறது ஒங்களுக்கு சம்மதமாயிருக்கலாம். அந்த அருவறுப்ப அனுபவிக்க எனக்கு அவசியமில்ல. அப்டியொண்ணும் ஒங்க மேல எனக்கு ஆசையுமில்ல. ஒங்கள நா ரெண்டாவது தடவ நிக்கா பண்ணிக்கிறதுக்காக ஒரு அந்நிய னோட ஆசைக்கி இணங்கற அளவுக்கு நீங்க என்ன எக்ஸ்ப்போர்ட் க்வாலிட்டியா? முன்னொரு காலத்ல ஒங்க மேலே எனக்கிருந்த காதலெல்லாம் காலாவதியாகிக் கன காலமாச்சி. ஒங்க மேல எனக்கு இருந்த அன்பு, பாசம், மரியாதை எல்லாம் ஆவி யாப் போயிருச்சி. இப்டியொரு கெட்ட எண்ணத்தோட தான் என்னோட வூட்டுக் கதவ நீங்க தட்டியிருக்கீங்கன்று தெரிஞ்சிருந்தா ஒங்கள நா வூட்டுக்குள்ளேயே விட்டிருக்க மாட்டேன். இப்டியொரு கெட்ட எண்ணத்தோட இந்த வூட்டுக்கு வர்ற நீங்க, நா தனியா இருக்கறத அட்வான்டேஜ் எடுத்துக்கிட்டு, அத்துமீறுவீங்க, என்ன பலாத்காரம் எண்ண முயற்சிப்பீங்கன்னு எனக்கு பயமா இருக்கு. அதனால், இனிமே, நீங்க இந்த வூட்டுப் பக்கம் வராதீங்க".

"வரவேக் கூடாதுங்கிறியா?"

"வரலாம். அதுக்கு இன்னும் வருஷங்கள் கெடக்கு. எனக்கு ஒரு மகள் இருக்கா. என்னோட மகள் தான் என்னோட ஒலகம். இப்ப அவ எல்.கே.ஜில இருக்கா. அடுத்த வருஷம் யு.கே.ஜி. அப்புறம் பெரிய க்லாஸ்க்குப் போவா. ப்ளஸ்ட்டூ முடிப்பா. காலேஜுக்குப் போவா. அவளுக்குக் கல்யாண வயசு வரும். எங்க மம்மி டாடி செஞ்ச தப்ப நா செய்ய மாட்டேன். ஒரு நல்ல எடத்துல, ஒங்கள மாதிரி ஒரு ஈனப்பிறவியா இல்லாத நல்ல பையனப் பாத்து எம் பொண்ணுக்கு நா நிக்கா செஞ்சு வெப்பேன். நிக்கா இன்விட்டேஷன் ஒங்களுக்கு அனுப்பி வெப்பேன். அவசியம் வாங்க. அது வரக்யும், இந்தப் பக்கம் எட்டியேப் பாக்காதீங்க. இப்ப, கௌம்புங்க".

"கெட் அவுட் சொல்ற."

"அப்டித்தான் வச்சிக்கோங்க. ஆனா, அத நா என் வாயால சொல்ல மாட்டேன்".

"அப்ப?"

"என்னோட கெழந்தக்கிட்ட சொன்னேன்னா, அவ சொல்லுவா, ஒங்களுக்கு, கெத் அவுத்".

❍❍❍




தற்கால விஞ்ஞான உலகம் ஏற்றுக் கொள்ளும் வகையிலே **தெளிந்திரு விழித்திரு** என்று ஞானத்தைப் போதித்த வேதாத்திரி மகரிஷி அவர்கள் கூறிய திட்டங்கள் **பதின்னான்கும்** வேதாத்திரியம் என்று அழைக்கப்படுகின்றது. வேதாத்திரி மகரிஷி அவர்கள் ஆழையாற்றில் அறிவுத்திருக்கோயில் அமைத்து உடல் வளக்கலை, மனவளக்கலை போதித்த குரு ஆவார். ஞானம் என்றால் பகுத்தறிவுச் சுடர் என்று ஆறுமுகநாவலர் கூறியுள்ளதைப் போன்று சொல்லால் மட்டும் நம்பாதே சுயமாய்ச் சிந்தித்தே தெளிவாய் என்று அறிவு என்னும் ஞானம் போதித்த மகரிஷி அவர்கள்,

ஞானநிலை இல்லத்தில் வாழ்வோர்கட்கு
நல்லதல்ல கிட்டாது வேண்டுவோர்க்கு
கானகமே தகுதி எனவும் கற்பித்த
கருத்தேற்ற காலமது மாறிப்போச்சு
மௌனநிலையில் இருந்த இயற்கை ஒன்றே
முடிவாக மனித அறிவின் உயர்வில்
தானடைந்த பரிணாமமே பிரபஞ்ச
தத்துவங்கள் என்றறிந்தோர் பெருகிவிட்டார்
என்று பாடுகின்றார்.

வீட்டில் இருந்து கொண்டே இல்லறத்தான் தவம் செய்யமுடியும் ஞானம் பெறமுடியும் என்பதை அறியச் செய்தது எனக்குள் இருந்த பிரம்மஞானம் என்னும் சொல்லின் பிரமிப்பை எனக்குள் இருந்து நீக்கியது. கௌதம முனிவரிடம் “கொக்கென்று நினைத்தாயோ கொங்கணவா” என்று கேட்ட குடும்பப் பெண்ணிடம் இருந்த ஞானத்தையும், கௌசிக முனிவருக்கு இருக்கக்கூடாத கடுங் கோபத்தையும் அக்கோபத்தை அறுகுண சீரமைப்பால் சாந்தமாக மாற்ற வேண்டிய அவசியத்தையும் மகரிஷி எமக்குக் கற்றுத் தந்துள்ளார். இங்கு ஒரு முனிவருக்கு இருக்கும் ஞானத்தை சாதாரண ஒரு குடும்பப் பெண் பெற்றுவிடமுடியும் என்ற ஞானம் நாம் பெற்றிருக்கின்றோம். அந்த ஞானத்தை தியானத்தின் மூலம் பெற்றுக் கொள்ளுங்கள் என்கிறார். **அறிவு என்றால், நுண்மாண் நுழைபுலம் – சந்தேகமற கற்றுக் கொள்ளுதல்**. ஒரு தாய் தன்னுடைய பிள்ளையின் தந்தை யாரென்று அறிவதைப் போன்றது. அவளுக்கு மட்டுமே தெரியும் அந்த தெளிந்த அறிவு. “யார் சொன்னார் எவர் சொன்னார் என்பதை விட்டுவிட்டு எவர் சொன்ன சொல்லையும் உன்னுடைய சொந்த அறிவால் எண்ணிப் பார்”. “உன்னையே நீ அறிவாய்” என்று **சோகரட்டீஸ்** சொன்னது போன்றஒரு தெளிவான அறிவு. அதுவே முடிந்த முடிவு. அந்த அறிவை தனித்திரு விழித்திரு, மௌனமான இரு. பலவிதமான தவப்பயிற்சியின் மூலம் பெற்றுக்கொள் என்று மகாஷி பல பயிற்சிகளை வழங்கியிருக்கிறார்.

அந்தப் பயிற்சிகளைச் செய்கின்றபோது தாயினுடைய வயிற்றை அடைந்து உருவான உடலாக வந்த ஆதிக் கருவைப் புருவத்திற்குக் கொண்டு வந்து நிறுத்த அறியாமை நிலை



**கௌசி**
**ஜேர்மனி**

நீங்கிக் கடவுள் அங்கே இருக்கும் என்ற உண்மையை அறியக்கூடியதாக இருக்கின்றது.

மனித வாழ்க்கை முக்கோணப் பரிமாண மாக இருக்கிறது. இயற்கைவிதி, சமுதாய அமைப்பு, இன்ப துன்ப உணர்ச்சி இந்த மூன்றையும் பற்றிய தெளிவு பெற்று வாழ்ந்தாலே நாம் ஞானம் பெற்றுவிடுவோம். இதைத் தற்சோதனை மூலமாக நாம் பெற்றுவிட முடியும். இயற்கை விதி என்ன? இயற்கையோடு ஒன்றி நாம் வாழுகின் றோமா? சமுதாய அமைப்பு எப்படி இருக் கின்றது? அதனோடு எம்மால் ஒன்றித்து வாழ முடியுமா? அதனுடைய தவறுகளை மாற்றுவதற்கு எம்மால் முடியுமா? அதற்காக நாம் என்ன செய்ய வேண்டும்.? எம்முடைய தேவைகள் பூர்த்தியாகும் போது மேலும் கீழும் துள்ளிக் குதிக்கின்றோமா? துன்பம் ஏற்படும் போது இந்தத் துன்பம் நிலையானது என்று துவண்டு விடுகின்றோமா? இதுபோன்ற தற்சோதனையை நாம் செய்ய வேண்டும். அதற்கான வழிவகையாக வேதாத்திரி மகரிஷி அவர்கள் வேதாத்திரியம் பதினான்கையும் எமக்களித்திருக்கின்றார்.

**திட்டம் 1 : போரில்லா நல்லுலகம் :**

போர் என்பது மனிதனை மனிதனே தனித் தனியாகவோ, கூட்டாகவோ கொன்று குவிக்கும் கொடிய செயல். நாம் செய்கின்ற யுத்தத்தால் யாருக்கு என்ன நன்மை கிடைக்கின்றது என்பதே மகரிஷியின் கேள்வியாகின்றது. நாம் செய்கின்ற காரியங்களே எம்மை வழிநடத்தும். பாம்புகள் வாழுகின்ற புற்றுக்குள் கையை வைத்தால் அது தீண்டத்தானே செய்யும். எனவே சிந்தனைதான் மனிதனை சிறப்பாக வாழ வைக்கும். அதனால், உலக அமைதி பற்றி ஒவ்வொரு மனிதனும் சிந்திக்க வேண்டி யது அவசியம். அதை எண்ணங்களாக மாற்றிச் செயற்படுத்த வேண்டும். வாழ்க்கை என்பது ஒருமுறைதான். அந்த வாழ்க்கையை நாம் மகிழ்ச்சியாகவும் பிறரை மனத்தால் கூட வருத்தாமலும் வாழ உறுதி எடுக்க வேண்டும். இயற்கையை வழிபட்ட மனிதர்கள் நாய் கடிக்கும் என்று நாயைக் கொல்ல சிந்திக்காது நாயை வைரவக் கடவுள் என்று வணங்கினார்கள். கடிக்க வரும் பாம்பை அடித்துக் கொல்லாமல் நாகதம்பிரான் என்று கடவுளாக வணங்கினார்கள். அவ்வாறே எம்மைத் தாக்குபவர்களையும் தூற்றுபவர்களை யும் வாழ்த்துதல் என்ற உயர்ந்த பண்புடன் வாழ்த்திக் கொண்டே இருப்போம். அந்த வாழ்த்து திரும்பவும் எங்களை வந்தடையும். உலகத்தைச் சுத்தப்படுத்த இயற்கை மழை யைத் தூவி தூசிகளை அகற்றுகின்றது. அதுபோல் உலகம் அமைதிபெற எம்மை நாம் தயார்படுத்திக்கொண்டு பகையை ஒழித்து, அனைத்து உயிர்களிடமும் சாதி, மத, இன பேதமின்றி அன்பைச் செலுத்தி, வேற்றுமையை வெறுத்து, ஒற்றுமையை நிலைநாட்டி, ஆயுதப் போராட்டத்தை எதிர்த்து, அன்புவழி உலகை இன்பத்தில் ஆழ்த்துவோம். அன்புதான் இன்ப ஊற்று, அன்புதான் உலக மகாசக்தி நாம் வாழப் பிறந்து விட்டோம். வாழ்வதற்கு விரிந்த உலகம். இருக்கிறது. இயற்கை வளங்கள் பலவும் உள்ளன. ஒருவரோடு ஒருவர் ஒத்தும் உதவியும் இயற்கை வளங்களை அனுப வித்து இன்புற்று வாழ வேண்டும். உலகில் இதுவரையில் எத்தனையோ போர்கள் நடந்து விட்டன. அவற்றுக்குக் காரணம் என்ன? என்ன நன்மை யாருக்கு விளைந்தது? இன்னும் போர் உலகுக்குத் தேவைதானா? இதுபோன்ற வினாக்களை எழுப்பிக் கொண்டு ஆராய வேண்டும். போர் என்பதை மனிதகுலத்தி லிருந்து அடியோடு ஒழித்துவிடவேண்டும்.

**திட்டம் 2 : பொருள்துறையில் சமநீதி:**

பணம் என்பது உழைப்பின் அடையாளமாக இருக்க வேண்டும். இயற்கை வளம் எளிதாக அனைவருக்கும் சுலபமாகக் கிடைக்கிறது. உழைப்பின் பலனாகக் கிடைக்கின்ற பொருட் களையும், செல்வத்தையும் மனிதன் பகிர்ந்து அனுபவித்து வாழ வேண்டும். பணம்தான் மனிதனைத் தவறான வழியில் நடத்துகின்றது. அவரவர் உழைப்புக்கு ஏற்றவகையில் ஊதியம் கிடைக்கும் கிடைத்த ஊதியத்தை சரியான முறையில் பயன்படுத்துவது மேலதிகமான ஊதியத்தை பிறருக்கு பகிர்ந்து அளிப்பது போன்ற காரியத்தைச் செய்கின்றபோது எல் லோருக்கும் சமநீதி கிடைக்கும்.

**திட்டம் 3: நேர்மையான நீதிமுறை:**

மனித வாழ்வுக்கு ஒத்ததான உயர்ந்த பண்பாடு நேர்மையான நீதிமுறை, இது அவ்வப்போது ஒவ்வொரு நாட்டின் அரசியல் தலைவர்களால் வகுக்கப்பட்டுப் பின்பற்றப் படுகிறது. அரசியல் தலைவர்களோ, மனித வாழ்வைப் பற்றி தத்துவம், விஞ்ஞானம்

என்கின்ற இரு துறைகளிலும் சிந்தனையின் மூலம் முழுமையாக அறிந்து கொள்ளா தவர்கள். இதனால், இன்றுவரையில் அப் பழுக்கற்ற நீதிமுறையும் அதைச் செயற் படுத்துகின்ற முறையும் உலகிலுள்ள எந்த நாட்டிலும் உருவாகவில்லை. எனவே, நீதித் துறையில் இயற்கைக்கு முரண்படாத நேர்மை வேண்டும்.

**திட்டம் 4 : நிலவுலகுக்கோர் ஆட்சி:**

உலகில் பிறந்து வாழும் எல்லா மக்களுக்கும் சம உரிமையும், சம பிரதி நிதித்துவமும் அளிக்கத்தக்க முறையில் எல்லா நாடுகளையும் இணைத்த, எல்லா நாட்டு ஆட்சிக்கும். மேலாதிக்கம் உடைய, ஓர் உலகப் பேரரசு ஜனநாயக முறையில் அமைக்கப்பட வேண்டும். அதற்கேற்ப செயல் புரியவும் வேண்டும். மக்களனைவருக்கும் பொறுப்பேற்றுக் கொள்வதாகவும், உலக மக்கள் அனைவரும் ஆட்சியில் பங்கு கொள்ளத்தக்க வகையிலும் உலகப் பொது ஆட்சி வேண்டும்.

**திட்டம் 5 : சீர் செய்த பண்பாடு:**

தனிமனிதனுக்கு ஐந்தொழுக்கப் பண்பாடு வேண்டும். தனிமனித அமைதி மூலம் தான் உலக அமைதி கிடைக்கும். எனவே, ஒவ்வொரு மனிதனும் இந்த ஐந்தொழுக்கப் பண்பாட்டைப் பின்பற்ற வேண்டியது அவசியம் ஆகிறது. அதாவது நான் என்னுடைய உடலாலும் அறிவுத் திறத்தாலும் உழைத்து வாழ்வேன், நான் என்னுடைய வாழ்நாளில் யாருடைய உடலுக்கும் மனத்துக்கும் துன்பம் தரமாட்டேன், பிற உயிர்களை உணவுக்காகத் துன்பம் செய்ய மாட்டேன், பிற உயிர்களையும் வாழ்க்கைச் சுதந்திரத்தையும் மதித்துப் போற்றுவேன் துன்பப்படும் உயிர்களுக்கு என்னால் உயர்ந்த உதவிகளைச் செய்வேன்.

**திட்டம் 6: சிந்தனையோர் வழி வாழ்வு:**

முற்றும் உணர்ந்த சிந்தனையாளர்களது வழியில் வாழவேண்டும். ஏனெனில், காலங் காலமாக மனிதனுடைய வாழ்க்கை சிலருடைய தவறான செயல்களினால் நலம் குலைந்து போகின்றது. அதனை இக்காலத்திற்கு ஏற்ற வாறு சிந்தனையாளர்களைக் கொண்டு திருத்தம் செய்து கொள்ள வேண்டும். உலகில் உள்ள மக்கள் அனைவரும் அறிவிலும் செயல்முறையிலும் வேறுபட்டிருப்பதால், அனை வருமே சிந்தனையோர் காட்டிய வாழ்க்கை நெறியில் வாழ்வதுதான் பாதுகாப்பானது. வெற்றியும் அமைதியும் அளிக்கவல்லது.

**திட்டம் 7 : சிறப்புணர்ந்த பெண் மதிப்பு :**

சமுதாயத்தில் பெண்களுடைய தொண்டும், அறிவும் மிகவும் அவசியமானவையாகவும், மதிப்புடையவையாகவும், பயன்தரத்தக்க வையாகவும் இருக்கின்றன. இந்த மதிப் பைப் பல இடங்களில் உணராத காரணத் தினால், ஆணாதிக்கச் செயல்கள்மூலம் பெண்கள் அவமதிப்புக்கும் ஏழ்மைக்கும். அடிமைத்தனத்திற்கும் ஆளாகி வருகின் றார்கள். இதனைச் சீர்திருத்திப் பெண்மையின் பெருமையை அனைவரும் உணர்ந்து மதித்து வாழ வேண்டும்.

இதேபோல பெண்களுக்குத் தீட்சை கொடுப்பது தவறு என்றிருந்த சட்டத்தையும் மாற்றிப் பெண்களுக்குத் தீட்சை கொடுக் கலாம். அதேபோல பெண்களும் பிறருக்குத் தீட்சை கொடுக்கலாம் என்று வழக்கத்தை மாற்றினார். அதுமட்டுமல்லாமல் உடன்கட்டை ஏறுதல் என்பதை வலுவாகக் கண்டித்தார். டெல்லியிலே மகரிஷி இருந்த காலத்தில் பல பெரியவர்களும், பாராளுமன்ற உறுப் பினர்களும் மகரிஷியிடம் வந்தார்கள். ஐயா உங்களைப் போன்ற ஆன்மீக அறிஞர்கள் நமது உயர்ந்த பண்பாடாகிய உடன்கட்டை ஏறுதல் என்ற சடங்கை ஆதரிக்க வேண்டும். நாங்கள் அதற்கான ஒரு மசோதா தயாரித்துப் பாராளுமன்றத்தில் சமர்ப்பித்து விவாதம் நடத்தியாயிற்று. இன்றுதான் அதற்கு ஓட்டுப் போட்டு நிறைவேற்ற வேண்டிய நாள். உங்களுடைய ஆசியையும் அறிவுரையையும் வேண்டி வந்திருக்கின்றோம். எங்களுக்கு ஆசி கூறி அனுமதி தாருங்கள் என'று கேட்டார்கள். உடனே மகரிஷியும் அவர்களைப் பார்த்து, “ஐயா! சிந்தனையாளர்களே! ஒரு சிறிய திருத்தத்தோடு இந்தச் சட்டத்தை நீங்கள் நிறைவேற்ற வேண்டும்” என்றார்.

“இதே போன்று மனைவி இறந்து விட்டால், கணவன் உடன்கட்டை ஏற வேண்டும் என்று திருத்தம் செய்து கொள்ளுங்கள்” என்று சொன்னார். எல்லோரும் கோபக் கனலோடு முகங்களைச் சுருக்கிக் கொண்டு, போய்விட்டார் களாம். பெண்ணினத்திற்கு ஆண்கள் செய்ய வேண்டிய கடமைகளை, நன்றி உணர்வுகளை ஆண்மக்கள் மறந்து விட்டிருக்கிறார்கள்

ஒருதலைப்பட்சமான சடங்கு முறைகளை யெல்லாம் மாற்றியமைக்க வேண்டும் என்று வணங்கிக் கேட்டுக் கொள்கிறேன என்கிறார்.

**திட்டம் 8: தெய்வநீதி வழி வாழ்தல் :**

இறைநிலை என்பது ஆற்றலும் (Self compressive pressure force) அறிவும் (Consciousness) கொண்டு, தன்மாற்ற நிகழ்ச்சியால் பிரபஞ்சத்தைத் தோற்றுவித்து முறையாகக் காத்து வருகின்றது. மனிதன் தன் முனைப்பினால் இறையாற்றலின் மதிப்பை உணராது செயல் புரிந்து, சமுதாயத்தைச் சிக்கலில் ஆழ்த்தி வருகின்றாள். இந்தத் தவறு ஏற்படாமல் காத்துச் சமுதாயத்தை மேன்மைப்படுத்த வேண்டியது அறிஞர்கள் கடமை.

**திட்டம் 9 : தேர்த்திருவிழா தவிர்த்தல்:**

வியாபார நோக்கத்தோடு தெய்வத்தின் பெயரால் மக்களை ஒன்று கூட்டித் தேர்த் திருவிழா நடத்துதல் மூலமாக சுகாதாரக் குறைவு, பண்பாட்டுச் சீர்குலைக்கும் கலை நிகழ்ச்சிகள். சட்டம் ஒழுங்கு பாதிப்புகள் போன்றவை ஏற்படும். அதனால், இவற்றை ஏற்படுத்தும் தேர்த்திருவிழாவை தவிர்ப்பது இக்காலத்திற்கு நன்மையாக அமையும்.

**திட்டம் 10 : சிறுவர்கட்கே விளையாட்டு :**

தனிமனிதர்களுக்கு இடையேயும். நாடு களுக்கிடைபேயும் போட்டி, பொறாமை. பகை முதலியவற்றை இக்காலத்தில் விளையாட்டு உண்டாக்குகிறது. வயதானவர்கள் உடலை வருத்தி விளையாடும்போது எலும்பு, தசைகள் நரம்புகள் பாதிக்கப்படுகின்றன. எளிமையான உடற்பயிற்சியே வயதானவர்களுக்குப் போதுமானது. எனவே. விளையாட்டு என்ற திட்டத்தைப் பள்ளியில் படிக்கின்ற சிறு வர்களின் உடல் வளத்தையும், மனநலத்தையும் காக்க மாத்திரம் உரியதாகக் கட்டுப்படுத்திக் கொள்ள வேண்டும்.

**திட்டம் 11: செயல் விளைவு உணர் கல்வி:**

ஒவ்வொரு செயலுக்கும் தக்க விளைவு உண்டு என்பது இறைநீதியாகும். எண்ணம், சொல், செயல் என்ற மூன்றாலும் மனிதன் செயல்புரிகிறான். விளைவு நான்கு வகைப் படும். அவை இன்பம், துன்பம், அமைதி, பேரின்பம் என்பனவாகும். எனவே, எமக்கு என்ன வேண்டும்? அதை எந்தச் செயல் மூலம் முறையாகப் பெறலாம்? என்று எண்ணி, உரிய முறையில் செயலாற்றி வேண்டிய பெரு மைகளைப் பெற்று வாழ்வில் இன்பமுற வேண்டும். இதுவே செயல்விளைவுத் தத்துவம்

**திட்டம் 12 : சீர்காந்த நிலை விளக்கம்:**

இந்தப் பிரபஞ்ச இயக்கத்தில் காந்தம் என்ற பேராற்றல் இயற்கையிலும், செயற்கையிலும் முக்கியமானதாக விளங்குகிறது. விஞ்ஞான வளர்ச்சியில் பெருமளவில் உள்ள இக் காலத்திலும் அதைப் பற்றிய மதிப்பை மனிதகுலம் உணர்ந்து கொள்ளவில்லை. அதைத் தெரிந்து கொள்ளவேண்டும்.

**திட்டம் 13 : உணவு நீர் பொதுவாக்கல்:**

மனித இன வாழ்க்கைக்கு உணவும், தண்ணீரும் அவசியமானவை. இவ்வியற்கைச் செல்வங்களைத் தனிமனிதனோ, மனிதக் குழுக்களோ தங்களுக்கிடையே போட்டியின்றி அனுபவிக்க வேண்டும். வெயிலைப் போன்று. காற்றைப் போன்று, உணவும் நீரும் உலகப் பொதுவாக அமைய வேண்டும்.

**திட்டம் 14: உண்மை ஒன்றை வழிபடுதல்:**

மனித இன வாழ்க்கையில் இறையாற்றல் முதன்மையானது. அந்த ஆற்றலைப் பகுதி பகுதியாகப் பயன்படுத்தி மனித வாழ்வு நடைபெற்று வருகிறது. இறைநிலை என்பது ஒன்றுக்கு மேல் இருக்க முடியாது. இதனைத் திரித்துக் கூறி மக்களிடம் மதப் போராட்டமும் பிணக்குகளும் மிகுந்து. எத்தனையோ குழப்பங்களும் போர்களும் நடந்து விட்டன. இனி அவ்வாறு குழப்பம் எழாது பார்த்துக் கொள்ள வேண்டியது அவசியம்.

என 14 திட்டங்களையும் வேதாத்திரி மகரிஷி உலகத்துக்கு வழங்கினார்.

இந்தத் திட்டங்களை மனத்தில் கொண்டு வையகத்துள் வாழ்வாங்கு வாழ்வோமாக! வாழ்க வளமுடன்.

# யாருக்கானது என் வீரமரணம்..?

**சமரபாகு சீனா உதயகுமார்**
**வல்வெட்டித்துறை**

எதற்காக இப்படி மாறினீர்கள்..?
உங்களுக்காகத்தானே
நானும் போராடியிருக்கிறேன்..!
உங்களுக்காகத்தானே
அம்மா அப்பா சோதரங்கள் உறவுகள்
அனைவரையும் விட்டுவிட்டு வந்து
உயிரை தந்து மாவீரனானேன்..!

என் அப்பா, அம்மா, சோதரங்கள்,
உறவுகள் என யாவரும்
ஏன் இன்று இப்படி
துன்பங்கள் அனைத்தையும்
கனமாய் சுமக்கவேண்டும்..?

நானும் படித்து
டொக்டர் ஒருவராகவோ..?
என்ஜனியர் ஒருவராகவோ..?
ஆசிரியர் ஒருவராகவோ..?
ஆகியிருக்கலாம்..!
இல்லையேல்
அகதி அந்தஸ்த்துடன்
வெளிநாடு சென்று
நிறைய உழைத்து
பணம் சம்பாதித்து
சொத்துகள் தேடி
சுகமாய் வாழ்ந்திருக்கலாம்..!

அதற்கான ஒரு வழியை
என் அப்பா அம்மா
காட்டிவிடவில்லை என்றுகூட
இப்ப நீங்கள் கருதலாம்..!

தேசம் என்ற ஒற்றைச்சொல் மந்திரத்தில்
எத்தனை விந்தை இருந்தது..?
எத்தனை வலி இருந்தது..?
எத்தனை துயர் இருந்தது..?
அத்தனையும் தெரிந்து
பொடியளோடு பொடியளாக
சண்டைக்கு போனவன்தான், நான்..!

இன்று மாவீரனாகி
அம்மா வீட்டு சாமித்தட்டில்
ஒரு படமாய் இருக்கிறேன், நானும்..!

அப்பா சாப்பிடவில்லை;
அம்மா சாப்பிடவிலலை;
வயதுக்கு வந்த சோதரிகளும்
இன்னும் கல்யாணமாகாமலே..!

ஒரு சமூகத்தை நேசித்து
என் உயிரைகொடுத்த
என் உறவுகளுக்கு உதவிட
யாரும் இல்லையே என்ற
ஏக்கம் எனக்குள்ளும்..!

உங்கள் அரசியல் தேவை கருதிய
ஒவ்வொரு பொழுதிலும்
சுடர் விளக்கேற்றிட மட்டும்
என் அப்பாவும் அம்மாவும்
அவசியமாய் அழைக்கப்படுகின்றனர்
இப்பவும் அவர்கள் பாவிகளாகவே..!

இப்படிக்கு
**மாவீரன் கப்டன் கீரன்...**

சிறுகதை

# இறுதிச்சடங்கு



சுந்தரி மணியன்
(புதூர் – இந்தியா)

அந்திவானச் சிவப்பின் அழகை ரசித்துக் கொண்டிருந்த மாலைவேளையில் அலைபேசி கிணுகிணுக்கும் ஒலியால் சிந்தை கலைந்து எடுத்துக் காதில் வைத்தேன். என்னவர்தான் பேசினார். தனது அத்தை இறந்துவிட்டதாகவும் உடனே செல்லவேண்டும் கிளம்பு என்றார்.

அருப்புக்கோட்டை அருகில் உள்ள வாழ வந்தானில்தான் அவரது அத்தை வசித்து வந்தார். போய் இறங்கியதும் அவரது அத்தையின் நான்கு மகள்கள், மகன் ஒருவரும் வந்திருந்தனர். மகன் ஏதோ பேச கூடியிருந்த அவரது உறவினர்களும் பெரியப்பாவும் பேச, அத்தை மகன் கோபமாக எழுந்து வீட்டை விட்டு வெளியேறிப் போனான். அவரது சகோதரிகள் தடுக்கவில்லை. ஆனால் சுற்றியிருந்த சொந்த பந்தங்கள் அனைவரும் பதறினர். சொந்தத் தாய்க்குக் கொள்ளி போடாமல், இறுதிச்சடங்கு செய்யாமல் மகன் செல்வதா? என்ற கேள்வி அனைவர் மனதிலும் எழுந்தது.

இன்னுமொரு உறவினர் “என்னதான் அவன் கோபபட்டாலும், கூடப்பிறந்தவங்க நாலு அக்காக்களும் சமாதானம் பண்ணி அவனைக் கூப்பிட்டுக் கொள்ளி போடச் சொல்லியிருக் கலாம். அவன அப்படியே போகவிட்டது தப்பு” என்றார்.

இவ்வாறு ஆளாளுக்குக் கண், காது, மூக்கு வைத்துப் பேச ஆரம்பிக்க செத்தவீடு கலகலத்துப் போனது. வெறும் வாயை மெல் பவர்களுக்கு அவல் கிடைத்தது போல் ஆனது. இன்னுமொரு பெரிசு,

“அவன் எங்க போனான்னு பாருங்கப்பா. பக்கத்துல இருந்தான்னா பாத்துச் சமாதானம் பண்ணிக் கூட்டிட்டு வரலாம்ல” என்றார். மற்றொருவர்,

“அவன் போய் அரைமணி நேரமாச்சு. மதுரைக்கே இந்நேரம் போயிருப்பான்” என்றார். மற்றொருவர்,

“ஒரு மாசமா சோறு தண்ணியில்லாம, படுக்கையில கிடந்த உடம்பு. நாறப் போகுது. காலாகாலத்துல எடுக்குறதுக்கான வழியப் பாருங்கப்பா” என்றார்.

பக்கத்திலிருந்த ஒருவர் சொன்னார் “அவரது மகள்களும் பையனும் பேசித்தீர்க்கவேண்டிய பிரச்சினையை மற்றவர்களிடம் பேசவிட்டால் அது பெரியதாகிவிட்டது. என்னதான் இருந்தாலும் பெத்தவளுக்குக் கொள்ளி போடாமல் போனது தப்பு” என்றார்.

இறந்த அத்தையின் மச்சான்,

“அவன் போனாப் போறான். கொள்ளி போட ஆளா இல்ல. அவ முடியாமல் கிடக்கும் போதே வந்து பாக்கல. மூத்த மருமகன் கொள்ளி போடுவார்” என்றார்.

பெரியப்பாவின் பேச்சு சகோதரிகளுக்கு ஆதரவாக இருந்ததால் நல்லதாப் போச்சு. அவன் போய்ட்டான். இனி எந்தப் பிரச்சினையும் இல்ல, கடவுளே என மனதிற்குள் எண்ணினர்.

இப்படிப் பலரும் சொல்லுகின்ற பஞ்ச வர்ணம் அத்தை நல்ல குணவதிதான். ஆனால் பெண் பிள்ளைகளின் பேச்சில் மயங்கி, தான் கட்டிய சொந்தவீட்டை விற்ற பணத்தைக்கூட மகனுக்குக் கொடுக்காமல் மகள்களுக்கே பிரித்துக் கொடுத்துவிட்டாள். அங்கே ஆரம்பமானது பிரச்சினை. ஒரு மகனான தனக்குச் சரியான வேலையும் வாங்கித் தரவில்லை, பணம் கொடுத்தும் உதவவில்லை என்பது மகனுக்குப் பெரிய




மனக்குறையானது. மகள்கள் எல்லாம் சேர்ந்து தன்னை ஒதுக்கிவிட்டார்கள் அதற்குத் தனது தாயும் துணைபோய்விட்டார் என்று நினைத்தான். மகனுக்குத் தனது நிலையைப் புரிய வைக்காமலே இறந்துபோனார் பஞ்ச வர்ணம் அத்தை. அத்தை சிறுவயதில் தனது குடிகாரக் கணவனுடன் போராடி நாலு மகள்களுக்கும் மணம்முடித்து வைத்து சிக்கன மாக வாழ்ந்தவள். கணவன் போய்ச் சேர தனியாய் இருந்த அத்தையை மகள்களே கவனித்துக் கொண்டனர். நாங்கள்தானே உன்னைப் பார்த்தோம் எங்களுக்குத்தான் பணத்தைப் பிரித்துக் கொடுக்கவேண்டும் என்று மகள்கள் சட்டம் பேசினர். எனவே மகள்களின் பேச்சைத் தட்டமுடியாமல் தவித்தாள்.

இறுதியில் அவளது உடலுக்கு இறுதிச் சடங்கு செய்யவும் ஆளில்லாமல் இறுதிப் பயணமும் தடைபட்டு நிற்கிறது. இருக்கும் போதும் பார்க்க ஆளின்றித் தவித்தாள். இறந்த பிறகும் தவிக்கிறது பிணம். இதுதான் மனித வாழ்வோ?

மகன் இருக்கும்போது, மருமகன் எப்படிக் கொள்ளிபோடலாம் என்பது விவாதப் பொருளானது. உறவினர்கள் ஒரு வழியாகப் பேசி முடிவு செய்து மூத்த மருமகனையே இறுதிச்சடங்கு செய்யவும் ஏற்பாடு செய்தனர்.

பக்கத்து வீட்டில் வசித்த பாட்டி சொன்னார்,

“என்னதான் தன் அம்மா மேல மனக்குறை யிருக்கட்டும். பெத்தவளுக்கு இறுதிச்சடங்கு செய்யாதது பெரிய பாவம். அது அவன் பிள்ளைகளையும் பாதிக்கும். அவங்கம்மா அவனப் பெத்து வளக்கும்போது அவன் பின் னாடி பார்ப்பான்னா ஒரு தாய் குழந்தைய வளர்க்கிறா” என்ற கேள்வியினை எழுப்பினாள்.

அந்தக் கேள்வி எனக்குள் பெரிய வேதனையைக் கிளப்பியது. உண்மைதான் தாய்மை என்பது எதையும் எதிர்பார்த்து வருவ தில்லை. அந்த தாய்மைக்காவது மதிப்புக் கொடுத்திருக்கலாம் மகன் என மனதில் ஓடியது. மத்தபடி பாவம் என்பதெல்லாம் நமது சடங்குமுறைகளில் சொல்லப்படுகிற வழக்கமாகும். மனிதன் தவறு செய்யக்கூடாது என்பதற்கான அச்சுறுத்தலாகும். இந்த அச்சுறுத்தல்தான் மனிதன் தவறு செய்யாமல் தடுப்பதற்கான வழிமுறையாக நம் முன்னோர் கடைப்பிடித்தனர். இந்த பயம் இருந்தவரைதான் மனிதன் மனிதனாக இருக்கிறான். இந்த பயம் எப்போது காணமல்போகிறதோ அங்கே மனிதனின் மிருக குணம் வெளிப்படுகிறது. பஞ்சவர்ணம் அத்தையின் மகனுக்குள் இருந்த மிருகம்தான் அவனைக் கொள்ளி போடவிடாமல் தடுத்திருக்கிறது.

❍❍❍




## நல்ல நேரத்தில் நடந்த நல்ல விடயம்

இந்தப் பத்தியை எழுதத்தொடங்கியபோது, இலங்கைவாழ் தமிழ்மக்களின் கவனத்தை ஈர்த்த ஒரு விடயமாக யாழ்ப்பாணம் செம்மணியில் இடம்பெற்ற அணையா விளக்குப் போராட்டமும், அதில் ஐ.நா. மனித உரிமை ஆணையாளர் வோல்கர் ரேர்க் வருகைதந்து கலந்துகொண்டமையும் அமைந்துள்ளது. பொருத்தமான நேரத்தில் ஒரு பொருத்தமான நிகழ்வு இடம்பெற்றமை வரவேற்புக்கு உரியது. மக்கள் தங்கள் வேதனைகளை வெளிப்படுத்தவும், ஆணையாளர் செம்மணிப் புதைகுழிகளை நேரடியாகப் பார்வையிடவும், மக்களின் உணர்வுகளை அவர் உணர்ந்துகொள்ளவும் நல்லதொரு வாய்ப்பு ஏற்பட்டுள்ளது. அவர் மனம் திறந்து பல விடயங்களை வெளிப்படுத்தியுள்ளார். அரசாங்கத்திடமும் உறுதியான நல்ல பல கருத்துகளை வலியுறுத்திச் சொல்லியுள்ளார். அரசைப் பொறுத்தவரை, வழக்கம் போலச் செவிடன் காதில் ஊதிய சங்காக இல்லாமல் இருந்தால் நல்லது.

அணையா விளக்கு நிகழ்ச்சியில், தாமும் இருக்கிறோம் என்று காட்டிக்கொள்ள வந்த மந்திரிபிரதானி உட்படச் சில அரசியல்வாதிகள்மீது, போராட்டத்தில் கலந்துகொண்ட மக்கள் தமது கடும் கோபத்தை வெளிப்படுத்தியுள்ளார்கள். கபட நாடகம் நடத்தும் அரசியல்வாதிகள் இனிமேலாவது மக்களின் உணர்வுகளை மதித்து நடந்துகொள்ளப் பழகவேண்டும். பழக்கதோஷம் அவர்களை விட்டு இலகுவில் விலகாது.

## ஒரு பேராளுமையின் மறைவு

பேராசிரியர் சி. தில்லைநாதன் காலமானார் என்ற செய்தி, அவரது உற்றார், உறவினர்களுக்கு மாத்திரமல்லாமல், அவரது நண்பர்களுக்கும், மாணவர்களுக்கும், அவரைத் தெரிந்தவர்களுக்கும் கவலையைத் தரும் ஒன்றாகவே அமைந்துவிட்டது. தமக்கெனத் தனி ஆளுமை கொண்டவராக அவர் விளங்கினார். கடமை தவறாமையும், நேரம் தவறாமையும் அவரது இயல்பான பண்புகளாக அமைந்தன.

நான் 1969இல் பேராதனைப் பல்கலைக் கழகத்தில் மாணவனாக உள்நுழைந்தபோது, அப்போதிருந்த தமிழ்த்துறை ஆசிரியர்களில் மூவர் என்னை மிகவும் கவர்ந்தனர். ஒருவர், பேராசிரியர் வி. செல்வநாயகம். மற்றவர், பேராசிரியர் வித்தியானந்தன். இன்னொருவர், பேராசிரியர் தில்லைநாதன். பல்கலைக் கழகத்தில் முதலாண்டு மாணவனாக நான் இருந்தபோது, இவர்கள் மூவரதும் முதல் வகுப்புகளே என்னைக் கவரத் தொடங்கின. இவர்கள் மூவரும் கற்பித்தலில் தமக்கெனத் தனிப்பாணி கொண்டவர்கள்.

பேராசிரியர் தில்லைநாதன் பல்கலைக் கழகத்தில் எனது முதலாம் ஆண்டிலே தமிழக, இலங்கைக் கவிதைகள் பற்றிக் கற்பித்தார். அவரது கற்பித்தல் எனக்குப் புதிய அனுபவத்தைத் தந்தது. அப்போது, பேராதனைப் பல்கலைக்கழகத் தமிழ்ச் சங்கம் நடத்திய கலைவிழாவில், அவரது தலைமையில் நடைபெற்ற கவியரங்கில் கலந்துகொண்டு கவிதை வாசித்தேன். நான் முதன்முதலில் கலந்துகொண்ட கவியரங்கு அதுவாகும். எனது இரண்டாம் ஆண்டிலே திறனாய்வு பற்றிக் கற்பித்தார். நான் திறனாய்வுத்துறையில் ஈடுபாடு கொள்வதற்கு, திறனாய்வு தொடர்பான அவரது கற்பித்தலும் உந்துசக்தியாக விளங்கியது. நான் பல்கலைக்கழக மாணவனாக இருந்த நான்கு ஆண்டுகளிலும் பல்துறை சார்ந்த பரந்த பார்வை பெற, எனது பல பல்கலைக்கழக ஆசிரியர்களோடு, அவரது கற்பித்தலும் உதவியது.

இரண்டாம் ஆண்டு மாணவனாக நான் இருந்தபோது, தமிழ் இலக்கிய மன்றம் என்ற புதிய சங்கம் ஒன்று தொடங்கப்பட்டது. அதன் தலைவராக நான் தெரிவுசெய்யப்பட்டேன். அப்போது அம்மன்றத்தின் சார்பில் ஒரு

நாடகத்தைத் தயாரித்து மேடையேற்றுவதென முடிவு செய்யப்பட்டது. நாடகம் எழுதும் பொறுப்பை நான் ஏற்றுக்கொண்டேன். சமுதாய விலங்கு என்னும் பெயரில் நான் எழுதிய அந் நாடகத்தைப் பேராசிரியர் தில்லைநாதனே இயக்கி மேடையேற்றினார். நாடக ஒத்திகை களின்போது பேராசிரியர் வித்தியானந்தனும் கலந்துகொண்டு குறைநிறைகளைத் தெரிவிப்பார். அந்த நாடகம் பல்கலைக்கழகப் பொறியியல்பீட மண்டபத்தில் மேடையேற்றப்பட்டபோது, பெரும் வரவேற்பைப் பெற்றது. அந்த நாடகத்தின் கதாநாயகனாகச் சிவபாதவிருதயர் என்ற மாணவர் நடித்தார். பின்னர், இலங்கையில் தயாரிக்கப்பட்ட தென்றலும் புயலும் என்ற திரைப்படத்தில் கதாநாயகனாக அவர் நடித்தார்.

நான் மாணவனாக இருந்த காலப்பகுதியில், பேராசிரியர் தில்லைநாதன் எழுதிய தகுதி, மானிடம் என்பது புல்லோ? ஆகிய இரண்டு நாடகங்கள், அவரால் இயக்கித் தயாரித்து மேடையேற்றப்பட்டன. இரண்டுமே சிறந்த நாடகங்கள். அவை எதிர்காலத்தில் நூல் வடிவம் பெறமுடிந்தால் நல்லது. நாடகத்துறையோடு, சினிமா தொடர்பான ஈடுபாடும் அவருக்கு இருந்தது.

பேராசிரியர் தில்லைநாதன் தமிழ்த்துறைத் தலைவராக இருந்த காலத்தில் 1980களின் முற்பகுதியில் சீன வானொலியின் தமிழ் அறிவிப்பாளர்களாக விளங்கிய இரண்டு சீன மாணவிகள், மேலும் தமது தமிழ் ஆற்றலைப் பெருக்கிக் கொள்ளுமுகமாகச் சீனத் தூதர கத்தின் மூலம் நமது தமிழ்த்துறைக்கு அனுப்பி வைக்கப்பட்டனர். அவர்களுக்குத் தமிழ்க்கவிதை கற்பிக்கும் பொறுப்பை அவர் எனக்குத் தந்தார். காலப்போக்கில் அவர்கள் தங்கள் பெயர்களையும் தமிழ்ப் பெயர்களாக மாற்றி, உலகப் புகழைப் பெற்றுக்கொண்டிருக்கிறார்கள்.

சிலவேளைகளில், அவருக்கும், எனக்கும் இடையே கருத்துவேறுபாடுகள் ஏற்படுவதும் உண்டு. ஆனால், அவை தற்காலிகமானவையே. பின்னர் காணும்பொழுது, ''எப்பிடி மனோகரன்?'' என்று அவர் கேட்பார். நானும் ''எப்பிடி சேர்?'' என்று கதைப்பேன். பேராசிரியர் தில்லைநாதனின் மணிவிழா 1987இல் கண்டியில் நடந்தபோது வெளியிடப்பட்ட அவரது மணிவிழா மலரில் நான் இரண்டு கட்டுரைகள் எழுதியிருந்தேன். 'பேராசிரியர் தில்லைநாதனின் விமர்சனப் பங்களிப்புகள்' என்ற கட்டுரையை எனது பெயரிலும், 'ஈழத்துத் தமிழ் நாடகத்துறையும் பேராசிரியர் தில்லைநாதனும்' என்னும் கட்டுரையை நவீனன் என்ற புனைபெயரிலும் எழுதினேன். வள்ளுவன் முதல் பாரதிதாசன் வரை, இலக்கியமும் சமுதாயமும், இலங்கைத் தமிழ் இலக்கியம், சோழர்கால அரசவை இலக்கியம், இலக்கியமும் பண்பாடும், நாவலர் நோக்கும் வாக்கும் ஆகிய அவரது நூல்கள் அவரது பெயரை என்றும் பதிவிடத்தக்கவை.

பேராதனைப் பல்கலைக்கழகத்தில் அண்மை யில் பேராசிரியர் தில்லைநாதனுக்கான அஞ்சலி நிகழ்வு, தமிழ்த்துறைத் தலைவர் பேராசிரியர் ஸ்ரீ.பிரசாந்தன் தலைமையில் நடைபெற்றது. பேராசிரியர் நுஃமானும், நானும் அஞ்சலி உரைகள் நிகழ்த்தினோம்.

**தமிழ்த்துறையின் ஒரு மாநாடு**

அண்மையில், பேராதனைப் பல்கலைக் கழகத் தமிழ்த்துறையில், அதன் 9ஆவது சர்வதேசத் தமிழியல் ஆய்வு மாநாடு நடை பெற்றது. தமிழ்த்துறைத் தலைவர் பேராசிரியர் ஸ்ரீ.பிரசாந்தன் தலைமையில் நடைபெற்ற இம் மாநாட்டில், பிரதம விருந்தினராகப் பல்கலைக் கழகத் துணைவேந்தர் பேராசிரியர் டெரன்ஸ் மதுஜித்தும், சிறப்பு விருந்தினர்களாகக் கலைப் பீடாதிபதி கலாநிதி பிரபாத் ஏக்க நாயக்கவும், தமிழ்நாடு ஏவிசி கல்லூரிப் பேராசிரியர் கி. இரா. சங்கரனும், யாழ்ப்பாணப் பல்கலைக்கழக இந்துகற்கைகள் பீடப் பீடாதிபதி திரு. சர்வேஸ் வரஐயர் பத்மநாபனும், கிழக்குப் பல்கலைக் கழகக் கலை கலாசாரபீடப்பீடாதிபதி கலாநிதி வ. குணபாலசிங்கமும் கலந்து சிறப்பித்தனர். ஆதாரசுருதியுரையைப் பேராசிரியர் வ. மகேஸ் வரன் நிகழ்த்தினார். கருத்தரங்க இணை ஒருங்கிணைப்பாளர் கலாநிதி எம். எம். ஜெய சீலன் நன்றியுரை வழங்கினார்.

மாநாட்டில் இடம்பெற்ற பேராசிரியர் கணநாத் ஒபயசேகர அரங்கு, பேராசிரியர் ம.மு. உவைஸ் அரங்கு, வண. சேவியர் தனிநாயகம் அடிகளார் அரங்கு ஆகியவற்றுக்கு, முறையே பேராசிரியர்கள் கி. இரா. சங்கரன், துரை. மனோகரன், எம். ஏ. நுஃமான் ஆகி யோர் தலைமை ஏற்றனர். இணையவழி அரங்காக இடம்பெற்ற பேராசிரியர் இரா. வை. கனகரத்தினம் அரங்குக்குத் தஞ்சாவூர் தமிழ்ப்பல்கலைக்கழக வளர்தமிழ்ப்புலப் பீடாதிபதி பேராசிரியர் இரா. குறிஞ்சிவேந்தன் தலைமை தாங்கினார். எல்லா அரங்குகளிலும் ஆய்வாளர்கள் ஆர்வத்துடன் பங்கேற்றனர்.




300 ஆவது இதழாக வெளிவந்த “ஞானம்“ மலைப்பை ஏற்படுத்தியது. சிறுகதைத் தொகுப்பாக வந்திருப்பதோடு, மற்றும் பல ஆக்கங்களையும் சுமந்து வந்துள்ளமை சிறப்பே. இந்த இதழுக்காக சிறுகதைகளை அனுப்பி வையுங்கள் என்று யாரிடமும் கேட்கவில்லை. வந்து குவியும் சிறுகதைகளிலிருந்தே அவற்றைத் தெரிவு செய்தோம் என்று சொன்ன ஆசிரியர் கருத்தில் சொக்கிப் போனேன். ஆம் ஞானத்தில் ஆக்கம் வெளிவருவது எழுத்தாளர்களுக்கான அங்கீகாரம் என்றே நாங்கள் நினைக்கிறோம். புதியவர்களையும் தட்டிக் கொடுப்பது வரவேற்கத்தக்கதே. ஞானம் பண்ணையில் வளரும் அவர்கள் நாளை சிறப்பான எழுத்தாளர்களாக மிளிர்வார்கள் என்பது திண்ணம். விசேட சிறுகதை மலரை கையிலெடுத்தபோது, அடடா எனது சிறுகதை ஒன்றையும் அனுப்ப முடியாமல் போய்விட்டதே என்ற என் ஆதங்கத்தையும் இங்கே பதிவு செய்ய விரும்புகிறேன்.

**– என். நஜ்முல் ஹுசைன்**

❍ ❍ ❍

ஞானம்! அடி என் செல்லமே! வெள்ளி விழா கண்டுவிட்டாயா? இதில் என்ன அதிசயம்? நூற்றாண்டு விழாக்கள் பல காண்பாய். வாழ்த்துகளடி. இறையருள் துணை நின்று உன்னை வாழ வைக்கும்.

**உன் வளர்ச்சி நாடும், யோகேஸ்வரி சிவப்பிரகாசம்**

❍ ❍ ❍

வெள்ளி விழா மலரென 25 சிறுகதைகளுடன் ஞானம் சஞ்சிகையின் 300ஆவது இதழ் பெற்றேன்.பவுனாக நிறைந்தது மனசு. வாழ்த்துகின்றேன்.

**– எஸ். ஜெகதீசன்**

❍ ❍ ❍

ஞானம் தனது கால் நூற்றாண்டு வெள்ளி விழா மலராக 25 சிறுகதைகள் அடங்கிய 300 ஆவது (மே-2025) இதழை வெளியிட்டு இருக்கிறது. மிக்க மகிழ்ச்சி. ஞானம் காலத்துக்கு காலம் சிறப்பிதழ்களை வெளியிட்டு வருவது பாராட்டுக்குரிய விடயமாகும் அவற்றை குறிப்பிட்டுச் சொல்ல களம் இடம்தராது.

உதாரணத்துக்கு புலம்பெயர் இலக்கியம் என்ற ஒரு இலக்கிய வகையை இலக்கிய உலகிற்கு தந்ததை மாத்திரம் இங்கு குறிப்பிடுகிறேன். இதழுக்காக தொடுக்கப்பட்ட சிறுகதைகள் அருமையானவை.

வழமையான அம்சங்களுடன் இதழில் இடம்பெற்றுள்ள ஆக்கங்கள் உள்நாட்டு வெளிநாட்டு படைப்பாளிகளின் படைப்புகள் இதழை அலங்கரிக்கின்றன.

மேலும், ஞானம் (ஜூன் - 2025) 301வது இதழும் கிடைத்தது மிக்க நன்றிகள் இந்த இதழிலும் உள்நாட்டு வெளிநாட்டு படைப்பாளிகளின் ஆக்கங்களும் கவிதை கட்டுரைகளும் இடம்பெற்றுள்ளன. தவிர, வெள்ளிவிழா ஞானம் சிறப்பு கட்டுரையாக வெளிவந்திருக்கும் மறைந்துபோன ஈழத்து புராணங்கள் என்ற தலைப்பில் ஞானம் பாலச்சந்திரன் அவர்கள் எழுதியுள்ள 25 நூல்களுக்கான குறிப்புகளையும் அறிமுகத்தையும் தந்திருக்கிறார். அவருக்கு நன்றிகள் ஏனைய படைப்பாளிகளுக்கும் வாழ்த்துக்கள்.

மேலும் இந்த இதழ் முதல் (301) உள்ளடக்க பக்கத்தை புதிய முறையில் வடிவமைத்திருப்பது வரவேற்கத்தக்கது. அத்தோடு இந்த இதழில் “ஸ்ரீ” யைச் சேர்த்து என்னை கௌரவப்படுத்தியிருப்பதற்கு நன்றிகள்.

**- ஸ்ரீ கலாபூஷணம் மாவனல்லை எம். எம். மன்ஸூர்.**

❍ ❍ ❍

ஞானம் 301 ஆவது இதழ் கிடைத்தது. வாசித்து மகிழ்ந்தேன்.

"நலன் பாரா சாரதிகள்" என்ற தலைப்புடன் வந்த ஞானம் ஆசிரியர் தலையங்கம், மக்கள் உயிர் மீது சாரதிகள் கவனம் கொள்ளவேண்டிய முக்கியத்துவத்தை வலியுறுத்தி இருந்தது.

அட்டைப்பட அதிதியாக பேராசிரியர் கலாநிதி கந்தையா ஸ்ரீகணேசன் அலங்கரித்திருந்தார். அவருடைய பல்துறை ஆற்றல்களை தொகுத்து வழங்கிய அகளங்கன் ஐயாவிற்கு நன்றி.

ஏழு சிறுகதைகள் இடம்பெற்றிருந்தன. யாவுமே வெவ்வேறு பொருள் கூறுகின்றன. நாடக ஆற்றுகை தொடர்பாக புதுமை சாதனைகள் படைத்த சி.மௌனகுரு ஐயாவின் சிறுகதை தத்தித்தத்தி நடக்க முயலும் ஒரு குழந்தை போல் உள்ளது.

அன்புள்ள பேராசிரியர் துரை மனோகரன் ஐயாவிடம் வினயமான சிறு வேண்டுகை.

"எழுதத்தூண்டும் எண்ணங்கள்" எனும் பத்தி பல தகவல்களைத் தருகின்றது. அவற்றினை ஆவலுடன் படிப்பவர்களில் நானும் ஒருவன். ஆனாலும், தாங்கள் எழுதிய பத்தியில் காணப்பட்ட வாக்கிய அமைப்பிலே இலக்கண மரபு சார்ந்த சில தவறுகளை இதில் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

- **ஓர் ஆய்வாளர்:** ஒரு, ஓர் என்பவை அ∴றிணை சொற்கள் முன்னேதான் வரும். அவற்றிலும், ஒரு என்பது உயிர்மெய் முன்னும் ஓர் என்பது உயிர் முன்னும் வரும். ஆனால், ஒரு, ஓர் உயர்திணை முன்னே வராது. இவை பொதுவிதி ஆகும். "ஓர் ஆய்வாளர்" என்பது "ஆய்வாளர் ஒருவர்" என்றுதான் எழுத வேண்டும்.
- **ஓர் உயர்சபையில்:** "உயர் சபை" என்பது ஒரு பொருள் (thing) அல்லது அ∴றிணை சொல் கிடையாது. இங்கே, "உயர்சபை ஒன்றில்" என்றுதான் எழுதவேண்டும்.
- **ஓர் உறுப்பினர்:** "உறுப்பினர்" என்பது உயர்திணை என்பதால், "உறுப்பினர் ஒருவர்" என்றுதான் எழுதவேண்டும். "ஒரு நல்ல நிகழ்வு" என்பது "நல்ல ஒரு நிகழ்வு" என்றுதான் எழுத வேண்டும்.

"நல்ல, கெட்ட, நன்றி, வணக்கம்" போன்ற சொற்கள் எண் பெறுமானத்தை ஒருபோதும் எடுக்காது. அட்சரகணிதத்தில் ஒ என்பதை "ஒரு ஒ" என உச்சரிப்பதில்லை". அதைப்போல் மேற்படி விடயங்களை கருதலாம். நன்றி

- **சமரபாகு சீனா உதயகுமார்**

○ ○ ○

## ஈழத்துத் தமிழ் நூல் வெளியீடுகளை ஊக்குவித்தல் – மீள் நினைவூட்டல் 2025



கொழும்புத் தமிழ்ச் சங்கமானது, ஈழத்துத் தமிழ் வெளியீட்டினை ஊக்குவிக்கும் முகமாக, வெளியிடப்படும் நூலின் பிரதிகள் 02 (இரண்டினை) உரியவரிடமிருந்து நேரடியாகப் பெற்றுக்கொள்ள முன்வந்துள்ளது. தங்களால் அனுப்பிவைக்கப்படும் வெளியீடுகள், சங்க நூலகத்தில் பேணப்படும் என்பதையும், வருட இறுதியில் நடாத்தப்படும் நூல் கண்காட்சியில் காட்சிப்படுத்தப்படும் என்பதனையும் அறியத்தருகின்றோம். இதற்கமைவாக 01.01.2025ம் திகதி தொடக்கம் ஈழத்தில் தமிழில் வெளியிடப்படும் நூல் பிரதிகள் இரண்டினை,

**இணைப்பாளர்,**
**நூல் ஊக்குவிப்புத் திட்டம் – 2025**
**கொழும்புத் தமிழ்ச் சங்கம்,**
**இல. 07. சங்கம் ஒழுங்கை, கொழும்பு – 06.**

எனும் முகவரிக்கு நேரடியாகவோ அல்லது பதிவுத் தபால் மூலமாகவோ அனுப்பி வைக்குமிடத்து அத்தகைய நூல்கள் பணம் கொடுத்துப் பெற்றுக் கொள்ளப்படும். அல்லது நூலின் பெறுமதி வங்கிக் கணக்குக்கு பணமாற்றம் செய்யப்படும்.

**கலாநிதி ஜெ.தற்பரன்**
பொதுச்செயலாளர்- கொழும்புத் தமிழ்ச் சங்கம்

# கிடைக்கப் பெற்றவை...




**மலையகம் (சமூக – பொருளாதார – அரசியல் பரிமாணங்கள்)**
**பேராசிரியர் எம். சின்னத்தம்பி**
**(2025)**

**தொகுப்பாசிரியர்கள் : இரா. ரமேஷ், பெ. சரவணகுமார்.**
மலையகம் சார்ந்த 17 கட்டுரைகள் இரு பகுதிகளாக உள்ளடக்கப்பட்டுள்ளன. ஏறக்குறைய 200 வருடகால வரலாற்றைக் கொண்ட இலங்கை மலையகம் சார்ந்த சமூக, பொருளாதார, அரசியல், தொழிற்சங்கம், கல்வி, பண்பாடு போன்ற பல்வேறு விடயங்களை பல்வேறு கோணங்களில் இக்கட்டுரைகள் அலசி ஆராய்கின்றன. வளர்ச்சிப் போக்கு கண்ணோட்டத்தில் ஆராய்ந்து, பிரச்சினைகளை வெளிக்கொண்டு வந்துள்ளதோடு, அவற்றிக்கான தீர்வுகள் எவ்வாறு அமையலாம் என்பதற்கான முன்மொழிவுகளையும் பொறிமுறைகளையும் கட்டுரைகளில் முன்வைத்துள்ளமை சிறப்பம்சமாகும். காலத்துக்கு தேவையான தொகுப்பு முயற்சி.

**அடையாளம் (கவிதைத் தொகுதி)**
**கலாநிதி செ. ஞானராசா**
**(2024)**
82 நவீன இலக்கிய வடிவ கவிதைகளை இந்நூல் உள்ளடக்கியுள்ளது. கடந்த 40 வருடங்களுக்கும் மேலாக கவிதை, சிறுவர் இலக்கியம், இளைஞர் இலக்கியம் ஆகிய இலக்கியச் செயற்பாடுகளில் ஞானராசா இயங்கி வருகிறார். அடையாளம் எனும் இக்கவிதைத் தொகுதி மூலம் சமய, சமூக, பண்பாட்டு, விழுமிய அடையாளங்களை வெளிக்கொண்டு வர முயற்சி செய்கிறார். அத்துடன் இவரின் கவிதைகளில் விழிப்புணர்வு இழையும், மாற்றங்கள் நிகழவேண்டும் எனும் ஆதங்கமும் தொனிப்பதை நன்கு அவதானிக்க முடிகிறது. ஆசிரியருக்கு அடையாளம் தரக்கூடிய முயற்சி.







**தமிழ் இலக்கண இலக்கியங்களில் திருநங்கையர்**
**கு. சின்னப்பன் (தமிழ்நாடு)**
**(2020)**
இதுவரை தமிழ் இலக்கண இலக்கிய ஆய்வுலகில் பரவலாக அறியப்படாத திருநங்கையர் பற்றியச் செய்திகளை இந்நூல் தொகுத்துத் தந்துள்ளது. தொல்காப்பியம் தொடங்கி நன்னூல், பன்னிருபாட்டியல் என்றவாறு பதினாறுக்கும் மேற்பட்ட இலக்கண நூல்களிலிருந்து அனைத்துத் தரவுகளையும் பேராசிரியர் கு. சின்னப்பன் தொகுத்துக் கூறியுள்ளார். பல நூற்றாண்டுகளாக திருநங்கையர்களின் உணர்வுகளையும், ஏக்கங்களையும் தமிழ் சமூகம் புறந்தள்ளி ஒதுக்கி வைத்துள்ளது, என்பதை பல்வேறு இலக்கண இலக்கியச் சான்றுகளின் வழியாக இந்நூல் நிறுவுகின்றது. தமிழ் ஆய்வுப்புலத்திற்கு புதிய பொருள்.

GNANAM - Registered in the Department of Post of Sri Lanka under No. DOP/News/16/2025

**உறைய மறுக்கும் காலம்: சேரன் படைப்புலகம் (பார்வைகள்– பதிவுகள்– ஆய்வுகள்) (2025)**

**தொகுப்பு: ஹரி ராசலெட்சுமி, எம்.பௌசர்**




ஐம்பதாண்டுகளுக்கும் மேலான கவிதா வாழ்வும், எழுத்தும் சேரனுடையது. அவரது கவிதையியல் குறித்து 1980கள் தொடங்கி 2024ஆம் வருடம் வரையிலான வெவ்வேறு காலங்களில் தமிழிலும் மலையாளத்திலும் ஆங்கிலத்திலும் முன்வைக்கப்பட்ட 26 ஆளுமை யாளர்களின் பதிவுகளின் தொகுப்பு இந்த நூலாகும். அத்துடன் சேரனின் ஒரு நேர்காணலையும் உள்ளடக்கி 460 பக்கங்களில் இந்நூல் அமைந்துள்ளது.

ஒரு படைப்பாளியின் படைப்புக் குறித்து வெளிவந்தவற்றை தொகுக்கும் போது, அந்தப் படைப்பாளி மட்டுமல்ல, அவரின் காலமும், இயங்கு தளமும், உள்ளீடுகளும், அக்காலத்தில் எழுதிய எழுத்தாளர்கள் - முன்னோடிகள் விபரங்களும் பதிவு செய்யப்பட்டுவிடுகின்றன. கடந்த ஐம்பதாண்டு காலத்தினை தெரிந்துகொள்ளவும் மதிப்பிடவும் இத்தொகுதி பயன்மிக்கது! சேரனின் முத்திரையை ஆழமாக வெளிப்படுத்தும் ஒரு நூலாக அமைகிறது எனலாம்.




**கதிர்காமத் திருமுருகன்**
**– பதுளை வ. ஞானபண்டிதன்**

**பதிப்பாசிரியர்:**
**செல்லத்துரை சுதர்சன்**
**(2024)**

இந்நூல் கதிர்காமத் தலத்தின் தொன்மை வரலாறு, காலனிய கால நிலவரம், நூல் எழுதிய காலச் சூழல் போன்றவற்றை வெளிச்சம் போட்டுக் காட்டுகிறது. பலரும் ஆராய்ந்து அறியத் தயங்கும் சட்ட மூலங்களிலிருந்து ஆராய்ந்து தகவல்களை வெளிப்படுத்தியுள்ளது. கதிர்காமத்தை தமிழர் பதி என்று துணிந்து நிறுவுகிறது.

9ஆம் பதிப்பாக வெளிவந்துள்ள இந்நூலுக்கு 80 பக்கங்களுக்கும் மேற்பட்ட ஓர் ஆய்வுப் பதிப்புரையை கலாநிதி செ. சுதர்சன் உள்ளடக்கியுள்ளார். இப்பதிப்புரை இந்நூலுக்கும், கதிர்காமப் பதிக்கும் சிறந்ததொரு நுழைவாயிலாக அமைந்துள்ளது. கதிர்காமம் தலம் பற்றி இனிவரும் ஆய்வுகளுக்கு இப்பதிப்புரை வலுவான பரந்த அத்திபாரத்தை வழங்கியுள்ளது எனத் துணிந்து கூறலாம்.

**இலங்கையின் பிராமி மற்றும் சிங்களக் கல்வெட்டுகளில் தமிழர்**

**கலாநிதி என். கே. எஸ். திருச்செல்வம் (2025)**

இலங்கையிலுள்ள காடு மலைகள் எல்லாம் சென்று பிராமி மற்றும் சிங்கள கல்வெட்டுகளை மீண்டும் வாசித்திருப் பதுடன் அவற்றில் இதுவரை காலமும் கண்டுகொள்ளப்படாத தமிழர் பற்றிய செய்திகளை ஆசிரியர் புது வெளிச்சம் போட்டுக் காட்டியுள்ளார். வரலாற்று நம்பகத்தன்மையுடைய கல்வெட்டுகளை மூலங்களாகக் கொண்டு இலங்கைத் தமிழருக்குத் தொன்மையான தொடர்ச்சியான வரலாறு உண்டு என்பதை ஆணித்தரமாக எடுத்துக்கூறும் முயற்சியாக இந்நூல் வெளிவந்துள்ளது. ஐந்து இயல்களில் அமைந்துள்ள இந்நூலில் ஒவ்வொரு கல்வெட்டுகளுக்கும் அருகாமையில் விளக்கம் தந்துள்ளமை வரவேற்கத்தக்கதாகும். கல்வெட்டில் பொறிக்கத் தகும் முயற்சி எனலாம்.




**கிடைக்கப் பெற்றவை...**

ISSN 2478-0340

PRINTED BY UNIE ARTS (PVT) LTD., COLOMBO 13. TEL: 011 2330195